
எச்சரிக்கை
பக்கம் 09


முயற்சி
பக்கம் 11


பதிலளிக்காது
பக்கம் 17


மகேல
பக்கம் 27



விலை 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 122

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 14 செவ்வாய்க்கிழமை (27/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# ஜெனிவா தீர்மானத்தை முற்றாக அரசு நிராகரிப்பு




## நவநீதம்பிள்ளையானாலும் அனுமதியின்றி தலையிட முடியாது என்றும் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு முற்றாக எதிர்க்கிறது. இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எத்தகைய புதிய வழிமுறைகளையும் அரசு ஏற்படுத்தாது. தொடர்ந்தும் தனது வழியிலேயே அரசு பயணிக்கும். சர்வதேச அழுத்தங்கள் அரசை ஒருபோதும் எந்த விதத்திலும் எந்தவேளையிலும் கட்டுப்படுத்த மாட்டா. எமது நாட்டு விடயங்களுக்குள் யாரும் எமது அனுமதி இன்றித் தலையிட முடியாது. அது ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் பொருந்தும். அனைத்தையும் கையாளும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு. எனவே ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் யாரும் பயப்படத் தேவையில்லை. இவ்வாறு ஜெனிவாத் தீர்மானம் தொடர்பான தனது நிலைப்பாட்டைத் 04

## பொருளாதாரத் தடை வராது

கொழும்பு, மார்ச் 27

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம், பாதுகாப்புச் சபையின் தீர்மானம் அல்ல. எனவே, எவரும் அது குறித்து அச்சப்படவோ அல்லது சந்தேகப்படவோ தேவையில்லை. பொருளாதாரத் தடையும் வராது என்று நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு ஏன் இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்து கடும் முயற்சியில் ஈடுபட்டது என நினைக்கின்றீர்களா? அது வேறொன்று மில்லை. எமது நாட்டுப் பிரச்சினைகளைச் சர்வதேச மயப்படுத்தப்படுவதை அனுமதிக்கமுடியாது. அதனால்தான் அதனைத் தடுத்து நிறுத்தி நாட்டின் இறையாண்மை, சுயாதீனத் தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கவே நாம் முயற்சித் தோம். பொருளாதாரத் தடை வரவே வராது. யாரும் அஞ்சத் தேவையில்லை. - என்றார். (த)

## குற்றங்களை மறைக்க தேர்தலுக்குத் திட்டம்

### எதிர்கொள்ளத் தயார் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 27

கடந்த காலங்களில் நாட்டினுள் தாம் இழைத்த குற்றங்கள் அனைத்தும் சர்வதேச அரங்கில் அம்பலமாகிவிடும் என்ற அச்சத்தில் அரசு தேர்தலொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் தேர்தலொன்று நடத்தப்படு 04

## ஹிலாரி – பீரிஸ் சந்திப்பு ஏப்ரலில்

கொழும்பு, மார்ச் 27

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டன் - இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் வாஷிங்டனில் 04

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசவேண்டிய கட்டாயத்தில் அரசு

### இப்படிச் சொல்கிறார் மாவை

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் இலங்கை அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கை அரசுடனான பேச்சுகள் மீள ஆரம்பிப்பது தொடர்பாகக் கேட்கப்பட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப் 04

## 'சாதாரண' பெறுபேறு வெளியானது வடக்கில் வேம்படி முன்னணியில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

நேற்று மாலை வரை கிடைத்த முடிவுகளின்படி யாழ்.மாவட்டத்தில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி முன்னிலையில் இருந்தது. 18 மாணவிகள் 9 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரியில் 15 பேர் '9ஏ' பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் தலா மூன்றுபேர் '9ஏ' பெறுபேறு பெற்றுள்ளனர்.

இதேவேளை, வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் 9 பேர் '9ஏ' பெறுபேறு பெற்றுச் 04

## பதவியைத் துறந்து இந்தியா பறந்தார் தொண்டமான்



கொழும்பு, மார்ச் 27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசிலிருந்து விலகுவதற்கான ராஜினாமா கடிதத்தை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று மாலை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளதாக அறியவந்தது. ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்த பின்னர் நேற்று இரவு அவர் இந்தியா பயணமானதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் இந்த ராஜினாமாவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான், தனது அமைச்சு பதவியிலிருந்தும் அரசில் இருந்தும் வெளியேறுவதாகத் தெரிவித்தே ஜனாதிபதிக்குக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தேசிய கால்நடைகள் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளரை நியமிப்பது தொடர்பில் எழுந்த முரண்பாடே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டாலும் இதற்குப் பின்னணியில் வேறு பல விடயங்கள் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இ.தொ.கா. இந்திய வம்சாவளி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி என்ற வகையில், 04

### பொன்சேகாவின் மனு ஒத்திவைப்பு

முதலாவது இராணுவ நீதிமன்றத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிற்போட்டுள்ளது. குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சரத் பொன்சேகா சிறையில் இருந்து நீதிமன்றிற்கு அழைத்து வரப்பட்டிருந்தார். மனு எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என நீதிமன்றம் அறிவித்தது.

### முன்னாள் போராளிகள் 384 பேர் விடுதலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின், 384 முன்னாள் உறுப்பினர்களை சமூகமயப்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் இவர்கள் சமூகமயப்படுத்தப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டார். விடுதலை செய்யப்படவுள்ளவர்களில் 67 பேர் முன்னாள் பெண் போராளிகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான வைபவம் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர்களிடம் கையளிக்கப்படவுள்ள இந்தக் குழுவினரில் மாணவ, மாணவியரும் அடங்குவர்.

### ஊடகங்களுடன் பேச வேண்டாம்

ஊடகங்களுக்குக் கருத்துக்கள் வெளியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்குப் பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்ககோன் உத்தரவிட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கு மாத்திரமே இதற்கான அனுமதியுண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார். தெற்கில் பொலிஸ் அலகொன்றை கலைப்பது தொடர்பாகப் பொலிஸ் அதிகாரிகள் பலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதைத் தொடர்ந்து பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

### அரச அதிபரின் பாதுகாப்பு வாகனம் விபத்து

யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு பாதுகாப்புக்காகப் பணியில் அமர்த்தப்பட்ட விசேட அதிரடிப் படையினரின் வாகனம் நேற்று மதியம் விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அச்சுவேலியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் சண்டிலிப்பாய் பிரதே செயலகத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது சங்குவேலியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வீதியில் இருந்து விலகி மூன்று நான்கு தடவைகள் தலைகீழாகப் புரண்டுள்ளது வாகனம். இதில் 6 பேர் பயணம் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூதரகங்களை மூடுவதற்கும் தீர்மானத்துக்கும் தொடர்பில்லை

மேற்குலக நாடுகள் சிலவற்றிலிருந்து தூதரகங்களை மூடும் தீர்மானத்துக்கும் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்தவாரம் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கும் தொடர்பில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேற்குலக நாடுகளிலுள்ள சில தூதரகங்களை ஆபிரிக்க நாடுகளுக்கு மாற்றும் தீர்மானம் ஜெனிவா பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தது என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரங்கள் சிலவற்றை மூடிவிட்டு, போலந்து, நெதர்லாந்து, ஆஸ்திரியா, நோர்வே, சுவீடன் நாடுகளுடனான விவகாரங்களை மேற்பார்வை செய்வதற்கு ஒரேயொரு தூதரகத்தை மாத்திரம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின. எனினும் பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதரகங்கள் தொடர்ந்தும் இருக்கும் எனவும் மூடப்படும் தூதரகங்களுக்குப் பதிலாக ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க, ஆசிய நாடுகளில் தூதரகங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறுகையில், 'எம்மிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வளங்களே உள்ளன. இவ்வளங்கள் வியூக முக்கியத்துவமுள்ள இடங்களுக்கு பகிரப்பட வேண்டும். உதாரணமாக ஆபிரிக்காவில் எமக்கு நான்கு தூதரகங்களே உள்ளன. எனவே அங்கு கவனம் செலுத்தப்பட வேண்டுமென நாம் கருதுகிறோம். இது ஜெனிவா பிரேரணைக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்' என்றார். (த)

## ஜெனிவா தீர்மானம் சுதந்திரக் கட்சி ஆராயும்

கொழும்பு, மார்ச் 27

ஜெனீவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கெதிரான பிரேரணை குறித்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழு ஆராயத் தீர்மானித்துள்ளது.

பிரேரணை தொடர்பில், மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற உள்ளது.

பிரேரணையை நடைமுறைப்படுத்தல் மற்றும் சர்வதேச அழுத்தங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கூட்டணிக் கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்படுகின்றது.

இதனால் பிரேரணை தொடர்பான நேற்றைய கூட்டம் மிகவும் முக்கியமானது என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

# பாதக விளைவுகள் ஏற்படக்கூடும்

### எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக



கொழும்பு,மார்ச் 27

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையால் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என பிரான்ஸுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரேரணைக்கு எதிராக 15 நாடுகள் வாக்களித்துள்ளதன் மூலம் அது உறுதிப்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணையால் எவ்விதமான பாதிப்புக்களும் ஏற்படாதெனவும், இலங்கைக்குச் சார்பானது எனவும் பலரும் தெரிவிப்பதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

அவ்வாறாயினும், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், ஈக்குவடோர் போன்ற நாடுகள் இதற்கு எதிராக ஏன் வாக்களித்தன என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இலங்கை போன்றதொரு நாட்டுக்கும், மனித உரிமைகள் சபைக்கும், சர்வதேசத்துக்கும் இதனால் பிரச்சினைகள் ஏற்படக் கூடாதென்ற காரணத்தினாலேயே குறித்த நாடுகள் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்ததாக அவர் மேலும் கூறினார்.

சர்வதேசத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களைக் குறைப்பதற்கு அரசு மியன்மாரை பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

முன்னர் மியன்மார் மீது சர்வதேச நாடுகளால் பெரியளவிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும், தற்போது அவ்வாறானதொரு நிலைமை காணப்படவில்லை எனவும், உள்நாட்டு ரீதியில் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளே இதற்கு முக்கிய காரணமாக அமைந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (த)



ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு இணங்க கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு போஷாக்கு உணவு வழங்கும் 'சிறிலியசவிய' சமூக நலத் திட்டம் ஒன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது. சிறிலியசவியவின் விஷேட நிகழ்வு ஒன்று அண்மையில் பெலியத்தை மற்றும் பெலிகல்ல வைத் தியசாலைகளில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு சிறப்பித்த ஜனாதிபதியின் பாரியார் போஷாக்கு உணவுப் பொதிகளை வழங்கினார்.

# இந்தியா ஆதரித்திருந்தால் முடிவே மாறியிருக்கும்

### மூத்த அமைச்சர்கள் புலம்பல்

கொழும்பு, மார்ச் 27

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தால் அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் தவிர்த்திருந்தால் முடிவு வேறு விதமாக அமைந்திருக்கும் என்று மூத்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வெற்றிகரமான இராஜதந்திர நடவடிக்கைகளின் மூலம் ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் பலர் தமக்கு ஆதரவளித்த போதும், பின்னர் பலமிக்க நாடுகளின் அழுத்தம் காரணமாக தம்மைக் கைவிட்டு விட்டதாகவும் அவர்கள் தமக்கு கூறியதாக அமைச்சர்களான தினேஸ் குணவர்த்தன, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் தினேஸ் குணவர்த்தன-

தீர்மானத்தின் முக்கியத்துவத்தை பாராமல், அரசியல் நோக்கங்களுக்காகவே பல நாடுகள் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஆதரித்தன. மோதலுக்குப் பின்னர் இலங்கை முன்னெடுத்திருக்கும் பல் வேறு அபிவிருத்திப் பணிகள் குறித்து தீர்மானத்தைக் கொண்டு வந்த அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை.

மனிதஉரிமைகளையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்ட இலங்கை அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள், நாட்டில் எடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றை, தீர்மானத்தை ஆதரித்த நாடுகள் கவனத்தில் கொள்ளவில்லை. இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவான நிலையை எடுத்திருக்காவிட்டால் அது வாக்கெடுப்பை சமப்படுத்தியிருக்கும்-என்றார்

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க,

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் தமது பொருளாதாரப் பலத் தைப் பயன்படுத்தி ஏனைய நாடுகளுக்கு எதிராக கொடுத்த அழுத்தம் காரணமாகவே பல நாடுகள் இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்க முடிவு செய்தன. இந்தியா வாக்கெடுப்பில் பங்கேற்றிருக்காது போனால், பல நாடுகள் இந்தியாவைப் பின்பற்றியிருக்கும்''- என்றார்.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கருத்து வெளியிடுகையில்,

''இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதுவிடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் நாட்டு மக்களுக்கு அது மகிழ்ச்சியைத் தரவில்லை.

இந்தச் செயற்பாடு அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் ஒட்சிசன் வழங்குவதைப் போன்றே அமைந்துள்ளது. இந்த விடயத்தில் இந்தியாவும் எங்களுக்கு ஒத்துழைக்க வில்லை. தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்து விட்டது.''- என்றார். (த)

## உயர் ஈரப்பதன் காரணமாகவே வெப்பம்

நாட்டில் கடும் வெப்பமான வானிலை காணப்படுவதற்கு பல மான காற்று இல்லாதிருப்பதும் வளிமண்டலத்தில் உயர் ஈரப்பதன் காணப்படுவதுமே காரணம் என்றும் ஆனால், வருடத்தின் இப்பகுதியில் இது வழமையான தோற்றப்பாடு தான் எனவும் வளிமண்டலவியல் பணிப்பாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார். 'காற்று மெதுவாகவே வீசுகிறது. பலமான காற்று இல்லை. கீழ் மட்டத் தில் வளிமண்டலம் ஈரமாக உள்ளது' என அவர் கூறினார்.

உடலிலிருந்து நீர் ஆவியாக வெளியேறும்போது உடல் குளிர்கின்றது. ஆனால் வளிமண்டலத்தில் ஈரப் பதன் அதிகமாக இருக்கும்போது இது நடைபெற்றது. இதுவே நாம் அதிக வெப்பத்தை உணர்வதற்கு காரண மாகும். இருப்பினும் வெப்ப நிலையில் அதிக அதிகரிப்பு காணப் படவில்லை. 30 பாகை சி 32 பாகை சிக்கு இடையில் வழமை போலவே உள்ளது என அவர் கூறினார்.

# சர்வதேசத்தை தொடர்ந்து ஏமாற்றினால் ரஷ்யா, சீனாவும் இலங்கையை கைவிடலாம்

### தீர்மானத்தை மதித்துச் செயற்படக் கோருகிறது கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 27

சீனாவும், ரஷ்யாவும் தமது பக்கம் உள்ளன என்ற மமதையில் இலங்கை அரசு தொடர்ந்தும் உலகை ஏமாற்றுமானால், ஒரு காலகட்டத்தில் அந்நாடுகளும் இலங்கையைக் கைவிடலாம். எனவே, ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்த்து இலங்கை அரசு அடம்பிடிக்காமல் செயற்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசுடன் பேசுவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். இருப்பினும், எமது நிலைப்பாட்டில் சிறிதளவேனும் மாற்றம் இல்லை என்றும் அது திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை ஏற்று உரிய நடவடிக்கைகளையாளமாட்டோம் நாம் தொடர்ந்து எமது பாதையி லேயே செல்வோம் என்றும், தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றும் இலங்கை அரசு நேற்று தெரிவித்திருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம்கேட்டபோதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் ஒரு விடயம் மட்டும் குறிப்பிடப்படவில்லை. வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள மேலதிக இராணுவத்தை அகற்றவேண்டும் என்பது உட்பட பல விடயங்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை அரசு செய்யவேண்டும். தீர்வு விடயமும் அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோரைக் கண்டுபிடிக்கும் வேலைத் திட்டத்தை அரசு முன்னெடுக்கவேண்டும் என்றும் ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அரசு இதுவரை ஒன்றையும் செய்யவில்லை.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தோர் தொடர்பான புள்ளிவிவரங்களை அரசு இன்னும் வெளியிடவில்லை. தமது பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைத்த பெற்றோர் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதுகூட தெரியாமல் தவிக்கின்றனர்.

இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்துமாறே ஜெனிவாத் தீர்மானம் வலியுறுத்தி நிற்கின்றது. எனவே, இந்தத்தீர்மானத்தை மதிக்காமல் அரசு அடம்பிடிக்குமானால் மென்மேலும் சர்வதேச அழுத்தங்கள் குவியும். - என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்பில் வெட்டப்படும் மண்ணை விற்பதற்குத் தடை

## பொதுத் தேவைகளுக்கு அது பயன்படுத்தப்படும்

*யாழ்ப்பாணம், மார்ச் 27*

***வீதி அகலிப்பின்போது வெட்டி எடுக்கப்படும் மண்ணை விற்பனை செய்ய முடியாது என வீதி அகலிப்பு வேலையை முன்னெடுத்து வரும் ஒப்பந்த நிறுவனத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் எந்திரி மோசஸ் மரியதாசன் தெரிவித்தார்.***

கோயில்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்களின் தேவைக்கே அந்த மண் பயன்படுத்தப்பட வேண்டும். வீட்டு உரிமையாளர்கள் அந்த மண்ணைக் கேட்குமிடத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தேவையை இனங்கண்டு அதனை வழங்குவார்கள் என மாகாணப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

வீதி அகலிப்பின்போது வெட்டி அகற்றப்படும் மண் தனியாருக்கு விற்பனை செய்யப்படுவதாகப் பொது மக்களால் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன. இந்த விடயம் தொடர்பாகக் கேட்டபோதே மாகாணப் பணிப்பாளர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மண்ணைத் தனியாருக்கு விற்பனை செய்ய முடியாது என வீதி அகலிப்புப் பணியை முன்னெடுத்துவரும் ஒப்பந்தகாரர் நிறுவனமான வி.வி.கருணாரட்ன அன் கம்பனிக்கு அறிவுறுத்தியுள்ளோம். வீதி அகலிப்பின்போது வெட்டி எடுக்கப்படும் மண்ணை அகற்ற வேண்டிய பொறுப்பும் அந்த ஒப்பந்த நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே தனியாருக்கு மண் விலைக்கு விற்கப்படுவதாகக் கூறப்பட்டு வருகிறது.

வீதி அகலிப்பில் வெட்டப்படும் மண் பொது இடங்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்பட வேண்டும். வீட்டு உரிமையாளர்கள் தமது வீட்டின் முன்னால் வெட்டிய மண்ணைக் கேட்டால் அவர்களுக்கு வழங்குவோம்.

ஆனால் மண் தேவைக்கான காரணம் சரியாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

**வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டப் பொறியியலாளர் எம்.எஸ். சிவனேசராசாவுடன் 021 222 2580 என்ற தொலைபேசி** மூலம் தொடர்புகொண்டு பொது இடங்களுக்கும் வீடுகளுக்கும் மண்ணைப் பெற்றுக்கொள்ள முடியும்

ஏற்கனவே கோயில்கள், பாடசாலைகள், பொது இடங்களுக்கு மண் வழங்கியிருக்கிறோம்.

வெட்டப்படும் மண் உரிய முறையில் மக்களுக்கு அதிருப்தி ஏற்படாத வகையில் பயன்படுத்தப்படும். இது தொடர்பாக மத்திய பொறியியல் சாத்துணைப் பணியக குடியியல் பொறியியலாளரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளோம்.- என்றார். (த-3)

## 50,000 இறாத்தல் பாண் யாழில் தினமும் விற்பனை

*யாழ்ப்பாணம்,மார்ச் 27*

*யாழ். மாவட்டத்தில் தினமும் சுமார் 50 ஆயிரம் இறாத்தல் பாண் மக்களால் நுகரப்படுவதாகத் தெரிய வருகிறது. மாவட்டத்திலுள்ள பேக்கரிச் சங்கங்களிடம் இருந்து பெறப்பட்ட புள்ளி விவரத் தரவுகள் மூலமே இது தெரியவந்துள்ளது.*

*யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகைப் பதிவுகளின் பிரகாரம் 6 லட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களாலேயே இந்த 50 ஆயிரம் இறாத்தல் பாண் நுகரப்படுகிறது.*

*கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இப்போது பாணின் நுகர்வில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகிறது. அதுமட்டுமன்றி கடந்த பெப்ரவரி மாதம் பாணின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதன் பின்னர் அதன் விற்பனையில் சுமார் ஆயிரம் இறாத்தல் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.*

*யாழ். மாவட்டத்தில் பேக்கரி உரிமையாளர் சங்கம், பேக்கரி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரண்டு சங்கங்களின் கீழ் சுமார் 65 பேக்கரிகள் பதிவில் உள்ளன. இந்த இரண்டு சங்கங்களின் கீழே பதிவில்லாத பேக்கரிகளும் இயங்கி வருகின்றன. இவை அனைத்தில் இருந்தும் உற்பத்தியாகும் பாணே இவ்வாறு விற்பனை செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*கால் நடைகளுக்கான தவிடு, பிண்ணாக்கு போன்ற கால்நடைத் தீவனங்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய கடந்த காலத்தில் கால் நடைகளின் தேவைகளுக்கும் பாண் நுகரப்பட்டு வந்தது. அதன் காரணமாக பாணின் நுகர்வு அதிகரித்திருந்தது.*

*ஆனால் தற்போது கால்நடைத் தீவனங்கள் தாராளமாகக் கிடைக்கப் பெறுவதாலும் பாணின் விலை அதிகரிக்கப்பட்டதாலும் அதன் நுகர்வில் வீழ்ச்சி காணப்படுகிறது. (த-03)*

## கொலைச் சந்தேக நபருக்குப் பிணை

யாழ்ப்பாணம், மார்ச் 27

மனைவியைத் திருவுபலகையால் தாக்கிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் யாழ். மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

பூநகரி, கிராஞ்சி, சிவபுரம் பகுதியில் கடந்த ஒக்ரோபர் 2ஆம் திகதி இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த கலையரசி என்பவரைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அவரது கணவரான துரைசிங்கம் தினேஷ்பாபு என்பவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நிதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவரைப் பிணையில் விடுவிக்கும்படி யாழ். மேல் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை நீதிமன்றுக்கு வந்த போது அதனைப் பரிசீலித்த நீதிபதி ஜே. விஸ்வநாதன், சந்தேக நபரை 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையிலும் விடுவித்தார். வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

(10-4)

## பண்ணைக் கடலுக்குள் பாய்ந்தது ஓட்டோ

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணத்திலிருந்து தீவகம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ ஒன்றுபாதையைவிட்டுவிலகி பண்ணைக்கடலுக்குள்பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை பண்ணைப் பாலத்துக்குச் சமீபமாக இடம்பெற்றது. எனினும் இந்த விபத்தின்போது ஓட்டோவில் பயணித்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் காலை தீவகம் நோக்கிப் பயணித்த இந்த ஓட்டோ பண்ணைப் பாலத்தைத் தாண்டி சிறிது தூரத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையால் கடலுக்குள் பாய்ந்தது. எனினும் ஓட்டோ தடம்புரளாமல் அப்படியே நின்றமையால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

அந்தவேளை இந்த ஓட்டோவில் இருவர் பயணித்தனர். விபத்து நடைபெற்ற சிறிது நேரத்தில் வீதியில் வந்தவர்கள் உடனடியாக இறங்கி ஓட்டோவில் இருந்தவர்களை மீட்டதுடன் ஓட்டோவையும் நீருக்கு வெளியே கொண்டுவந்தனர். (த-17)

## 70 வயது தாண்டியோருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.மாவட்டத்தில் வதியும் 70 வயதுக்கு மேற்பட்ட வறுமைக் கோட்டில் உள்ள முதியவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் அந்தந்தப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு ஊடாக வழங்கப்படவுள்ளது.

கடந்த வருட வரவு - செலவுத் திட்ட நிதி அறிக்கையில் குறிப்பிட்டபடி வறுமைக் கேட்டின் கீழ் உள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விவரங்களைத் திரட்டும் பணிகள் யாழ்.மாவட்ட அரச அதிபரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதியில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் விவரங்களை (பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கிராம அலுவலர் பிரிவு, ஓய்வூதியம் பெறுபவரா? இல்லையா? என்ற விவரங்களை) அனுப்பி வைக்குமாறு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலர்களையும் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார்.

(த-9)

## 'நொதேர்ன் பவரு'க்கு வந்த எரிபொருளில் கலப்படம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சுன்னாகம் 'நொதேர்ன் பவர்' மின் பிறப்பாக்கிகளுக்கு பவுசர் மூலம் எடுத்துவரப்பட்ட 33 ஆயிரம் லீற்றர் எரிபொருளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளதாகச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து எரிபொருள் எடுத்து வரப்பட்ட பவுசர் 'சீல்' வைக்கப்பட்டு சுன்னாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அந்த பவுசரிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத்தின் ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்த விடயம் தொடர்பாகச் சுன்னாகம் 'நொதேர்ன் பவர்' மின் உற்பத்தி நிலையக் கட்டுப்பாட்டுப் பிரிவுப் பொறுப்பதிகாரி அத்தப்பத்துவுடன் தொடர்புகொண்டு கேட்ட போது அவர் தெரிவித்தவை வருமாறு:

கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத்திலிருந்து எமக்கு 'போ்னஸ் ஒயில்' வழங்கப்பட்டு வருகிறது. 33 ஆயிரத்து 200 லீற்றர் கொள்ளளவு கொண்ட பவுசரில் இந்த எரிபொருள் எடுத்து வரப்பட்டது. அந்த பவுசரிலிருந்து மாதிரிகள் எடுத்துப் பரிசீலித்தபோது அதில் தண்ணீர் போன்ற பதார்த்தம் கலப்படம் செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது. உடனடியாக கொலன்னாவ எரிபொருள் களஞ்சியத்தின் உயர் அதிகாரிகளுக்குத் தகவல் வழங்கினோம். அவர்கள் நேரில் வந்து பவுசருக்குச் 'சீல்' வைத்துவிட்டு மாதிரிகளை இரசாயனப் பகுப்பாய்வுக்காக எடுத்துச் சென்றனர்-என்றார். (த-03)

## விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

மண்கும்பானில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி இரு அரச ஊழியர்கள் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வேலணைக் கல்வி வலயத்துக்குக் கடமைக்காகச் சென்ற முகாமைத்துவ உத்தியோகத்தர்களான அ.சயந்தன், செ.குணவர்சன் ஆகிய இருவரும் விபத்தில் சிக்கிக் காயங்களுக்குள்ளான நிலையில் வேலணை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இருவரும் ஒன்றாக மோட்டார் சைக்கிளில் வேலணைக்குச் சென்று கொண்டிருந்தபோது மண்கும்பான் கோயிலடிக்குச் சமீபமாக மாடொன்று வீதியின் குறுக்கே பாய்ந்ததில் மோட்டார் சைக்கிள் அதனுடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## ஆசிரியர் மீதான பயங்கரவாத வழக்கு குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

### உரிய நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்றார் நீதிபதி

யாழ்ப்பாணம், மார்ச் 27

கிளிநொச்சியிலுள்ள 'தூயவன்' பயிற்சிமுகாமில் பயிற்சி பெற்றார் என்று கூறி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கணிதபாட ஆசிரியர் மீதான குற்ற ஒப்புதல் வாக்குமூலம் யாழ். மேல் நீதிமன்றில் நிராகரிக்கப்பட்டது.

2003 யூலை மாதத்துக்கும் 2004 யூலை மாதத்துக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் குறித்த சந்தேகநபர் பயிற்சி பெற்றார் என்று கூறி 2009 மே 17 ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த சீவரத்தினம் பாலதயாகரன் (வயது-42) என்பவரே கைதுசெய்யப்பட்டார்.

இடமாற்றம் பெற்று கிளிநொச்சிக்குச் சென்று பணியாற்றிய அவர், இடம் பெயர்ந்து சென்றபோது கைது செய்யப்பட்டார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக இந்தச் சந்தேகநபர் மீதான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி ஜே. விஸ்வநாதன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது எதிரியிடமிருந்து பெறப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றஒப்புதல் வாக்குமூலம் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது பதிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்து நீதிபதி அதனை நிராகரித்தார்.

இந்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(10-4)

## நிகழ்வுகள்

**நாடக தின விழா**

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் ஏற்பாட்டில் உலக நாடக தின விழாவும் குழந்தை அரங்கக் குதூகலிப்பு விழாவும் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் காலை 9 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி என்.மரியசேவியர் அடிகளார் கலந்து கொள்வார். (த-14)

**செயலமர்வு**

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட அழகியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று மாங்குளம் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (த-4)

**கூட்டம்**

யாழ்.மாநகர சபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11வருடங்களுக்கு முன் நடந்த

## விமான விபத்துக்கு புலிகளின் ஏவுகணைத் தாக்குதலே காரணம்

கொழும்பு,மார்ச் 27

2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி அநுராதபுரம் - வீரவெவ பகுதியில் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தமை தொடர்பில் புதிய பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் இரு ரஷ்யப் பிரஜைகளை ஏற்றிச் சென்றபோதே குறித்த விமானம் விபத்துக்குள்ளாகி அதில் இருந்த அனைவரும் உயிரிழந்தனர்.

விமானத்தில்ஏற்பட்ட தொழிநுட்ப சிக்கலே விபத்துக்கான காரணம் என விசாரணைகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அண்மையில் தீவிரவாத தடுப்புப் பிரிவினரால் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி சந்தேகநபர்கள் இருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் விமான விபத்து குறித்து புதிய தகவல் வெளியாகியுள்ளது.

**தாக்குதலுக்கு பயன் படுத்தப் பட்ட ஏவுகணையின் பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.**

குறித்த விமானம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வில்பத்து வனப் பகுதியில் பதுங்கியிருந்து மேற்கொண்ட ஏவுகணை தாக்குதல் காரணமாகவே விழுந்து விபத்துக்குள்ளானதாக கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

தாக்குதலுக்கு பயன் படுத்தப்பட்ட ஏவுகணையின் பகுதிகள் மீட்கப் பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். இந்த விமான விபத்து தொடர்பான வழக்கு நேற்று அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேகநபர்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.(த)

## சாதாரண தர பெறுபேறு வெளியானது

01 சித்தியடைந்துள்ளனர். நேற்று உதயனுக்குக் கிடைத்த பெறுபேறுகளின் விவரங்கள் வருமாறு:

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் தமிழ் மொழி மூலமாகத் தோற்றி '9ஏ' பெற்றவர்கள்:

ரா.தாட்சாயினி, தி.கஜீபா, ப.கோபிகா, ம.மயூரவாணி, ஜெ.ஜனனி, லோ.லக்ஷனா, க.சுபேகா, கா.சௌஜா, அ.தனுஜா, தே. தேவிகா, ப.விசாகாஜா, சோ.அபி ராமி, து.துவாரகா, த.வைஷ்ணவி.

ஆங்கில மொழி மூலமாகத் தோற்றி '9ஏ' பெற்றவர்கள்:

அ.அனோஷா, ச.திலக்சி, ச.சாரங்கா, ஜெ.சர்மிஜா.

தமிழ்மொழி மூலம் '8ஏ, பி' பெற்றவர்கள்: கு.டிலானி, க.புவஸ்ரியா, கி.கௌதமி, ரா.ஜானகி, தி.நர்மதா, தி.பிரணவி, சி.சசிலா, ச.தர்சிகா, ஸ்ரீ.வைஷ்ணவி, வ.சங்கீதா.

ஆங்கிலமொழி மூலம் '8ஏ,பி' பெறுபேறு பெற்றவர்: செ.காஞ்சனா.

'8ஏ.சி.' பெறுபேறு பெற்றவர்கள்: த.செந்தாளன், சி.சுஜீவன், சி.அனுராஜ்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் '9ஏ.' பெறுபேறு பெற்றவர்கள்: இ.சாலுஜா, லோ.வேணிகா, வி.தட்சாயினி.

'8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: க.கிர்சிகா, கு.மதுஷா, ம.மிரோசன், பா.ஐங்கரன்.

ஆங்கில மொழி மூலமாக '8 ஏ.சி.' பெறுபேறுகள் பெற்றவர்: சு.சிவானுஜன்.

தமிழ்மொழி மூலமாக '8 ஏ.எஸ்.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: ரா.மோகன்ராஜ், பி.சயந்தன், அ.தயானந்தன்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர், ஆங்கில மொழி மூலமாக: மு.ஆத்மிகா, தமிழ் மொழி மூலமாக: பா.கௌசனா.

தமிழ்மொழி மூலமாக '8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: ச.மதுசா, க.கிருஷிகா, இ.சுஜவாந்தி, செ.நிர்ஷிகா.

'8 ஏ.சி.' பெறுபேறுகள் பெற்றவர்: ஆ.மேர்சி ஞானரூபி.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் '9 ஏ' பெறுபேறுகள் பெற்றவர்: கி.மாதங்கி. '8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: கி.மாதுளா, நி.சாமந்தி, ஸ்ரீ.திவாகரன்.

வடமராட்சி ஹாட்லிக் கல்லூரியில் '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர் கபிலன், '8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்: கோகுலன், '8ஏ.சி.' பெறுபேறுகள் பெற்வர்கள்: வைகுந்தன், மாலோசன், '8 ஏ.டி.' பெறுபேறுகள் பெற்றவர்: சிந்துஜன்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் '9 ஏ.' பெறுபேறு பெற்றவர்: கே.கௌசிகன், '8 ஏ.சி.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: இ.ஜனார்த்தனன் மற்றும் து.மேதுஷா.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர்: சி.சசிக்குமார், '8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்: கி.கோபிதா.

தமிழ் மொழி மூலமாக '8 ஏ.எஸ்.' பெறுபேறுகள் பெற்றவர்: பி.தினுஷா.

யாழ். இந்துக்கல்லூரியில் தமிழ் மொழி மூலமாக '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: ஜே.ஆரூரன், மு.அனுஜன், எஸ்.கேதாரன், ஜே.லோகபாணன், எஸ்.சஞ்ஜீவன், கே.சிதபரபாணன், எஸ்.சிவசங்கர், மி.துமிலன், ந.நிறோஜன், தி.ஜதுர்ஷன், ப.பிரதீஸ்.

ஆங்கில மொழி மூலமாக: '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: சி.அச்சுதன், பி.குணவரன், கு.கௌசிகார், பா.சங்கீர்த்தன். இக்கல்லூரியில் 35 பேர் '8 ஏ.' பெறுபேறுகள் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் '9 ஏ.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: ஞா.விது சன், உ.உமாசுதன், பி.பிறே மிசா.

'8 ஏ.பி.' பெறுபேறுகள் பெற்றவர்கள்: ஸ்ரீ.கிரீடி, பொ.கஸ்ரோ, பா.அஜீபன், ஸ்ரீ.துளசிகரன், ர.ஆராதனா.

(உ-4-5-14-15-16)

## பதவியைத் துறந்து இந்தியா பறந்தார் தொண்டமான்

01 இந்திய அரசின்விருப்பு வெறுப்பின் பிரகாரமே ஆளுங்கட்சியில் இணைந்திருப்பது அல்லது எதிர்க்கட்சியில் அமர்வது போன்ற தீர்மானங்களை எடுப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை மீதான ஜெனிவா தீர்மானத்தின் பின் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் இராஜதந்திர முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் ஆளுங் கட்சியிலிருந்து இ.தொ.கா. விலகியுள்ளமைக்கும் இந்திய நிலைப்பாடுகளுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (த)

## ஹிலாரி – பீரிஸ் சந்திப்பு ஏப்ரலில்

01 நடைபெறவுள்ளது. இதற்காக ஏப்ரல் முதல் வாரத்தில் அமெரிக்கா பயணமாகிறார் பீரிஸ்.

இதுகுறித்து அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தெரிவித்ததாவது:

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்தித்துப் பேச்சு நடத்தும்போது எமது நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்தப்படும். மேற்குலகம் இன்று வேறு நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகின்றது. அந்த நடவடிக்கை நல்லதல்ல. இதுகுறித்து ஹிலாரியுடனான சந்திப்பில் தெளிவுபடுத்துவேன். சந்திப்புக்காக ஏப்ரலில் அங்கு பயணமாகிறேன். - என்றார் பீரிஸ்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசவேண்டிய கட்டாயத்தில் அரசு

01 படுத்துமாறே, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வலியுறுத்துகின்றது.

இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவதை ஐ.நாவின் மனித உரிமைகள் கண்காணிப்பாளர்கள் அவதானித்துக் கொண்டிருப்பர்.

மேலும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது, அதிகார பரவலாக்கம் போன்ற விடயங்கள் குறிப்பிடப்படிருப்பதால் அதனை நிறைவேற்ற வேண்டிய தேவை ஐ.நா. தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு எழுந்துள்ளது.

எனவே மேற்படி சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அரசின் பேச்சுக்கான திகதியை எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (த-5)

## குற்றங்களை மறைக்க தேர்தலுக்குத் திட்டம்

01 மாயின் அதற்குத் நாம் தயாராக உள்ளோம் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்தது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டும் அது தொடர்பிலான தெளிவானதொரு நிலைப்பாட்டை அரசு இதுவரையில் அறிவிக்கவில்லை. தொடர்ந்தும் அரங்கேற்றப்பட்டு வருகின்ற அரசின் இரட்டை வேடத்தால் நாடு மீளமுடியாத படுபாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டிய ஐ.தே.கட்சியின் பதுளை மாவட்ட எம்.பி. ஹரின் பெர்னாண்டோ, அரசின் சண்டித்தனங்கள் நாட்டின் இராஜதந்திர கொள்கைகளுக்குப் பொருந்தா எனவும் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் அநாகரிகமான முறையில் அரசால் அரங்கேற்றப்பட்டு வருகின்ற அராஜகங்களுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை முடக்கி, அவர்களின் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்வதற்காகத் தேசப்பற்று என்ற துரும்புச்சீட்டை அரசு கையாளுகின்றது.

அரசின் அராஜக செயல்கள் குறித்து நாட்டு மக்கள் நன்கு அவதானத்துடனேயே உள்ளனர். அரசிற்கு எதிரான அழுத்தங்கள் நாட்டினுள்ளும், சர்வதேசத்திலிருந்தும் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையிலும், அரசு தனது அராஜகங்களைக் கைவிடாது தொடர்ந்தும் மூளையற்ற முட்டாள்கள் போல செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதில் இனியும் அரசு தனது அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருமானால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் நமக்குப் பேரபாயம் காத்தி ருக்கின்றது என்பது நிச்சயம். - என்றார்.

# ஜெனிவா தீர்மானத்தை அரசு முற்றாக நிராகரிப்பு

01 தெளிவாக அறிவித்தது இலங்கை அரசு.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரின்போது அரசு முன்னெடுத்த நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தும் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக்காலை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, ஜி.எல். பீரிஸ், நிமால் சிறிபாலடி சில்வா, ரவூப் ஹக்கீம் இலங்கை அரசின் நிலைப்பாட்டைக் கூட்டாகத் தெளிவுபடுத்தினர்.

ஜெனிவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்வதற்குத் தாம் கையாண்ட மூன்று வழிமுறைகள் என்னவென்பது குறித்தும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெளிவுபடுத்திய இலங்கை அரசு, எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளித்தது.

இலங்கைக்கு ஆதரவளிக்க இருந்தபோதிலும் அதிஉச்ச அழுத்தம் காரணமாகவே எட்டு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை எனக் குறிப்பிட்ட அரசு, இந்தியாவைத் தவிர, ஒட்டுமொத்த ஆசியாவும் தமது பக்கமே இருந்தது என்றும் பெருமித மடைந்தது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்,

''ஜெனிவா மாநாட்டில் எத்தகைய முடிவு வந்தாலும் அதனை ஏற்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்தே நாம் பிரசாரப் பணிகளை முன்னெடுத்தோம்.

எமது நிலைப்பாட்டைப் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொண்டன. இருப்பினும், அதி உச்ச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதன் காரணமாகவே பிரேரணை நிறைவேற்றப்பட்டது. - என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் பிரசார வழிமுறைகளை அதாவது ஆதரவு திரட்டும் நடவடிக்கைகளை மூன்று வழிமுறைகளைப் பின்பற்றிக் கையாண்டோம். கொழும்பிலிருந்தவாறு பிரசாரத்தை முன்னெடுத்தது முதல் வழிமுறையாகும். ஜெனிவா சென்று நடவடிக்கைகளைக் கையாண்டது இரண்டாவது வழிமுறையாகும். அத்துடன், தலைநகரங்களுக்குச் சென்று நிலைமைகளைத் தெளிவுபடுத்தி ஆதரவைத் திரட்டியது மூன்றாம் கட்டமாகும்.

எமது இராஜதந்திர வழிமுறை சிறந்தமுறையில் அமைந்தது என்றே குறிப்பிடவேண்டும். ஏனெனில், மேற்குலகைச் சார்ந்த சவூதி, கட்டார், குவைத் ஆகிய நாடுகள்கூட பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன. அதுமட்டுமன்றி, ஆபிரிக்க நாடுகளும் எமக்குப் பக்கபலமாக இருந்தன. நாம் இவ்வாறான நடவடிக்கைகளை கையாண்டிருக்காவிட்டால் நிலைமை இன்னும் மோசமடைந்திருக்கும்.

நாம் ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்து அந்நாட்டின் அரச தலைவர்களுடன் பேசியபோது அவர்கள் எமது நிலைப்பாட்டை ஏற்றனர். உகண்டா, கொங்கோ உள்ளிட்ட மூன்று ஆபிரிக்க நாடுகள் எமக்கு ஆதரவை வழங்கும் நிலைப்பாட்டை எடுத்து இறுதிவரை உறுதியாக இருந்தன. மேலும் 5 ஆபிரிக்க நாடுகள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 11 ஆபிரிக்க நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவின் முடிவு சரியோ, தவறோ இரு நாடுகளுக்குமிடையிலான உறவைப் பாதிக்காது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இந்தியாவின் அரசியல் நிலைமைகள், அந்நாடு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஆகியவை குறித்து நாம் நன்கு அறிந்துவைத்துள்ளோம். - என்றார்.

மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் மஹிந்த சமரசிங்க,

''ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் எமது உடன்பாடின்றி இலங்கையின் விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் யாருக்கும் இல்லை. இது மனித உரிமை ஆணையாளருக்கும் பொருந்தும் '' - எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

போரின் பின்னரான காலத்தில் நாங்கள் பல்வேறு விதமான முன்னேற்றத்தை வெளிக்காட்டியுள்ளோம். அது போன்று எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னேற்றங்களை வெளிக்காட்ட நடவடிக்கைகளை எடுப்போம்.

முக்கியமாக நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் வேலைத் திட்டங்களை எமது அரசு முன்னெடுக்கும். குறிப்பாக இலங்கைக்கு எதிரான பிரேரணை சபையில் சமர்ப்பிக்கப்பட முன்னர் நான் அங்கு உரையாற்றியிருந்தேன்.

நான் அன்று நிகழ்த்திய உரையுடன் இந்தப் பிரேரணையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. காரணம் எனது அந்த உரையில் நாங்கள் எவ்வாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்போகின்றோம் என்பது குறித்து விரிவாக விளக்கியிருந்தேன். -என் றார்.

அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் இதே கருத்தையே வலியுறுத்தினர். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடை முறைப்படுத்த முடியாது என சிறிபால டி சில்வா தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஜெனிவாத் தீர்மானத்தின் வழிச்செல்வதில் தயக்கம் ஏன்?

எங்கள் நாட்டை நோக்கி எத்தனை சவால்களும் வரட்டும், பரவாயில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தும் போது, நாட்டின் ஒற்றையாட்சி முறையையும் தேசிய ஒற்றுமையையும் பேண வேண்டும் என்ற விசேடத்துவமான பரிந்துரைகளை மட்டுமே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.--

நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகள், ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவின் பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட சகல அம்சங்களும் செயலாக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றன. அது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல.--

இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளனர், மல்வத்த மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் அனுநாயக்கர்களான, வண.புஷ்பா நியங்கொட தேரரும், வண.ஸ்ரீவிஜிதாசிறி தேரரும்.

மக்களில் பெரும்பான்மையினரின் கருத்தை எவரும் மீறி செயற்பட அனுமதிக்க முடியாது. ஜெனிவாத் தீர்மானங்கள் குறித்து நாடளாவிய ரீதியில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கருத்துக்கள் பரிமாறப்பட வேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் எவற்றை நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து மக்களிடையே சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் - என்றும் அனுநாயக்கர்கள் அழுத்திக் கூறியுள்ளனர்.

ஜெனிவாத் தீர்மானம் குறித்து தெற்கின் அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள் தெரிவித்து வரும் நிலைப்பாடுகள் மத்தியில் பௌத்த மதபீடங்களின் கருத்துகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவற்றுக்கிடையே, அமைச்சர்கள் சிலரின் கருத்துக்களும் கவனத்தை ஈர்க்கின்றன.

உலகப் பொருளாதாரத்தின் அச்சாணி ஐரோப்பாவே என்ற நிலைப்பாட்டிலிருந்து விடுபட வேண்டும். எப்போதும் மேற்குலக வர்த்தகச் சந்தையை நம்பியிருப்பதாலேயே இப்போதைய நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வேளையிலும் தமது நிபந்தனைகளை ஏற்காவிடில் ஜி.எஸ்.பி.+ சலுகையை நிறுத்தப் போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எம்மை அச்சுறுத்தியது. அப்போதும் அரசு பொருளாதார இலாபத்துக்காக நாட்டைக் காட்டிக்கொடுக்கவில்லை அதேபோன்று ஜெனிவாத் தீர்மானத்தின் போதும், மேற்குலகு எம்மை அடிபணிய வைக்க முயன்றது. நாம் தளர்ந்து விடாது எமது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்கவில்லை.- என்று பொருளாதார, அபிவிருத்தித் துறை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

பதில் வெளிநாட்டமைச்சரும் மூத்த இடதுசாரித் தலைவருமான டியு குணசேகரா இன்னொரு படி உயரச் சென்று, வெளித் தரப்புகளால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வு யோசனைகளை எமது நாட்டில் நடைமுறைப்படுத்த இடமளிக்க முடியாது என்று கர்ச்சித்துள்ளார்.

அமெரிக்க உற்பத்திப் பொருள்களைப் பகிஷ்கரிக்குமாறு உரத்த குரலில் கடந்த பல நாள்களாகக் கூறிவந்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, இப்போது, இரணவிலவில் உள்ள அமெரிக்காவின் குரல் (Voice of America) ஒலிபரப்பு பரிவர்த்தனை நிலையத்தை மூடுமாறு அரசைக் கோருகிறார்.

அதே பாணியில், இந்தியாவுக்குப் பொருளாதார வாய்ப்புகளை வழங்குவதை நிறுத்துமாறு, ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிச் செயலாளரும் மகாண சபைகள் அமைச்சருமான உதய ஹம்மன்வில சீறியுள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட நிலைப்பாடுகள், வற்புறுத்தல்களுக்கு குஞ்சம் கட்டியது போன்று, இது விவகாரத்தில் நாட்டு மக்கள் அரசாங்கத்தையே ஆதரிக்கிறார்கள் என்பதனைச் சர்வதேச சமூகத்துக்கு எடுத்தியம்புவதற்காக, நிரூபித்துக் காட்டுவதற்காக, திடீர் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்பொருட்டு, அரச தரப்புக்கு 95 சதவீதம் ஆதரவுள்ள சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்குப் புதிதாகத் தேர்தல்களை நடத்துவது குறித்து அரசாங்க உயர்மட்டம் மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் சொல்லப்படுகிறது. மாகாண சபைகளைக் கலைக்கக்கூடிய சர்வ அதிகாரங்களும் நிறைவேற்று ஜனாதிபதிக்கு உண்டென்பதும் குறிப்பிடத் தக்கது.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களில், அரசு வெற்றி பெறும் கையோடு பொதுத் தேர்தலை நடத்துவது குறித்தும் ஆளும் தரப்பு தமக்குள் ஆராய்ந்து வருவதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

இவற்றை ஊர்ஜிதம் செய்வதற்கான சைகையாக, ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் குறித்து, நாட்டு மக்களிடம் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று அமைச்சர் விமல் வீரவன்ஸவின் கட்சி வலியுறுத்தியுள்ளது. அது குறித்து ஊடகவியலாளர் மாநாட்டிலும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய நிலைப்பாடுகளுக்கு மத்தியில், மஹிந்த அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறையும், போர் வெற்றியின் மமதையும் சேர்த்தே சர்வதேசத்தின் முன்னால் இலங்கையைத் தலைகுனிய வைத்துள்ளது என்று இடதுசாரிகளில் ஒரு தரப்பினர் சாடுகிறார்கள்.

எப்படியோ, சர்வதேச அமைப்பான, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மதிப்பளிக்காமல், அதனைக் காலால் மிதிக்கும் போக்கில் செயற்படுவதால் இலங்கை அரசுக்கு ஆக்கபூர்வமான பெறுபேறு எதுவும் கைக்கு வரப்போவதில்லை.

இத்தனைக்கும், இலங்கை ஜனாதிபதியால், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால், பரிந்துரை செய்யப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துமாறே, ஜெனிவாத் தீர்மானம் கோருகிறது.

அவற்றில் எல்லாவற்றையும் உடனடியாக நிறைவேற்ற முடியாத பட்சத்தில், ஒரு வருட காலத்துக்குள் நல்லிணக்க முயற்சிகளை- அதற்கான நடவடிக்கைகளை - மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு மனங்கொள்ளாமல் முரண்டு பிடிப்பதால், ஐக்கிய நாடுகள் சபைக்கு மதிப்பளிக்க இலங்கை அரசு பின்னடிக்கிறது என்ற பதிவே உருவாகும். அது ராஜீக உறவுகள் மற்றும் முறைமை சார்ந்த பல சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உண்டாக்கும்.

ஜெனிவாத் தீர்மானத்தைப் புறக்கணித்து இலங்கை அரசு செயற்பட்டால், முற்பகல் செய்தால் பிற்பகல் விளையும் என்ற முதுமொழிக்கு ஏற்ப, இலங்கையின் சர்வதேச உறவுகள் நலிவடைந்து நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய, கிடைக்கவேண்டிய அனுகூலங்கள் தேய்ந்து, அற்றுப்போகும் மிகவும் பாதமான நிலையே தலையெடுக்கும். அத்தகைய பாதிப்புகள் ஒரு தடவையுடன் தணிந்து விடும் என்று நினைப்பது தப்பிதம். தணிந்து விட்டால் அதனைச் சீர்செய்வது இலகுவானதல்ல. மரம் முறிந்து வீழ்ந்தால் அதனைப் பொருத்தி, நிறுத்தி வானுயர வளரச் செய்ய முடியுமா? அதற்குப் பதிலாகப் புதிதாக விதையிட்டு வளர்த்தெடுக்க மிக அதிக காலம், பல வருடங்கள் தேவைப்படும்.

# சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வு தேசிய நிகழ்வு வவுனியாவில்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வு, அகற்றல் தினத்தை முன்னிட்டு தேசியளவிலான நிகழ்வுகள் வவுனியாவில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடத்தப்படவுள்ளதாக, யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

சர்வதேச மிதிவெடி விழிப்புணர்வு, அகற்றல் தினம் ஏப்ரல் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்த வருடம் இதனைத் தேசிய அளவில் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இம்முறை தேசிய மிதிவெடி விழிப்புணர்வு, அகற்றல் தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினமே மிதிவெடி விழிப்புணர்வு, அகற்றல் தொடர்பான கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்த நிகழ்வில் மிதிவெடி விழிப்புணர்வு மற்றும் அகற்றல் தொடர்பான கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ்.சார்ள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை மாவட்ட மட்டத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரையில் மிதிவெடி விழிப்புணர்வு, ஆற்றல் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது - என்றார். (த-5)

# இந்த வருட நடுப்பகுதியில் பாரிய பொருளாதாரச் சரிவு

கொழும்பு,மார்ச் 27

இந்த ஆண்டின் நடுப்பகுதியில் எச்.எஸ்.பீ.சீ வங்கிக்குச் செலுத்தப் பட வேண்டியுள்ள 500 மில்லியன் டொலர்களினாலும், ஈரான் மீதான தடைகள் காரணமாகவும் நாட்டின் பொருளாதாரம் மீளக்கட்டியெழுப்ப முடியாத அளவுக்குச் சரியும் எனப் பொருளாதாரம் நிபுணரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர் வரும் ஒக்ரோபர் மாதத்தில் எச்.எஸ்.பீ.சீ. வங்கிக்கு செலுத்தப் பட வேண்டியுள்ள கடன், ஈரான் மீதான தடைவிதிப்புக்கள் காரணமாகச் சுத்திரிக்கப்பட்ட எண்ணெய்யை வேறு நாடுகளிடமிருந்து இலங்கை இறக்குமதி செய்ய வேண்டி நேரும் எனவும் எமது நாட்டுத் தேயிலையை ஈரானுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது போகும் எனவும் இதனால் பாரிய பொருளாதாரச் சரிவு ஒன்று ஏற்படும் எனவும் குறிப் பிட்டுள்ளார். அமெரிக்காவுடன் சுமுகமாக - இராஜதந்திர ரீதியில் செயற்படாதமை காரணமாக ஈரான் மீதான தடைவிதிப்புக்க ளால் எந்தவொரு நிவாரணச் சலுகையும் இலங்கைக்கு கிடைக்காது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த-22)

# மின்சாரத்தை சிக்கனமாக பாவிப்போருக்கு சலுகை

கொழும்பு,மார்ச் 27

எரிசக்தியைச் சேமிக்கும் செயற்திட்டத்தை முறையாகக் கடைப் பிடிக்கும் வீட்டு மின் பாவனையாளர்களின் மின் கட்டணப் பட்டியலுக்கு விசேட சலுகையொன்றை வழங்குவதற்கு எரிசக்தி, மின்சக்தி, அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க திட்டமிட்டுள்ளார்.

மின்சாரம் அதிகளவில் செலவாகும் மாலை 6.30 மணியிலிருந்து இரவு 9.30 மணி வரையான காலத்தில் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்கும் பாவனையாளர்களுக்கு விசேட சலுகையொன்று வழங்கப் படவுள்ளது.

இவர்களுக்கு வழங்கப்படவுள்ள சலுகைகள் தொடர்பாக இனிவரும் நாள்களில் மக்களுக்கு அறியத்தரப்படுமெனவும் அமைச் சர் தெரிவித்துள்ளார்.

மேலும், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவோருக்கு விசேட பரிசில்களை வழங்குவதற்கும் அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இதைவிட, மின்சாரத்தை சிக்கனப் படுத்துவதற்குப் பங்களிப்பு வழங்கும் பாடசாலைப் பிள்ளைகளைத் தெரிவு செய்து, பரிசில்களை வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (த-22)

# இந்து சமய மேம்பாடு கருதி நூலகங்களுக்குப் புதிய நூல்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் இந்து சமய மேம்பாடு கருதி ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றை அச்சிட்டு வெளியிட்டு வருகின்றது. இந் நூல்கள் பொதிகளாக்கப்பட்டு ஒவ்வொரு நூல் தொகுதியும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் பொது நூலகங்களுக்கும் சனசமூக நிலைய ஊடகங்களுக்கும் இலவசமாக விநியோகிக் கப்படுகின்றன.

இந்த நூல் தொகுதியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் பல்கலைக்கழகங்கள், பொது நூலகங்கள், சனசமூக நிலையங்கள், உயர்தர பிரிவைக் கொண்டுள்ள அரச பாடசாலைகள், என்பவற்றின் நூலகர்கள் அல்லது பொறுப்பாளர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக் கப்பட்டுள்ளது.

நூலகப் பொறுப்பாளர்கள் நூலகத்தின் பெயர், முகவரி, நடத்தும் நிறுவனத்தின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு தமது பதவி முத்திரையுடன் கூடிய சான்றுப்படுத்தலுடன் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவலர்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, கொழும்பு - 4 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (த)

# அறிக்கை செயல்படுத்துவதற்கு முன் மக்கள் கருத்தை அறிய வேண்டும்

## மல்வத்த அஸ்கிரிய நாயக்கர்கள் அறிவுறுத்தல்

கொழும்பு,மார்ச் 27

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள் இணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர் மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்களின் அனுநாயக்க தேரர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தும் போது நாட்டின் ஒற்றை ஆட்சி முறையையும் தேசிய அமைதியையும் உறுதிப் படுத்தும் அம்சங்களே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று அனுநாயக்க தேரர்கள் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

அஸ்கிரிய பீடத்தின் சியாம் மகா நிக்காயவின் அனுநாயக்கர் தலாங்கம சிறி அத்தா தாசி தேரரும், மல்வத்த பீடத்தின் அனுநாயக்கர் புஷ்பா நியாங்கொட சிறி விஜிதாசிறி தேரரும் கூட்டாக விடுத்துள்ள அறிக் கையில் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்த நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் உடனடியாக அமுல் படுத்தப்பட வேண்டும் என்று கருத்து கொண்டிருக்கின்றன.

**இந்த நாட்டின் பெரும் பான்மை மக்களின் கருத்தை மீறி எவரும் நடந்து கொள்ள முடியாது. அரசியலுக்கு அப்பால் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டும்.**

இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நாட்டு மக்கள் கடந்த 30 வருடங்களாக அனுபவித்த துன்பங்களின் பின்னணியில் இன்று நாட்டில் நிலவும் அமைதி பாதுகாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ள அவர்கள் இந்த நாட்டின் பெரும் பான்மை மக்களின் கருத்தை மீறி எவரும் நடந்து கொள்ள முடியாது. அரசியலுக்கு அப்பால் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட வேண்டும் என்றும் தெரிவித் துள்ளனர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் வெற்றிடங்களால் திணறும் வேரவில் இந்து மகாவித்தியாலயம்

**அண்மையில் யாழ். மாவட்டத்தில் இருந்து 295 ஆசிரியர்கள் கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.**

வேரவில், மார்ச் 27

முதலாம் தவணை பூர்த்தியடையும் நிலையிலும் வேரவில் இந்து மகாவித்தியாலயத்தின் ஆசிரிய ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் இருந்து 295 ஆசிரியர்கள் கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஏழுபேர் இந்தப் பாடசாலைக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் கடந்த 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டனர்.

எனினும் எவரும் கடமையைப் பொறுப்பேற்கவில்லை. இவர்கள் கல்வி உயரதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் தயவுடன் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுவிட்டதாகவும் அறியமுடிகின்றது.

இதனால் ஆத்திரமடைந்த பெற்றோர்கள் கிளிநொச்சிக் கல்வி வலயத்துக்குச் சென்று இந்தப் பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி அதிகாரிகளுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் இந்தப் பாடசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமாரிடம் பாடசாலையில் போதியளவு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வருவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டது. அவரும் போதியளவு ஆசிரியர்கள் இங்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என உறுதியளித்துச் சென்றிருந்தார்.

எனினும் இதுவரை ஆசிரியர்கள் அங்கு நியமிக்கப்படவில்லை.

இங்கு தரம் 03, 04 வகுப்புகளில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளதுடன் இவர்கள் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்வதில்லை எனவும் அறிய முடிகிறது.

அதேபோன்று இடைநிலை மற்றும் உயர்தரப் பிரிவுகளில் தமிழ், விஞ்ஞானம், விவசாயம், சங்கீதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் இல்லாததனால் தமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டு வருவதாகவும், பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். (க-127)

# 200 குடும்பங்களுக்கு சுயதொழில் உதவிகள்

**முல்லையில் பெண் தலைமைக் குடும்பங்களுக்கு**

யாழ்ப்பாணம், மார்ச் 27

முல்லைத்தீவில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் 200 குடும்பங்களுக்கு. சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக உதவிகளை வழங்கவுள்ளது.

மூங்கிலாறு, சுதந்திரபுரம், வள்ளிபுனம் பகுதிகளைச் சேர்ந்த, போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையிலும், இட அமைப்பைப் பொறுத்தும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. கால்நடை வளர்ப்பு, விவசாயம் போன்ற சுயதொழிலை ஊக்குவிக்கும் திட்டங்களில் பயனாளி தாம் விரும்பியதைத் தெரிவு செய்ய முடியும்.

இதன் முதல் கட்டமாக 12 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள், 30 வாழைக்கன்றுகள், விவசாய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.

சுயதொழிலை ஊக்குவிக்கும் இந்தத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு 50 ஆயிரம் தொடக்கம் 60 ஆயிரம் ரூபா வரையிலான தொழில் முயற்சித் தேவைகள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டத்துக்கான நிதி உதவியினைப் புலம் பெயர்ந்த அமைப்புக்கள் ரீதியாகச் செயல்படும் தமிழ் மக்கள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த விவரங்களைச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம், திட்டச் செயலாளர் து.தேவராஜ் ஆகியோர் தெரிவித்தனர். (க-16,13)

# சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான எழுத்துப் பரீட்சை வெள்ளி தோறும்

வவுனியா, மார்ச் 27

வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சை வாரம் தோறும் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறுமென வவுனியா மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மேற்பார்வை அதிகாரி டபிள்யு இ.எஸ். வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

இந்த வருடம் புதிதாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு 1500 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களுள் 900 பேர் செயன்முறைப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிதாக விண்ணப்பிக்க விரும்புவோரில் சாரதி அனுமதிப் பயிற்சி நிறுவனத்தின் மூலம் விண்ணப்பிப்போர் அலுவலக நாள்களில் விண்ணப்பத்தைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்றும் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிப்போர் தமது சரியான அஞ்சல் முகவரியை வழங்காத காரணத்தால் அவர்களுக்கான அனுமதிப் பத்திரம் திரும்பவும் மோட்டார் திணைக்களத்துக்கு அனுப்பப்படுகின்றன.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து செயன்முறைப் பரீட்சைக்கு வரும்போது உரிய அலுவலரிடம் விண்ணப்பப் படிவம் ஒப்படைக்கப்படுவதால் தமது முகவரியைச் சரிபார்த்துத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்த பலர் பரீட்சைக்குத் தோற்றுவதில்லை. பரீட்சைக்கு விண்ணப்பித்து ஒன்றரை வருடங்களின் பின் அது காலாவதியாகி விடுகின்றது. இதனால் மீண்டும் புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே விண்ணப்பிப்போர் தமக்கு உரிய திகதியில் பரீட்சையில் தோற்றி தமக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். (க-400)



கிளிநொச்சிக் குளத்தின் ஐந்து அடி வான் பகுதியில் புனரமைப்பு வேலைகள் இடம்பெறுகின்றன (405)

# ஆலய மஹோற்சவம்

நெடுங்கேணி, மார்ச் 27

வவுனியா வடக்கு நெடுங்கேணி ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 10 நாள்கள் திருவிழா இடம்பெறும்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ காலப் பிரதம குருவாக சிவஸ்ரீ வி.கே ஜெயசுதக் குருக்கள் பொறுப்புக்களை வகிப்பார். தினமும் பகல் பூசையைத் தொடர்ந்து ஆலயத்தின் அறநெறிப் பாடசாலையில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

அடியவர்கள் திருவிழாக் காலத்தில் தம்மாலியன்ற பூசைத் திரவியங்களை வழங்குமாறு ஆலய பரிபாலன சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர் (க-435)

# வவுனியாவில் தேங்கிக் கிடக்கும் வாகனப் பதிவுப் புத்தகங்கள்

வவுனியா, மார்ச் 27

மோட்டார் திணைக்களத்தில் வாகனப் பதிவுக்கு விண்ணப்பித்தவர்களின் பதிவுப் புத்தகங்கள் வவுனியா மோட்டார் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

2005 ஆம் ஆண்டு முதல் வாகனப் பதிவுக்கென விண்ணப்பித்தவர்களுக்கான சுமார் 250 இற்கும் மேற்பட்ட வாகனப் புத்தகங்கள் இதுவரை பெற்றுக்கொள்ளப்படாமல் வவுனியா மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் காணப்படுகின்றன என மோட்டார் திணைக்கள மேற்பார்வை அதிகாரி டபிள்யூ.ஈ.எஸ். வீரக்கோன் தெரிவித்தார்.

இதேவேளை ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகன இலக்கத் தகடுகளும் இது வரை உரியவர்களால் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட வாகனப் புத்தகங்களையும், இலக்கத்தகடுகளையும் அலுவலக நேரங்களில் வந்து பெற்றுக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் அவற்றை மீண்டும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வீரக்கோன் தெரிவித்தார். (க-400)

# புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி கல்வி வலயத்தின் மாணவர் அபிவிருத்திக்கான புதிய பிரதிக் கல்விப் பணிப்பாளராக திருமதி பிரதீபா காயத்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த இவர் விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றி வந்தார். (க-405)

# வவுனியா செயலகத்தில் காலம் கடந்த பதிவுகள்

வவுனியா, மார்ச் 27

வவுனியா மாவட்டத்தில் காலம் கடந்த பிறப்பு தொடர்பான பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு வவுனியா மாவட்டக் காணிப் பதிவாளரும் மேலதிக மாவட்டப் பதிவாளருமாகிய டி. அற்புதராஜா தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பலருக்குப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இல்லாதது தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வவுனியா செயலகத்தினால் பதிவுகளை மேற்கொள்வதில் காலம் கடந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென விண்ணப்பிப்பவர்கள் சரியான தகவல்களை வழங்கும் பட்சத்தில், அவர்களுக்கு மூன்று நாள்களுக்குள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர், பிறப்பை உறுதிப்படுத்தும் வகையில் பெற்றோருடைய திருமணப்பதிவுச் சான்றிதழின் பிரதி, வைத்தியசாலையின் பதிவேட்டுப் பிரதி, ஊசி ஏற்றப்படும் அட்டை மற்றும் குடும்ப நல மாதுவினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களுடன் உடன் விண்ணப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

# வவுனியா வீதிகளின் புனரமைப்பு துரிதம்

## ஜூனில் பூர்த்தி செய்யத் திட்டம்

**வவுனியா நகர சபைக்குட்பட்ட முக்கியமான ஐந்து வீதிகள், சிங்களப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள்.**

வவுனியா, மார்ச் 27

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்திலுள்ள வீதிகள் அனைத்தும் துரித கதியில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் பயன்பாட்டின் அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் ஒவ்வொரு வீதியும் புனரமைப்புச் செய்யப்படும்.

[illegible] எல்லைக்குட்பட்ட சுமார் 20 வீதிகள், இத்திட்டத்தின் மூலம் புனரமைப்புச் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

[illegible] பாடசாலை வீதி, செந்தூரன் மில் வீதி, கற்குளம் மூன்றாம் யூனிற் வீதிகள் என்பன செப்பனிடப்பட்டு நிறைவடையும் தறுவாயில் உள்ளன.

ஏனைய வீதிகளுள் வவுனியா நகர சபைக்குட்பட்ட முக்கியமான ஐந்து வீதிகள், சிங்களப் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகள், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட முக்கிய மூன்று வீதிகள், வவுனியா தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட 5 வீதிகள், வவுனியா வடக்கிலுள்ள முக்கிய வீதியான நயினாமடு வீதி என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு ஜூன் மாத இறுதிப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகள் ஓய்வூதியம் 4 மாதங்களாக இல்லை

## யாழ். விவசாய அமைப்புக்கள் கவலை

வலி வடக்கு, மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியம் பெறும் சுமார் ஆயிரத்து 600 பேருக்கு மேற்பட்டவர்களுக்கான ஓய்வூதியம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து யாழ். விவசாய அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

விவசாய ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கை கடந்த காலத்தில் விவசாய அமைச்சின் கீழேயே இருந்தது. அது தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த ஓய்வூதியம் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அது உரிய முறையில் வழங்கப்படுவதில்லை**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இந்த ஓய்வூதியம் கொண்டு செல்லப்பட்ட பின்னர் அது உரிய முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் காலதாமதம் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விவசாயிகள் தமது பின்னாளில் கஷ்டம் இன்றி வாழ வேண்டும் என்பதற்காகவே பணம் கட்டி இந்தத் திட்டத்தில் இணைந்து கொண்டனர்.

ஆயினும் அதனை உரிய காலத்தில் மாதாந்தம் வழங்காமல் விவசாயக் காப்புறுதிச் சபை இழுத்தடித்து வருவதால் தாம் தமது வயது போன காலத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். (த-86)

# சுகாதார நடவடிக்கைகள் குருநகரில் மும்முரம்

குருநகர், மார்ச் 27

யாழ்.மாநகர சபையால் குருநகர்ப் பகுதியில் பல சுகாதார நடவடிக்கைகள் துரித கதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் உள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலில் தேங்கியிருந்த மணலை கடந்த வாரம் அள்ளித் துப்புரவு செய்த சுகாதாரப் பகுதியினர் குருநகர் மத்திய கிழக்கு வீதியில் உள்ள கழிவுநீர் செல்லும் வடிகால்களில் தேங்கியிருந்த மணலையும் அள்ளி எடுத்துள்ளார்கள்.

இந்த வீதியில் வடிகால் குடியிருப்பாளர்களின் வீடுகளினுள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் யாழ்.மாநகர சபையின் குருநகர்ப் பகுதிக்கான பொதுச்சுகாதார பரிசோதகரின் ஏற்பாட்டில் கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநகர் சன சமூக நிலையத்தை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புப் பகுதி மேற்பார்வை செய்யப்பட்டது.

இந்தப் பரிசோதனையின் போது பொலிஸ் அதிகாரிகள், யாழ்.மாநகர உறுப்பினர்கள் சிலரும் நேரடியாக ஈடுபட்டனர்.

இந்தச் சுத்திகரிப்புப் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ்.மாநகரசபையின் குருநகர்ப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (த-51)

# வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெறும் நிலை

## மானிப்பாய் நிரப்பு நிலையத்தில் ஒரு பம்பி பழுது

நவாலி, மார்ச் 27

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் எரிபொருள் நிரப்பச் செல்வோர் நீண்ட நேரம் வீதியோரம் வாகனங்களுடன் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த எரிபொருள் விற்பனை நிலையத்தில் இரண்டு எரிபொருள் நிரப்பிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் பாவனையாளர்களுக்கு இரவு பகல் சேவையாக 24 மணித்தியாலமும் செயற்பட்டு மக்களுக்குச் சிறந்த சேவையாற்றி வருவதுடன் மின்சாரம் இல்லாத வேளையிலும் ஜெனரேற்றர் மூலம் எரிபொருளை வழங்கி வந்தது.

தற்போது பெற்றோல் நிரப்பியில் ஒன்று பழுதடைந்து நீண்ட நாள்களாகிவிட்டதுடன் ஜெனரேற்றர் இயந்திரமும் பழுதடைந்துள்ளது.

இது திருத்தி அமைக்கப்படாததால் ஒரு நிரப்பி மூலமே தற்போது விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் மின்சாரம் இல்லாத வேளையிலும் மக்கள் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

எனவே உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுத்து இதனைத் திருத்தியமைத்து மேலும் சிறந்த சேவையாற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (த-100)

## ஏன் இந்த ஆக்கிரமிப்பு?



வேலணைத் துறை கடற்கரைப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் சிறிய விகாரை ஒன்று அமைக்கப்பட்டு அங்கு புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனியார் காணிகளில் அனுமதிப் பத்திரமின்றிப் புத்தர் சிலைகள் வைக்கப்படுகின்றமை குறித்துப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த)

# காசநோய் விழிப்புணர்வு குருநகரில்

குருநகர், மார்ச் 27

குருநகர் பகுதியில் உள்ள மக்களுக்கு காசநோய் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று குருநகரின் பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.பேடினன்ஸ் தெரிவித்தார்.

மேலும் சர்வதேச காசநோய் தின நிகழ்வாக குருநகர்ப் பகுதியில் உள்ள கியுமெடிக்கா முன்பள்ளி, யுபிலி மகப்பேற்று நிலையம், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பகுதி, ஆவே மரியா பாலர் பாடசாலை, குருநகர் சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் காசநோய் சம்பந்தமான வீடியோ படக்காட்சிகளும் மக்களுக்குக் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வின்போது யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி, பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர்களும் கலந்துகொண்டனர். (த-51)

# ஒரே கட்டணத்தில் சைக்கிள் இலக்கத் தகடு

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் சைக்கிள் இலக்கத் தகடுகள் ஒரே கட்டணத்தில் விநியோகிக்க யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் கடந்த வருடம் வரை சைக்கிள் இலக்கத் தகடுகள் ஒரே கட்டணத்தில் விநியோகிக்கப்பட்டு வந்தன.

ஆயினும் 2012 ஆம் ஆண்டு இலக்கத் தகடுகளின் உற்பத்திச் செலவு அதிகரிப்புக் காரணமாக உள்ளூராட்சிச் சபைகள் வெவ்வேறு கட்டணங்களை நிர்ணயித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த வருடம் சைக்கிள் இலக்கத் தகடுகளின் விநியோகத்தை அதிகரிக்க உள்ளூராட்சி சபைகள் உரிய நடவடிக்கைகள் எடுப்பதுடன் அனைத்துச் சபைகளிலும் ஒரே அளவான கட்டணம் அறவிடப்படல் வேண்டுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் இந்த வருடத்துக்குரிய இலக்கத் தகடுகள் பல உள்ளூராட்சிச் சபைகளினால் இன்னும் விநியோகம் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# வருமான கண்காணிப்பாளர்களுக்கு மீண்டும் காக்கிச் சீருடைகள்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் வருமான மேற்பார்வையாளர்களுக்கு ஒரே நிறத்திலான சீருடைகள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் இந்த உத்தியோகத்தர்கள் சீருடை அணியும்போது சீருடைக்குரிய தொப்பி, பொத்தான்கள், சம்பாத்துக்கள் மற்றும் பதவி பொறித்த இலட்சினை ஆகியவை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் மூலம் பெற்றுக்கொடுக்கப்படும்.

இவ்வாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளின்வருமான மேற்பார்வையாளர்களுக்கான செயலமர்வில் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் செ. பிரணவநாதன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகள் வருடா வருடம் சீருடைத் துணிகள் மட்டும் வழங்குவதாகவும் ஏனைய அணிகலன்கள் வழங்கப்படாததால் பல உத்தியோகத்தர்கள் சீருடை அணியத் தயக்கம் காட்டுவதாகவும் வருமான மேற்பார்வையாளர்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து ஆணையாளர் மேற்கண்டவாறு கூறினார். வருமான மேற்பார்வையாளர்கள் காக்கி நிற சீருடைகள் அணிய வேண்டுமென அரசு சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதிலும் கடந்த 1986 ஆம் ஆண்டு அரசினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபம் பிரகாரம் பாதுகாப்புப் படையினர் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்கள் காக்கிச் சீருடை அணிய தடை விதிக்கப்பட்டது.

காக்கி சீருடைக்குப் பதிலாக சாம்பல் நிற சீருடைத் துணிகள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சபைகளால் வருடாந்தம் விநியோகிக்கப்பட்டு வந்தது.

நாட்டில் அமைதி நிலை தோன்றியதையடுத்துத் தமக்கு காக்கிச் சீருடைகள் வழங்குவதுடன் அதனுடன் இணைந்த அணிகலன்களையும் வழங்குமாறு வருமான மேற்பார்வையாளர்கள் உள்ளூராட்சிச் சபைகளை கோரியுள்ளனர்.

சில உள்ளூராட்சிச் சபைகள் காக்கி நிற சீருடைத் துணிகள் கடந்த வருடம் தொடக்கம் வழங்குகின்ற போதிலும் அதனுடன் இணைந்த அணிகலன்களை வழங்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சண்டிலிப்பாய் ஒருங்கிணைப்பு கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தற்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் முரளிதரன் தெரிவித்தார். (த-5)

# எரிபொருள் மானிய முத்திரை 50 வீதமானவை விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கு இதுவரை 50 வீதமான எரிபொருள்களுக்கான மானிய முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்த வாரத்திலும் இந்த மானிய முத்திரைகள் தொடர்ந்தும் விநியோகிக்கப்படவுள்ளதாக மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார். தீவுப்பகுதி மற்றும் பருத்தித்துறைப் பிரதேச மீனவர்களுக்கு இந்த மானிய முத்திரைகள் இந்த வாரத்தில் வழங்கப்படும்.

யாழ்.கரையோரப்பகுதியை சேர்ந்த [illegible] கடற்றொழிலாளர்கள் இந்த மானிய முத்திரையை பெற்று அதற்குரிய எரிபொருள்களையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்த மானிய முத்திரைகள் யாவும் இந்த வாரத்துக்குள் விநியோகித்து முடித்திட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் கொள்ளையிடுவோரில் பெரும்பாலானோர் அரசியல்வாதிகள்

கொழும்பு, மார்ச் 27

தொல்பொருள் கொள்ளை, களவுகள் மற்றும் புதையல்களைத் தோண்டுதல் தொடர்பாகப் பெருமளவில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளவர்கள் அரசியல்வாதிகள், பொலிஸார், பாதுகாப்புப் படையினர் என்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கடந்த ஆண்டில் 220 தொல்பொருள் கொள்ளை மற்றும் களவுகள் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**கடந்த 2000 ஆம் ஆண்டு தொல்பொருள் கொள்ளை மற்றும் களவுகள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்கு 294 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன**

இந்த ஆண்டு இதுவரை 33 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பொலிஸ் தகவல்களுக்கு அமைய கடந்த 2000 ஆம் ஆண்டு தொல்பொருள் கொள்ளை மற்றும் களவுகள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகள் 294 ஆகும்.

தொல்பொருள்களைத் திருடிய குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களிடம் இருந்து 2011ஆம் ஆண்டில் இரண்டு கோடி 61 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாவும் 2010ஆம் ஆண்டில் ஒரு கோடியே 29 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாவும் அபராதத் தொகைகளாக நீதிமன்றங்களால் அறவிடப்பட்டுள்ளது.

(த-22)

## இரு சடலங்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 27

கொழும்பு - நாராஹென்பட்டி மற்றும் கண்டி ஹந்தானை ஆகிய பகுதிகளில் இருந்து இரு சடலங்கள் மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெலிக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவல - நாராஹென்பிட்டி வீதியின் மாகா நிறுவகத்திற்கு பின்னால் கால்வாயில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் 35 வயதுடைய பெண்ணுடையது எனபொலிஸார் மதிப்பிட்டுள்ளனர்.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, கண்டி - ஹந்தானை - மேல்பிரிவு மாரியம்மன் கோவிலுக்கு பின்னால் பைனஸ் மர காட்டில் இருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

60, 70 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஐ.நா. தீர்மானத்தை ஒரு கருவியாகத் தமிழீழ அரசு பயன்படுத்தும்

### உருத்திரகுமாரன் கூறுகின்றார்

றொரண்டோ, மார்ச் 27

நாடுகடந்த தமிழீழ அரசு, இலங்கையின் நல்லிணக்க ஆணைக் குழுவை ஏற்றுக் கொள்ளவில்லை. நிறை வேற்றப்பட்ட ஐ.நா. மனித உரிமைச் சபை தீர்மானத்தை ஒரு கருவியாக நாடு கடந்த தமிழீழ அரசு பயன்படுத்தும். இதற்காக ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதுடன் அதற்கான முனைப்பில் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறு தெரிவித்தார். நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன்

ஐ. நா. மனித உரிமைச் சபையில்,இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பாக கனடாவில் ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில், நாடு கடந்த தமிழீழ அரசின் அரசியல் வெளிவிவகாரத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் அரசியல் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ஐ.நா. மனித உரிமைச் சபையில் பங்காற்றிய நாடு கடந்த தமிழீழ அரசின் வள அறிஞர் பங்கெடுத்திருந்த பேராசிரியர் போல் நியூமன், ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் ஜெனிவாவில் பரப்புரையில் ஈடுபட்ட அவைத் தலைவர் பொன். பாலராஜன் ஆகியோர் நேரடியாக பங்கெடுத்து கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் இணையவழி காணொலி யூடாகப் பங்கெடுத்து கருத்துக்களை வழங்கியிருந்தார். கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கையில் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தெரிவித்ததாவது:-

ஈழத்தில் இடம்பெற்ற இனப் படுகொலை தொடர்பாக சர்வதேச சுயாதீன விசாரணை தேவை என்பதனை நாடு கடந்த தமிழீழ அரசு ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீமூனுக்கு வலியுறுத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 20 லட்சத் துக்கும் மேற்பட்டவர்களின் கையெழுத்துக் கோரிக்கை இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தமிழினப் பாதுகாப்புக்காக சர்வதேசப் பொறிமுறையின் அவசியம் பற்றியும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் போல்நியூமன் அங்கு கருத்துரை வழங்கினார். தமிழர் பொது அமைப்புக்கள் பிரிந்து நின்று செயற்படுவது செயற்பாட்டைப் பலவீனப்படுத்தி விடும். ஒற்றுமை, புரிந்துணர்வு ஆகியவற்றின் அவசியம் பற்றியும் அவர் அங்கு தெளிவுபடுத்தினார். 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியின் பின்னர் சர்வதேச அணுகுமுறையில் ஏற்பட்ட மாறுபாடு எவ்வாறு சிறப்பாக மனித உரிமைக் சபையில் தமிழினப் படுகொலைபற்றிய கருத்துருவாக்கம் பெற்றது என்பதனைக் கால அட்டவணை போட்டுக் காட்டியிருந்தார். தமிழ் இனப் படுகொலையைப் பற்றிய கருத்துருவாக்கம் இன்று தீர்மானமாக 19ஆவது மனித உரிமை அவையில் மாறியது பற்றியும் தெளிவுபடுத்தியிருந்தார்.

**தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான பாதுகாப்புப் பொறிமுறையை சர்வதேசத்தின் மேற்பார்வையில் உருவாக்க வேலைகள் மும்முரமாக நடைபெறவுள்ளன.**

அவைத் தலைவர் பொன் பாலராஜன், ஜெனிவாவில் இலங்கை அரசு எவ்வாறான பிரசார யுக்திகளைக் கையாண்டார்கள். அந்த அரசின் பிரசார யுக்திகளைத் தெரிந்து அதற்குப் பதிலாக எதிர்ப் பிரசாரத்தை முன்னெடுத்த விதங்களையும் மற்றைய சக சகோதரத் தமிழ் அமைப்புக்கள் ஆற்றிய பங்குகள் பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார். இந்த ஐ.நா. அமர்வில் கற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் வரப்போகும் நாள்களில் தொடர்ந்தும் தமிழினப் படுகொலையை விசாரிப்பதற்காக சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறி முறையின் அவசியத்தையும் வேலைத் திட்டங்களையும் அவர் விளக்கியிருந்தார்.

அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிக் குறிப்பிடுகையில், தமிழின அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான பாதுகாப்புப் பொறிமுறையை சர்வதேசத்தின் மேற்பார்வையில் உருவாக்க வேலைகள் மும்முரமாக நடைபெறவுள்ளன. மற்றும் இலங்கையில் நடைபெற்றது ஓர் இன அழிப்பு என சர்வதேச நிபுணர்கள் மூலம் உலகத்துக்கும் சர்வதேசப் பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் தெளிவுபடுத்துவதற்கான முன்னெடுப்புகள் இடம் பெற்று வருகின்றன என் றும் குறிப்பிட்டார். *

## தாலிக்கொடி அபகரிப்பு

வீதியால் சென்ற பெண்ணிடம் தாலிக் கொடி அபகரிக்கப்பட்டுள்ளது.நேற்றுப் பகல் 11.45 மணியளவில் இந்தப் பெண் முடமாவடி சந்திக்குச் சென்றுகொண்டிருந்த போது நல்லூர் சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முன்பள்ளிக்குப் பிள்ளையை ஏற்றுவதற்காகச் இந்தப் பெண் சைக்கிளில் சென்று கொண்டிருந்ததார். மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்தனர். (த-16)

## அரசியல்வாதி கைது

பொத்துவில் - லாஹுகல - ஹெடஓய காட்டில் சட்ட விரோதமான முறையில் மரம் வெட்டிக் கொண்டிருந்த ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் லாஹுகல பிரதேச உள்ளூர் அரசியல்வாதி என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து வெட்டப் பட்ட மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்கென பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.


விஷேட அறிவித்தல்

எமது நிறுவனத்தின் அதிகாரம்பெற்ற சேவை முகவராக செயற்பட்டு வந்த கீழ்க்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் சேவை முகவர் உரிமையானது 20-01-2012 ஆம் திகதி முதல் இரத்து செய்யப்பட்டுள்ளதால் அந்நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் எந்தவித கொடுக்கல் வாங்கல்களுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சுரேஷ் மோட்டர்ஸ் அன்ட் இன்ஜினியரிங்
(அதிகாரம்பெற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிச் சேவை முகவர்)
நுனாவில் மேற்கு,
சாவகச்சேரி.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02.



ISUZU

COMMERCIAL BANK

இரு முன்னணியாளர்களின் உன்னதத்தில் உங்களின் முன்னேற்றத்தின் பயணத்தை தொடங்குங்கள்.



இலங்கையில் வர்த்தக ட்ரக் வண்டி விற்பனையில் முன்னணியிலிருக்கும் இசுசு ட்ரக் வண்டிகளின் ஏகமுகவர்களான சதொச மோட்டர்ஸ் பி.எல்.சி நிறுவனத்துடன் கொமர்ஷல் வங்கி இணைந்து, உலகிலேயே முதற்தர வர்த்தக ட்ரக் வண்டியான இசுசு ட்ரக் வண்டியை கொள்வனவு செய்வதற்காக சிறப்பு லீசிங் வசதிகளுடன் விஷேட வசதிகள் பல உங்களுக்கு பெற்றுத்தர காத்திருக்கின்றன.

SML இடமிருந்து

- ரு. 50,000/- வரையான விலைக்கழிவு.
- வேலைக்கூலி அறவிடப்படாத 06 இலவச சேவைகள்.
- வண்டிக்கு 40,000 கி.மீ. அல்லது 02 வருட உத்தரவாதம்.
- என்ஜினுக்கு 100,000 கி.மீ. வரையான உத்தரவாதம். (சதொச மோட்டர்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் நிர்வகிப்பிலிருக்க வேண்டும்)

ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இலங்கையின் 1தர ட்ரக் வண்டி

COMMERCIAL BANK லீசிங் இடமிருந்து

- குறைந்தபட்ச தவணைக் கொடுப்பனவுகள்.
- உங்களின் வருமானத்திற்கேற்ற கொடுப்பனவு முறைகள்.
- சிறப்புக் காப்பீட்டு அனுகூலங்கள்.
- மற்றைய கொமர்ஷல் வங்கி நிதி வசதிகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம்.

SML சதொச மோட்டர்ஸ் பிஎல்சி (PQ 108)
25, வொக்சோல் வீதி, கொழும்பு - 02. தொ.பே: 011 4943500, 011 2331622, 011 2431568, 011 2432858, 011 4939187 தொலைநகல்: 0114 713663
இணையதளம்: www.sathosamotorsplc.com

COMMERCIAL BANK
மேலதிக விபரங்களுக்கு : 011 2353333
மின்னஞ்சல் : leasing@combank.net
இணையதளம் : www.combank.lk
நிபந்தனைகள் உண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை தொடர்பில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

# மக்களுக்கு ஆதரவானது ஆனால் அரசுக்கு எதிரானது

### இந்துப் பத்திரிகைக்கு சுமந்திரன் விளக்கம்

டில்லி, மார்ச் 27

ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் கொழும்பு அரசுக்கு எதிரானது. ஆனால் மக்களுக்கு அது ஆதரவானது இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இந்தியாவின் இந்துப் பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மீதான தீர்மானம் தொடர்பில் சிங்கள மக்கள் அனைவரும் கடும் கோபத்தில் இருக்கின்றார்கள் என்ற கருத்தை நான் மறுக்கின்றேன்.

இலங்கை அரசு செய்ய வேண்டிய சரியான விடயங்களைச் சரியான நேரத்தில் செய்யத் தவறியதாலேயே இந்தப் பிரச்சினை வந்தது என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

''தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பது பற்றிய புரிதல் அங்கு இருக்கின்றது. இந்தத் தீர்மானம் முழு நாட்டுக்குமே சிறந்தது என்று நாங்கள் சொல்லி வருகின்றோம். அது அரசுக்கு எதிரானது ஆனால் மக்களுக்கு ஆதரவானது.''

அரசு தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதால் கிடைத்த தண்டனையே இது. இந்தத் தீர்மானத்துக்கு இந்திய அரசு வழங்கிய ஆதரவுக்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரு நாடுகளுக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்த நிலையில் இத்தகைய தீர்மானத்தை இந்தியா எடுப்பது மிகச் சிக்கலானது. ''ஆனால் இந்தியா இப்படி ஒரு முடிவு எடுத்தது எமக்கு மகிழ்ச்சியாக உள்ளது. ஏனெனில் அதன் பின்தான் தான் வழங்கிய உறுதிமொழியைச் செயற்படுத்துவது தனது கடமை என்பதை இலங்கை அரசு புரிந்து கொண்டுள்ளது. எனவே இந்த விடயம் சில சாதகமான நகர்வைக் கொண்டுள்ளது.''



தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக அல்லது இரண்டாம் தரக் குடிமக்களாக வாழமுடியாது. சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் என்பன சர்வதேசம் அனைத்துக்கும் பொதுவானது.

என்றார்.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் மோசமான விளைவுகளை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கு; தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக அல்லது இரண்டாம் தரக் குடிமக்களாக வாழமுடியாது. சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் என்பன சர்வதேசம் அனைத்துக்கும் பொதுவானது எனவும் அவர் அந்தப் பத்திரிகைக்குத் தனது விளக்கத்தைக் கொடுத்துள்ளார். (உ-10)

## ஆக்கிரமிப்பை எதிர்த்து இன்று வடக்கு மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடகடலில் இந்திய மீனவர் அத்துமீறலைக் கண்டித்து கடற்றொழிலுக்குச் செல்வதைப் புறக்கணித்து வடமராட்சி மீனவர்கள் நேற்று தொழில் புறக்கணிப்பை மேற்கொண்டதோடு இன்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றையும் நடத்த உள்ளனர்.

''இந்திய மீனவர்கள் வடமராட்சிக் கடற் பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கண்டித்தும் அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்தும் தொழில் புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்பட்டதோடு இன்று, ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி வடக்குக் கடற்பரப்பில் தொண்டமானாறு முதல் கற்கோவளம் வரை உள்ள எந்த மீனவர்களும் நேற்று கடலுக்குச் செல்லாது தொழில் புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர். இன்று காலை 8 மணிக்கு பேரணி நடத்தப்படுவதுடன் இறுதியில் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளதாக வடமராட்சி வடக்கு கடல்தொழில் சமாசச் செயலாளர் த.சந்திரதாஸ் தெரிவித்தார். (10 -8)

## மரண அறிவித்தல்கள்



### வல்லிபுரம் வடிவேலு
(ஓய்வுபெற்ற நில அளவை உதவியாளர்)

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மருதடி மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வடிவேலு நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற பூலோகத்தின் அன்புக் கணவரும், வேலாயுதத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பூமணி (திருவையாறு), கனகரத்தினம்(திருவையாறு) ஆகியோரின் அன்புத் தந்தையும், வீ.வீ.முருகையா (கல்வயல்), விஜயலட்சுமி ஆகியோரின் சித்தப்பாவும், சங்கரப்பிள்ளை, சீராளலிங்கம், நந்தாகினி ஆகியோரின் மாமனும், சுகந்தி சத்தியானந்தன் (ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), சிவசீலன்- தர்சினி, கேதீஸ்வரன் -நிரோஜா (சுவிஸ்), திருமுருகராஜா (இரத்த வங்கி, மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி), இராதை (ஆசிரியை, கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்), ஜெயரூபன், தயானந்தன், சுரேஸ்குமார், கிருஷ்ணவேணி- வதனகாந்தன், சுஜாதா, தர்சன் (இத்தாலி), அபிராமி ஆகியோரின் பேரனும், மதுஷா, லதூஷிகன், பாமினி, இலக்கியா, டர்சிகா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடிமேற்கு,
சாவகச்சேரி.

தகவல்: வ.கனகரத்தினம் (மகன்),
க.சத்தியானந்தன் (பேரன்- ஆசிரியர்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.)



திருமதி
### தங்கரத்தினம் தம்பிப்பிள்ளை

வட்டு. வடக்கு சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், இல. 207, சிவன் பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் தம்பிப்பிள்ளை (24.03.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவகுமார் (மக்கள் வங்கி - யாழ்.), சந்திரகுமார் (சரஸ்வதி தேசியக் கல்லூரி - பதுளை), சிவசக்தி ஆகியோரின் அன்புத் தாயும், புண்ணியராசா (இலங்கை வங்கி - காரைநகர்), சோமேஸ்வரி - சிவகுமார், தவலாம்பிகை - சந்திரகுமார் (பிரதேச பற்சிகிச்சை நிபுணர், RDS ஊவா மாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், சி.பகீரதி, சி.மேகலாதன், ச.சஞ்சீவ் (பொறியியற்பீடம், பேராதனை பல்கலைக்கழகம்), ச.சந்துஜன், பு.வசீகரன், (கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பத் துறைபீடம், ஊவா வெல்லச பல்கலைக்கழகம்- பதுளை), பு.தபோகரன் (AVIVA N.D.B. Insurance, Jaffna), பு.திவாகரன், பு.ரிசாந்தினி, பு.யசோகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.03.2012) ஞாயிற்றுக்கிழமை ந.ப.12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ். கோம்பயன் மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 207, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நேற்றைய உதயன் பத்திரிகையின், பத்தாம் பக்கத்தில்



யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பதவிநிலை எழுதுவினைஞராகப் பணியாற்றி நேற்று (26.03.2012) ஓய்வு பெற்ற

திருமதி
*தேவகி தங்கவேலு*வைப் பாராட்டி வெளியான விளம்பரத்தில்-

''அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்...''

என்ற வாசகம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகத் தவறிவிட்டது. அதனையும் சேர்த்து வாசிக்கவும்.

## கணவனுக்கு எதிராக மனைவி வழக்கு

### மனைவிக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம், மார்ச் 27

அச்சுறுத்தி கட்டாயப்படுத்தி உடல் உள ரீதியாக வலியை ஏற்படுத்தும் விதமாக தனது கணவர் நடந்து கொண்டார் என்று கூறி மனைவி யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

எனினும் மனைவி நீதிமன்றுக்கு சமூகளிக்காததையடுத்து அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

கொட்டடி, மீனாட்சி அம்மன் கோயிலடியைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். தனது கணவர் உட்பட சிலர் தன்னை நிர்வாணமாக வைத்து படம் பிடித்தனர் என்று பிரஸ்தாபப் பெண் கடந்த மாதம் யாழ். நீதிமன்றில் முறைப்பாடு செய்திருந்தார். அதனையடுத்து எதிரிகளும் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தனர் .

ஒத்திவைக்கப்பட்ட இந்த வழக்கு மீள விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன் போதே அச்சுறுத்தி உடல் உள ரீதியாக வலியை ஏற்படுத்தும் விதமாக நடந்து கொண்டார். என்று கணவருக்கு எதிராக குற்றம் சாட்டி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சார்பில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஆஜராகியிருந்தார் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜொனி மதுர நாயகம் குற்றச் சாட்டை மறுத்திருந்தார். வழக்கு விளக்கத்திற்காக அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (10-4)

## யாழ்ப்பாண மாநகர சபை
## ஆதனவரி அறிவித்தல் 2012

2012 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதனவரியை 30.03.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு முன்பதாக எவ்விததண்டமும் இன்றி இந்த அலுவலகத்தில் செலுத்தலாமெனவும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

★ வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் - 15%
★ ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2012 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கோட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவைத் தொகையைச் செலுத்தாத பட்சத்தில் மாநகர சபைக் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 252: பிரிவு XII 252(1) இன் படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி யோ.பற்குணராசா,
முதல்வர்,மாநகர சபை,யாழ்ப்பாணம்.

(சி/172) (6 ,12,14)

## தவறிவிட்டது

25.03.2012 (ஞாயிறு) வடமராட்சி, வல்லிபுரக் கோயில் சென்று வீடு திரும்பும் வழியில் 1¼ பவுண் தங்கச் சங்கிலி (கறுப்பு மணி வைத்தது), தவறிவிட்டது. (வல்லிபுரக்குறிச்சி, துன்னாலை இந்திரன் அம்மன் கோயில் வீதி, அத்தாய் ஊடாக அல்வாய்க்கு இடையில்) கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் தரப்படும்.

தொடர்புக்கு - 0771971966, 0779567284



## ஆத்மார்த்த அஞ்சலி

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் கடந்த பல வருடங்களாக சூரசம்ஹார உற்சவத்தின்போது தனது டிப்பர் வாகனத்தை தந்துதவிய

### கந்தையா மகேந்திரன்
(வேலும் மயிலும் லொறி உரிமையாளர்)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குபற்றுவதோடு அன்னாரின் ஆத்மா எம்பெருமானின் திருவடியில் நிலையான சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினர்
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாண வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை.

சம்பளம்:- ரூபா 10,000/=
தொடர்பு:
021-7900637

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மண் மகிழ 23.04.1978 — கண் நெகிழ 31.03.2009

திதி: 27.03.2012 பூர்வ பக்க பஞ்சமி

அமரர் *ராகினி கதிர்காமத்தம்பி*
B.Com(Hons) Dip.Ed
(ஆசிரியை, வவு.திருஞானசம்பந்தர் வித்தியாலயம்)

அன்பு மகளே!
கடல் அலைகள் ஓய்ந்தாலும்
உன் நினைவலைகள் ஓயாதம்மா
ஆல விருட்சமென நீயிருப்பாய்
அதில் வாழும் பறவைகளாய் நாமிருப்போம்
என்று ........
நெடு நாள்கள் எண்ணியிருந்தோம்
பாலை விருட்சத்தின் கொடூரத்தால்
இன்றுடன் .....
மூன்றாண்டு காலமாய்....
பாலை வனத்திலே தவிக்கின்றோம். மகளே!
மீண்டொரு கால் வருவாயா?

"நாகப்பா வளவு", கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை. 0714625071

வேதனையில் வாடும்:
குடும்பத்தினர்

## கற்பத்தடை ஊசிக்கு இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம்,மார்ச் 27

கற்பத்தடை ஊசியான "Depo Medroxy Progesterone" பயன்படுத்த வேண்டாமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சகல வைத்தியர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

தென்பகுதியிலுள்ள தாய் ஒருவருக்கு இந்தக் கற்பத்தடை ஊசி ஏற்றப்பட்ட பின்னர் அவர் மரணமானார் என்பது தெரியவந்ததையடுத்து இந்தத் திடீர் அறிவிப்பு நேற்றுப் பிற்பகல் விடுக்கப்பட்டுள்ளது. (10-4)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
*செல்லத்துரை தவராசா*

கடந்த 25.02.2012 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லத்துரை தவராசா அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 28.03.2012 புதன்கிழமை அவரது இல்லத்தில் அதிகாலை 4.00 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மு.ப. 11 மணியளவில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்புக் கிடைக்காதோர் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

துரையந்தோட்டம்,
நவிண்டில், கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

RE

## உங்கள் முச்சக்கரவண்டி பஜாஜ் ஆக இருக்கவேண்டியது

# ஏன்?



செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலயம் - மிகப்பெரியது!
சேவை முகவர் வலயம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்யும் போது நீங்கள் எதிர்பார்க்கும் எல்லா நடவடிக்கைகளும் அதியுயர் மட்டத்தில் உள்ளது பஜாஜ் முச்சக்கரவண்டி மட்டுமே என்பது இப்பொழுது உங்களுக்கே புரிந்திருக்கும்.

tradlanka



2012 மார்ச் 01 ஆம் திகதி முதல்
31 ஆம் திகதி வரை
கொள்வனவு செய்யும் அனைத்து
பஜாஜ் முச்சக்கரவண்டியுடனும்
பெறுமதிமிக்க ஒருசோடி பக்கத்திரை
இலவசம்!

விலை ரூ. 350,375/- இற்கு மேல்
மேற்குறித்த விலை VAT உள்ளடக்கப்படாததோடு,
முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
த.பெ. 1909,75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: http://www.dpmco.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு:-0771912585

## தவறிவிட்டது

பாலசிங்கம் யோகநாதன் ஆகிய எனது இல. 660311548V NIC மற்றும் லைசன்ஸ் என்பன K.K.S வீதியில் தவறிவிட்டன.கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும் (சன்மானம் வழங்கப்படும்.)
(6 ,12,14) T .P 0770260180

## Personal classes

மாணவர்களுக்கான English Medium வகுப்புக்கள் ஏனையோருக்கான Spoken English Classes உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
தொடர்பு: அ.துஷ்யந்தன் 0777070711 (6,12,14)

## காணி விற்பனை

கண்டி வீதி, நாவற்குழி உணவுக் களஞ்சித்துக்கு முன்பாகவுள்ள காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772965409

## பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் நவீனமயப் படுத்தப்பட்ட புடைவை நிலையம் ஒன்றுக்கு ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. முன் அனுபவம் உள்ளோருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
Topz, 70, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4743.

## மரண அறிவித்தல்



திருமதி *நாகேஸ் நாகேஸ்வரி*

அளவெட்டி தெற்கு, கலைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ் நாகேஸ்வரி நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸின் அன்பு மனைவியும், சிறிகாந்தன், சிவனேசன், றெஜீன, சிவகுமார், காஞ்சனா ஆகியோரின் அன்புத் தாயும், தனுஸ்கொடி, கோகுலன் (பிரான்ஸ்), சிறிவதனி, சாந்தினி, பவானி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைநகர்,
அளவெட்டி தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

# இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

## வியட்நாமில் எண்ணெய் ஆய்வை நிறுத்தக் கோரி

பெய்ஜிங், மார்ச் 27

வியட்நாம் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் எண்ணெய் அகழாய்வுப் பணியை இந்தியா உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சீனா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.




தென்சீனக் கடற்பரப்பில் வியட்நாமுக்கு சொந்தமான பகுதியில் இந்தப் பணியில் இந்தியா ஈடுபட்டுள்ளது. ஆனால் அதற்கு சீனா தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக சீனாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சக அதிகாரி சன் வெய்டோங் கூறியுள்ளதாவது:-

தென்சீனக் கடற்பரப்பில் இந்தியா எண்ணெய் அகழாய்வு ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வரும் இடம் வியட்நாமுக்கும் சீனாவுக்கும் சர்ச்சைக்குரிய இடமாகும். இந்த விவகாரத்தில் எதுவித தீர்வும் இதுவரை எட்டப்படவில்லை.

இந்தநிலையில் இந்தியா ஒருதலைப்பட்சமாக வியட்நாமுடன் இணைந்து அங்கே பணிகளை மேற்கொள்வது நல்லதல்ல. இந்த விவகாரத்திலிருந்து இந்தியா ஒதுங்கி இருக்க வேண்டும் - என்றார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்கட்டமைப்புகளை சீனா மேற்கொள்வதற்கும் தென்சீனக் கடற்பரப்பில் இந்தியா பணிகளை மேற்கொள்வதற்கும் வித்தியாசம் இருப்பதாகவும் சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவைச் சுற்றியுள்ள கடல்பாதையெங்கும் கடற்படைத் தளங்களை அமைத்துள்ள சீனா, எதிர்காலத்தில் வளைகுடா நாடுகளிலிருந்து எந்த ஒரு சிக்கலும் இல்லாமல் தமது நாட்டுக்கு எரிபொருள்களை எடுத்துச் செல்லலாம் என்றே கணித்தது. ஆனால் சீனாவுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்த தென்சீனக் கடலில் ஹைட்ரோகார்பன் அகழாய்வுப் பணிகளில் இந்தியா ஈடுபடுவதை அந்நாட்டினால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கடந்த ஆண்டும் இதே விவகாரத்தை சீனா எழுப்பியிருந்தது. ஆனால் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகமோ சர்வதேச சட்டவிதிகளின்படியே வியட்நாமுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறி சீனாவின் கருத்தை நிராகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தென்சீனக் கடற்பிரதேசத்தில் உள்ள தீவுகள் பலவற்றுக்கு சீனா, வியட்நாம் மட்டுமல்ல பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா உள்ளிட்ட நாடுகளுமே உரிமை கோரி வருவதும் குறிப்பிடத்தக்கது.

# விண்ணிலிருந்து விழுந்த 200 கிலோ மர்மப் பொருள்

## சைபீரிய மக்கள் அதிர்ச்சி

விண்ணில் இருந்து 200 கிலோ எடை கொண்ட மர்மப்பொருள் சைபீரியாவில் விழுந்ததால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

சைபீரியாவில் உள்ள ஓட்ராட்நெஸ்கி என்ற கிராமத்தின் அடர்ந்த காட்டு பகுதியில், விண்ணில் இருந்து திடீரென மர்ம பொருள் விழுந்தது. அந்தப் பகுதியில் இருந்த கிராமவாசிகள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்.

முதலில் அது இறந்த பறவையாக இருக்கலாம் என்று எண்ணினர். ஆனால், பறவை எதுவும் இல்லை என்று தெரிந்ததும் பொலிஸாருக்கு உடனடியாக தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், யு வடிவத்தில் இருந்த அந்தப் பொருள் ஏதோ ஒரு சாதனத்தின் உடைந்த பொருள் என்பதை அறிந்தனர்.

இதுகுறித்து ரஷ்ய ஆராய்ச்சியாளர்களுக்கு தகவல் அளித்தனர். வெள்ளியைப் போல் பளபளப்பாக உள்ள அந்த மர்மப் பொருளை ஆய்வு செய்து வருகின்றனர்.

இதுகுறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், விண்ணில் இருந்து விழுந்த பொருள் 200 கிலோ எடை உள்ளது. உலோகத்தால் ஆனது. ரொக்கெட், ஏவுகணை அல்லது விண் கல்லாக இருக்க வாய்ப்பில்லை என்பது முதல் கட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. மர்மப் பொருள் குறித்த தொடர் ஆய்வு நடைபெறுகிறது- என்றனர்.


# ஆண்களை ஆயுத முனையில் வன்புணர்வு புரியும் பெண்கள்

அதிர்ஷ்டம், அதிசய சக்தி, செழிப்பை பெறுவதற்காக ஸிம்பாப்வேயில் ஒரு பிரிவினர் ஜுஜு என்ற மந்திர பூஜை நடத்துகின்றனர். பில்லி சூனியம் போன்ற இந்த பூஜைக்காக, ஆண்களின் உயிரணுக்களை பெண்கள் திருடுகின்றனர். இதற்காக ஆண்களை கத்தி முனையில் அல்லது துப்பாக்கி முனையில் பெண்கள் பலாத்காரம் செய்கின்றனர் என்று பரபரப்புத் தகவல் வெளியாகி உள்ளது.

ஸிம்பாப்வேயில் ஹாராரேவில் கடந்த சில மாதங்களுக்கு முன் வீதியில் சென்ற வாலிபர்களை, காரில் வந்த பெண்கள் கும்பல் கத்தி முனையில் கட்டாய உறவு கொள்ள வைத்துள்ளனர். இதுகுறித்த குற்றச்சாட்டின் பேரில் 3 சகோதரிகள், ஓர் ஆண் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

இதுகுறித்து ஸிம்பாப்வே அதிகாரிகள், இந்த விடயம் குறித்து குற்றச்சாட்டுகள் வருகின்றன.

ஆனால், விசாரணையில் தாங்கள் பாலியல் தொழிலாளிகள் என்று கூறி பெண்கள் தப்பி விடுகின்றனர். மேலும், ஆண்களை பெண்கள் பலாத்காரம் செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டு எடுபடுவதில்லை. எப்படியிருந்தாலும் அது குற்றமாகவே ஸிம்பாப்வேயில் கருதப்படுகிறது''- என்றனர்.




தென்கொரியாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டில், அணு ஆயுதக் குறைப்பு மற்றும் தீவிரவாதிகளின் கைகளில் அணு ஆயுதங்கள் சிக்கிவிடாமல் பாதுகாத்தல் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. ஆனால், அணு ஆயுதப் பரவலுக்கே இந்த மாநாடு கூட்டப்படுவதாக குற்றம் சாட்டிய தென் கொரிய அணுசக்தி எதிர்ப்பாளர்கள் தலைநகர் சியோலில் ஆயிரக்கணக்கில் திரண்டு, ''அணுசக்தியே வேண்டாம்'' எனக் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# சுத்தமாக்கப்படும் உடைந்த கப்பல்

ரோம், மார்ச் 27

இத்தாலியின் பயணிகள் சொகுசு கப்பலான 'கொஸ்டா கொன்கோடியா' கப்பலின் உடைந்த பகுதியில் காணப்படும் எரிபொருளை அகற்றும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என்று இத்தாலிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் 13 ஆம் திகதி டஸ்கன் தீவில் பாறை ஒன்றில் மோதி கவிழ்ந்த கப்பலில் இருந்து இரண்டாயிரம் தொன்களுக்கும் மேற்பட்ட எரிபொருள் மற்றும் கழிவுநீர் என்பன வடிகட்டி எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல் விபத்தில் சுமார் முப்பது பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இரண்டு பேர் காணாமற் போயுள்ளனர்.

காணாமல் போயுள்ள இருவரும் உயிரிழந்திருக்கலாம் என ஊகிப்பதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் கவிழ்ந்துள்ள கப்பலை அகற்றுவதற்கு ஒருவருடம் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து குறித்த கப்பலில் இருந்த எரிபொருள்களை அகற்றும் நடவடிக்கைகள் கப்பல் உரிமையாளர்களால் மேற்கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட கப்பல் கவிழ்ந்த போது அதில் சுமார் 4 ஆயிரத்து 200 பயணிகள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மனைவியின் காதலனிடம் நஷ்டஈடு கேட்கும் கணவன்

ரோம், மார்ச் 27

கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டால் விவாகரத்து கேட்டு நீதிமன்றத்தை அணுகுவது வழக்கம். ஆனால் இத்தாலி நாட்டில் விநோத வழக்கு ஒன்று அந்த நாட்டிலேயே வழக்கத்தில் இல்லாமல் முதன் முறையாகத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கை தொடுத்து இருப்பவர் ரோம் நகரைச் சேர்ந்த 43 வயதாகும் ராணுவ வீரர் ஆவார். இவருக்கு மனைவியும், 2 குழந்தைகளும் இருக்கின்றனர்.

இவருடைய மனைவி கணவரையும், குழந்தைகளையும் ஏமாற்றிவிட்டு மற்றொருவருடன் சென்று விட்டார். இதனால் ராணுவ வீரர் தனக்கும், தனது குழந்தைகளுக்கும் ரூ.3 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று மனைவியின் காதலன் மீது வழக்கு தொடுத்திருக்கிறார்.

# அபாயத்திலிருந்து தப்பினர் விண்வெளி பணியாளர்கள்

**சிதைவுப் பொருளுடன் சர்வதேச விண்வெளி நிலையம் மோதுவதற்கான சாத்தியங்கள் கடந்த 12 ஆண்டு களில் மூன்றாவது முறையாக ஏற்பட்டுள்ளது.**

சர்வதேச விண்வெளி நிலையத்தின் பணியாளர்கள், சிதைவுப் பொருள் ஒன்றுடன் மோதுவதில் இருந்து மயிரிழையில் தப்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய ஏவுகணை ஒன்றின் குறித்த சிதைவு பொருள் தொடர்பான நகர்வு தாமதமாகக் கண்டறியப்பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த சிதைவுப் பொருள் குறைவான அச்சுறுத்தலாக இருந்த போதிலும், தாம் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொண்டதாக அமெரிக்க விமானவியல் மற்றும் விண்வெளி நிர்வாக அமைப்பான நாசா தெரிவித்துள்ளது.

சிதைவுப் பொருளுடன் சர்வதேச விண்வெளி நிலையம் மோதுவதற்கான சாத்தியங்கள் கடந்த 12 ஆண்டுகளில் மூன்றாவது முறையாக ஏற்பட்டதாக நாசா சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஜூன் மாதமும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக நாசா அமைப்பை மேற்கோள் காட்டி பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று ரஷ்யர்கள், இரண்டு அமெரிக்கர்கள் மற்றும் நெதர்லாந்து விண்வெளி வீரர் ஒருவரும் தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் பணியாற்றுகின்றனர்.

# ஒபாமாவையே சீண்டிய நபர்

அமெரிக்காவின் ஒஹயோ மாகாணத்தின் கொலம்பஸ் நகரில் நடந்த கூட்டத்தில் அதிபர் பராக் ஒபாமா பேசிக் கொண்டிருந்த சமயம், கையில் புத்தகம் வைத்திருந்த ஒருவர் அடிக்கடி உரத்து கூச்சலிட்டுக் குழப்பை ஏற்படுத்தியுள்ளார்.

''இந்தப் புத்தகத்தைப் படியுங்கள்'' என்று அவர் கேட்டுக் கொண்டே இருந்தார். ஒரு கட்டத்தில் பொறுமை இழந்த ஒபாமா, தன்னுடைய பேச்சை நிறுத்திவிட்டு குறுக்கிட்ட நபரைப் பார்த்துப் பேசினார்.

''ஐயா, ஏன் இவ்வளவு முரட்டுத்தனமாக நடந்து கொள்கிறீர்கள்?'' என்று கேட்ட ஒபாமா, ''உங்களிடம் இருக்கும் புத்தகத்தை நான் படித்துப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பினால் அதை எனக்குக் கொடுங்கள், நான் மகிழ்ச்சியோடு படிக்கிறேன். அதற்காக பேசும்போது இப்படிக் குறுக்கிடாதீர்கள், என்ன நான் சொல்வது சரியா?'' என்றார்.

தொடர்ந்து தன்னுடைய மெய்க்காவலர்களை அழைத்து, ''போங்கள் - அவரிடமிருந்து அந்தப் புத்தகத்தை வாங்கி வாருங்கள்'' என்று கட்டளை இட்டார்- ஒபாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடகொரியாவுக்கு ஒபாமா எச்சரிக்கை

சியோல்,மார்ச்27

''மிரட்டல்களால் எதையும் சாதிக்க முடியாது'' என வடகொரியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தென்கொரியத் தலைநகர் சியோலில் நேற்றும் இன்றும் நடைபெறுகின்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ உட்பட 53 நாடுகளின் தலைவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

சியோல் சென்ற ஒபாமா வட கொரியா அண்மையில் அறிவித்த ரொக்கெட் ஏவும் திட்டத்துக்குப் பின் ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு மத்தியில், இரண்டு வடக்கு மற்றும் தென் கொரியாக்களைப் பிரிக்கும் எல்லையில் அமைந்துள்ள இராணுவ சூனியப் பகுதிக்கு நேற்று முன்தினம் பயணம் செய்துள்ளார். அங்கு அமெரிக்காவின் படைமுகாமில் உள்ள வீரர்களைச் சந்தித்துப் பேசினார். தொடர்ந்து தென் கொரிய ஜனாதிபதி லீ மியுங் பக்கைச் சந்தித்துப் பேசினார்.



தென் கொரிய ஜனாதிபதி லீ மியுங் பக்கைச் சந்தித்துப் பேசியபோது .....

அதன்போது அளித்த பேட்டியில்,'' வடகொரியா தனது கடமைகளை என்னவென்று தெரிந்து கொண்டு, அதை சரியான நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்ற வேண்டும். மாறாக மிரட்டல்கள் விடுப்பதன் மூலமோ, அண்டை நாட்டைத் தூண்டி விடுவதன் மூலமோ எதையும் சாதிக்க முடியாது ''எனத் தெரிவித்தார்.

அணு ஆயுதங்கள் குற்றக் கும்பல்களுக்கும் ஆயுதக் குழுக்களுக்கும் சென்றடையாதவாறு தவிர்ப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம்.ரஷ்யா மற்றும் சீனத் தலைவர்களுடன் நடத்தும் இருதரப்பு பேச்சுக்களின் போது, அதிபர் ஒபாமா வடகொரியா மற்றும் ஈரானின் அணுத்திட்டங்கள் தொடர்பில் விவாதிப்பார் என்று அமெரிக்கத் தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

> மிரட்டல்கள் விடுப்பதன் மூலமோ, அண்டை நாட்டைத் தூண்டி விடுவதன் மூலமோ எதையும் சாதிக்க முடியாது.

## தலாய் லாமா ஒரு 'நாஸி' என்கிறது சீனா



பீஜிங், மார்ச் 27

அமெரிக்காவின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நாஸி என திபெத்திய ஆன்மிக தலைவரான தலாய் லாமாவை சீன அரச ஊடகமொன்று விமர்சித்துள்ளது. அத்துடன் அவர் திபெத்தியர்களைத் தீக்குளிப்பதற்குத் தூண்டுவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

தீக்குளிப்பவர்களை அவர்களின் துணிச்சலுக்காக புகழ்வதன் மூலமும் தற்கொலை செய்துகொண்டவர்களுக்கு மதிப்பளிப்பதற்காக பண்டிகை கொண்டாட்டங்களை ரத்துச் செய்வதற்கு அழைப்பு விடுப்பதன் மூலமும் தீக்குளிப்பதை தலாய் லாமா ஊக்குவிக்கிறார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இரண்டாம் உலக யுத்த காலத்தில் கட்டுப்பாடின்றி குரூரமாக இயங்கிய நாஸிகளை (ஹிட்லரின் கட்சி) நினைவுபடுத்துவதாகவும் ஹிட்லரால் யூதர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பேரழிவுகளை ஒத்ததாக உள்ளதெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## பாகிஸ்தான் அணு உலைகள் பாதுகாப்பாகவே உள்ளன

இஸ்லாமாபாத், மார்ச் 27

பாகிஸ்தானில் உள்ள அணுசக்தி நிலையங்கள் மிகவும் பாதுகாப்பான நிலையில் இருக்கின்றன என்று அந்தநாடு தெரிவித்துள்ளது. இந்தநிலையில், ஆசிய மண்டலத்தில் ஸ்திரத்தன்மை நிலவ வேண்டுமானால், பாகிஸ்தான் மீதான அணுசக்தி தடை நீக்கப்பட வேண்டும் வேண்டும் என அந்நாட்டுப் பிரதமர் கிலானி தெரிவித்துள்ளார்.

தென்கொரியத் தலைநகர் சியோலில், சர்வதேச அணுசக்திப் பாதுகாப்பு மாநாடு நடப்பதையொட்டி, பாகிஸ்தானில் நிலவி வரும் தீவிரவாத அச்சுறுத்தல்களால் அந்நாட்டு அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பு குறித்து, இந்தியா கவலை தெரிவித்திருந்தது.

இதற்குப் பதிலளித்த தென் கொரியாவுக்கான பாகிஸ்தான் தூதர் ஷவுகத் முகாதம், இந்த விடயத்தில் எவ்வித பயமும் தேவையில்லை. பாகிஸ்தானின் அனைத்து அணுசக்தி நிலையங்களும் மிகவும் பாதுகாப்பான நிலையில் இருக்கின்றன. புக்குஷிமா சம்பவத்திற்குப் பின், அவையனைத்தும் மீண்டும் ஒரு முறை பரிசோதிக்கப்பட்டு விட்டன - என்றார்.


மெக்ஸிக்கோ சென்றிருக்கும் 16 ஆவது புனித பாப்பரசர் அந்த மாநில மக்கள் மத்தியில் உரையாற்றுகிறார்.

## மரணமான இராணுவ வீரரை திருமணம் செய்யவுள்ள காதலி



அல்குவைதா தீவிரவாதியுடனான துப்பாக்கிச் சண்டையில் மரணம் அடைந்த வீரரை, அவரது கர்ப்பிணி காதலி திருமணம் செய்துகொள்ள திட்டமிட்டுள்ளார். இதனால் பிரான்ஸில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. பிரான்ஸில் கடந்த வாரம் முகமது மெரா என்ற 23 வயது தீவிரவாதி ஏ.ரி. எம். இயந்திரத்தில் கொள்ளை அடிக்க முயன்றார். அதைத் தடுக்கச் சென்ற துணை ராணுவத்தினர் மீது சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

பின்னர் பள்ளியில் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இந்த 2 சம்பவங்களிலும் துணை ராணுவ வீரர் அபெல் சென்னூப், 3 பள்ளிக் குழந்தைகள், ஆசிரியை உள்பட 7 பேர் பரிதாபமாக இறந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் இறந்த வீரர் அபெல் சென்னூப்பின் 21 வயது காதலி கரோலின் மோனெட். இப்போது அவர் கர்ப்பமாக இருக்கிறார். இறந்த தனது காதலனை சட்டப்படி திருமணம் செய்து கொள்ள அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளார். இறந்த ஒருவருடன் திருமணம் செய்து கொள்வது வழக்கத்தில் இல்லாதது. ஆனால், சில அசாதாரண சூழ்நிலையில் இதுபோன்ற திருமணத்துக்கு அனுமதி அளிப்பது அதிபரின் முடிவை பொறுத்தது.

இதற்கு முன் இறந்த பொலிஸார் இருவரின் காதலிகளுக்கு இதுபோல் திருமணம் நடந்துள்ளது. இதுபோன்ற திருமணத்தின் போது மணமகள் இருக்கைக்கு அருகில் மற்றொரு இருக்கை அமைக்கப்படும். அதில் மணமகன் இருப்பது போல் நினைத்து திருமண சடங்குகள் நடக்கும். இதன்மூலம் பிறக்க போகும் குழந்தைக்கு சட்டப்பூர்வமான தந்தையாக சென்னூப் கருதப்படுவார்.

## எகிப்தில் பழைமைவாதிகள் செல்வாக்கு இடதுசாரிக் கட்சிகள் அதிருப்தி

எகிப்தில் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குழுவில் பழைமைவாத இஸ்லாமியர்களின் ஆதிக்கம் அதிகளவில் இருப்பதாக, முற்போக்கு இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

எகிப்தில் அதிபராக இருந்த ஹோஸ்னி முபாரக் வெளியேற்றப்பட்ட பின், கடந்த ஆண்டின் இறுதியில், நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடந்தது. அதையடுத்து, புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

100 உறுப்பினர்கள் கொண்ட இந்தக் குழுவில் 50 பேர் நாடாளுமன்றில் இருந்தும், 50 பேர் அறிஞர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், தொண்டு ஆர்வலர்கள் எனவும் நியமிக்கப் படுவர். நாடாளுமன்றில் , தற்போது இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தின் விடுதலை மற்றும் நீதிக் கட்சி, பெரும்பான்மை இடத்தைப் பெற்றுள்ளது.

அதையடுத்து, பழைமைவாத இஸ்லாமிய கட்சியான அல் நூர் உள்ளது. அரசியலமைப்புக் குழுவில், அல் நூர் கட்சிக்கு, 40 சதவீதம் ஆதரவு இருப்பதாக, அல் அஹ்ரம் பத்திரிகை தெரிவித்துள்ளது. இதையடுத்து, எகிப்திய விடுதலைக் கட்சி மற்றும் இடதுசாரியான டகம்மு கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் , அரசியலமைப்புக் குழுவை, பழைமைவாத இஸ்லாமியர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர முயல்வதாகக் குற்றம் சாட்டினர்.

## பஸ் விபத்து 19 பேர் சாவு

அல்ஜீரஸ், மார்ச் 27

அல்ஜீரியாவில் பஸ் ஒன்று மலை இடுக்கில் வீழ்ந்ததில் 19 பேர் உயிரிழந்துள்ளனர்; 30 பேர் படுகாயமடைந்தனர்.

அல்ஜீரியத் தலைநகர் அல்ஜீர்ஸ் அருகேயுள்ள டியாரட் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் மலை இடுக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

[illegible] லாம் என்று நம்பப்படுகிறது.

## ஆப்கனில் அமெ.சிப்பாயால் இறந்தவர்களுக்கு நட்டஈடு

காபூல், மார்ச் 27

ஆப்கானிஸ்தானின் கந்தகார் பிராந்தியத்தில் அமெரிக்கப் படைச்சிப்பாய் ஒருவரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் பலியான 17 பேரின் குடும்பங்களுக்கும் நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளன என்று ஆப்கானிஸ்தான் அதிகாரிகளும் பழங்குடியினத் த்லைவர்களும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க இராணுவத்தினரால் இந் நஷ்டஈடு வழங்கப்பட்டது என கந்தகார் மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கந்தகார் பழங்குடியின தலைவர்களில் ஒருவரும் கந்தகார் மாகாண சபை உறுப்பினருமான ஹாஜி அகாலாலை உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் தலா 50,000 டொலர்கள் வீதமும் காயமடைந்தோருக்கு தலா 11,000 டொலர்கள் வீதமும் வழங்கப்பட்டன என அந்தக் குடும்பங்களின் மூத்த அங்கத்தவர்கள் என்னிடம் தெரிவித்தனர்'- என்றார்.

## திருடர்களை காட்டிக் கொடுத்த 'பேஸ்புக்'

ரோம், மார்ச் 27

இத்தாலியின் வெனிஸ் நகரிலுள்ள உணவுவிடுதியொன்றில் கணினி மற்றும் பொருள்களைத் திருடிய நபர்களை அதன் உரிமையாளர்கள் 'பேஸ் புக்' உதவியுடன் கண்டறிந்துள்ளனர்.

திருடர்களைக் கண்டறிய பொலிஸார் திணறிக் கொண்டிருந்த நிலையில், அந்தத் திருட்டுச் சம்பவத்தின்போது கண்காணிப்புக் கமெராவில் பதிவாகியிருந்த நபர்களின் படங்களை உணவு விடுதியின் உரிமையாளர் டென்னிஸ் மொன்டினோ அவ் விடுதியின் 'பேஸ் புக்' பக்கத்தில் வெளியிட்டார்.

அதையடுத்து இரு நாள்களில் திருடர்கள் அடையாளம் காணப்பட்டனர். '' நான் பொலிஸாரை விமர்சிக்கவில்லை.

ஆனால் இந்தக் காலத்தில் மிக விரைவான, நவீன முறைமைகள் இருக்கும் போது அதைப் பயன்படுத்துவது அவசியம்'' என டென்னிஸ் மொனிட்டோ கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய விண்கலத்தை இந்திய ரொக்கட்டில் ஏவ இணக்கம்

சியோல், மார்ச்.27

தென்கொரிய செயற்கைக் கோள்களை இந்திய விண்கலங்கள் மூலம் விண்ணில் ஏவ இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

தென் கொரிய தலைநகர் சியோலில் நடைபெறும் அணுஆயுத பாதுகாப்பு உச்சி மாநாட்டுக்காக நான்கு நாள் பயணமாக அங்கு சென்றுள்ள பிரதமர் மன் மோகன் சிங், நேற்றுமுன்தினம் சியோல் வந்தடைந்த போது, அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தலைநகர் சியோலில் தென்கொரிய அதிபர் லீ மையுங் பக், இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் இருவரும் கூட்டாக நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.



மாநாட்டில் தொடர்ந்து பிரதமர் தெரிவித்ததாவது:

இருநாடுகளும் அரசியல், பாதுகாப்புத் துறைகளில் கூட்டுறவை வலுப்படுத்த முடிவு செய்துள்ளோம். கடந்த 2 ஆண்டுகளில் இருநாட்டு வர்த்தகப் பரிமாற்றம் 65 சதவீதம் அதிகரித்துள்ளது. பொருளாதார உறவுகளை மேலும் மேம்படுத்தவும் உறுதி பூண்டுள்ளோம். வர்த்தக பரிமாற்றத்தை எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் 2 லட்சம் கோடி ரூபாவாக உயர்த்தவும் இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

இதுதவிர, பயங்கரவாத எதிர்ப்பு, அணுசக்தி பாதுகாப்பு ஆகியவற்றிலும் இருநாடுகளும் இணைந்து செயற்படுவோம். அறிவியல், தொழில்நுட்பத் துறை யிலும் கூட்டு முயற்சிகளை அதிகரிப்போம். தென் கொரியாவின் செயற்கைக் கோள்களை இந்திய விண் கலங்கள் மூலம் அனுப்புவதற்கு இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது. அதேபோல் தென்கொரிய நிறுவனங்கள் அதிகளவில் இந்திய உள்கட்டமைப்புத் துறையில் முதலீடு செய்ய முன் வர வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது - என் றார் அவர்.

இதேவேளை அணுசக்தி மாநாட்டில் பாகிஸ்தான் பிரதமர் கிலானியை பிரதமர் மன்மோகன் சிங் சந்தித்து பேசுவார் என்று தெரிகிறது. எனினும், இவர்களின் சந்திப்புக்கு அதிகார பூர்வமாக கூட்டம் எதுவும் ஏற்பாடு செய்யப்படவில்லை என்று தகவல்கள். தெரிவிக்கின்றன. (வ)

## ராணுவத் தளபதிக்கு லஞ்சம் கொடுக்க முயற்சி

### சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவு



டில்லி, மார்ச்.27

ராணுவத்தளபதிவி.கே.சிங்குக்கு ரூ.14 கோடி லஞ்சம் கொடுக்க முயற்சி நடந்ததாக செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று எதிர்கட்சி உறுப்பினர்கள் கடும் அமளியில் இறங்கினர். இதனால் நண்பகல் 12மணி வரை அவை ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையில் இந்த குற்றச் சாட்டு குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்த பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி உத்தரவிட் டுள்ளார். ராணுவத் தளபதி வி.கே.சிங், ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், தரம் குறைந்த வாகனங்களை வாங்க ரூ.14 கோடி லஞ்சம் கொடுக்க ஒருவர் முன்வந்தார் என்று குற்றம் சாட்டியிருந்தார். இந்த விவகாரம் நேற்று நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் எதிரொலித்தது. கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து விட்டு, ராணுவத் தளபதி குற்றச் சாட்டுக் குறித்து விவாதிக்க வேண்டும் என்று பா.ஜ. உள்ளிட்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். இதற்கு அனுமதி வழங்கப் படவில்லை. இதனால் இரண்டு அவை களிலும் கடும் அமளி நிலவியது. இதைத் தொடர்ந்து இரண்டு அவைகளும் நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன. இதற்கிடையில் இந்த குற்றச்சாட்டு குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோணி உத்தரவிட்டிருப்பதாக ராணுவ அமைச்சகம் அறிவித்துள்ளது. (வ)

## ஆற்றி மூழ்கி குழந்தைகள் 3 பேர் சாவு

உத்தரப்பிரதேச மாநிலம் ஸ்ராவஸ்தியில் உள்ள இகவுனா பகுதியில் அமைந்துள்ள ரப்தி ஆற்றில் குளித்த மூன்று குழந்தைகள் ஆற்றில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுகுறித்து அந்த மாநில துணைப்பிரிவு மஜிஸ்திரேட் கங்கா ராம் குப்தா தெரிவித்ததாவது:

உயிரிழந்த மூன்று குழந்தைகள் சுஜித் மிஸ்ரா (வயது 13 ), சிவம் மிஸ்ரா (வயது12 ) மற்றும் சுபம் மிஸ்ரா (வயது 14 ) ஆகியோர் குளிக்க சென்றபோது ஆற்றில் மூழ்கி இறந்துள்ளனர். (வ)



லக்னோவில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில், சமாஜ்வாடி கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த இளைஞர்களைச் சந்தித்துப் பேசினார் உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வர் அகிலேஷ் யாதவ்.

## கூடங்குளம் விவகாரம்
## கலாமுக்கு கறுப்புக் கொடி

இந்தூர், மார்ச்.27

கூடங்குளம் அணு உலைக்கு ஆதரவு தெரிவித்து வருவதை கண்டித்து முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு மத்திய பிரதேசத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக அந்தப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ரஷ்ய தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த அணு உலை மிகவும் பாதுகாப்பானது என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்திருந்தார். இதனை கூடங்குளம் போராட்டக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தநிலையில் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஒப் மேனேஜ் மென்ட் கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் மத்தியில் உரை நிகழ்த்துவதற்காக அப்துல் கலாம் நேற்று முன்தினம் இந்தூருக்குச் சென்றார். கல்லூரி வளாகத்துக்கு அப்துல் கலாம் சென்றபோது, ஆசாதி பச்சோ அந்தோலன் என்ற தன்னார்வ அமைப்பைச் சேர்ந்த பலர் திடீரென கலாமுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டினர்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற் பட்டது. எதிர்பாராத இந்த சம்பவத்தால் கல்லூரி நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். பொலிஸார் விரைந்து செயல்பட்டு கறுப்பு கொடி காட்டிய 10 பேரை கைது செய்தனர். (வ)

## 6 வயதில் தொலைந்தவர் 30 வயதில் மீண்டும் வீடு திரும்பிய அதிசயம்

### குடும்பத்தை இணைத்து வைத்தது 'பேஸ்புக்'

ஆறுவயதில் தொலைந்துபோன சிறு வன் 24 ஆண்டுகளுக்குப் பின்னர் பேஸ் புக் உதவியுடன் தனது குடும்பத்துடன் இணைந்த விசித்திரமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 24 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய பிரதேச மாநிலம் கண்ட்வா நக ரத்தைச் சேர்ந்த 6 வயது சிறுவன் ஷெரு, தனது அண்ணன்களுடன் ரயிலில் பயணம் செய்யும் போது தொலைந்து போனான்.

தொலைந்து போன சிறுவன் கொல்கத்தாவில் ஒரு பிச்சைக்கார கும்பலிடம் அகப்பட்டுஅவதிப்பட்டான். பின்னர், அங்கிருந்து தப்பித்து ஒரு மீனவர் குடும்பத்தில் இணைந்தான்.

அவர்கள் சிறுவன் ஷெருவை ஆஸ்திரேலியா தம்பதிக்கு தத்துக்கொடுத்தனர். அவனுக்கு ஷாரு ப்ராலி என்று பெயரிட்டனர். பி.பி. ஏ படித்து முடித்து விவசாயத்தில் ஷாரு ப்ராலி ஈடுபட்டார்.

இருப்பினும், தனது தாய் மற்றும் குடும்பத்தினரைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை அவனது மனதில் இருந்தது. தனது அண்ணன்கள், தங்கை மற்றும் தாயுடன் எடுத் துக் கொண்ட சிறுவயது புகைப்படம் மட் டுமே அவன் கையில் இருந்தது.

கடந்த 4 ஆண்டுகளாக இணையத் தளத்தின் உதவி யுடன் தனது சொந்த ஊரை சாரு ப்ராலி தேடினார். பர் ஹான்பூர் என்பது மறந்து போய் பிரம்மாபூர் என்று தேடியதால் ஊரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பின் னர், கூகுள், கூகுள் ஏர்த் போன்ற இணையத் தளங்கள் உதவியுடன் தனது சொந்த ஊரான பர்ஹான்பூரைக் கண்டுபிடித்தார்.



அந்தப் பிரதேசத்தவர்களை பேஸ்புக் இணையத்தள உதவியுடன் தொடர்பு கொண்டார். தனது வீடு இருந்தது கண்ட்வா பகுதி என்பதை கண்டு பிடித்த ஷாரு ப்ராலி கடந்த மாதம் ஆஸ்திரேலியாவில் இருந்து அங்கு வந்தார். அந்தப் பிரதேசமே மாறிப் போய் இருந்தது. இதற்கிடையே தாயைத் தேடி ஷாரு ப்ராலி வந்துள்ள தகவல் பக்கத்து வீதியில் வசிக்கும் தாய் பாத்திமா வுக்கு தெரிந்தது. பாத்திமா தனது மகன் ஷாரு ப்ராலியை அங்குவந்து அடையாளம் கண்டு கொண்டார். இருவரும் கண்ணீர் மல்க சந்தித்துக் கொண்டனர்.

இந்தி மறந்துவிட்டதால் தாய் அன்போடு அரவணைத்து முத்தமிடுவது ஷாருவுக்குப் புரியவில்லை. அதே போல், ஷாரு பேசும் ஆங்கிலம் பாத்திமாவுக்கு புரியவில்லை. பின்னர், தனது அண்ணன் கல்லு, தங்கை சகிலா ஆகியோருடன் சில நாள்கள் இருந்து விட்டு ஷாரு ப்ராலி மீண் டும் கவலையுடன் ஆஸ்திரேலியா பயணமானார். (வ)

## ஆசியாவின் மிகப்பெரிய மலர்த்தோட்டம்

ஆசியாவிலேயே மிகப் பெரிய டுலீப் மலர் தோட்டம் காஷ்மீரில் இன்று செவ்வாய்க்கிழமை திறக்கப்படுகிறது.

இது குறித்து பூங்காவின் இணை இயக்குநர் ஜாவித் அகமது ஷா தெரிவித்ததாவது:

கடந்த 2008ஆம் ஆண்டு ஜாபர்வான் மலைப் பகுதிக்கும், டால் ஏரிக்கும் 12 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்திரா காந்தி நினைவு டுலீப் மலர் பூங்காவில் மொத்தம் 2 கோடிக்கும் அதிகமான மலர்கள் பூத்துள்ளன. இந்த மாத இறுதிக்குள் மேலும் கூடுதலாக 8 வகை மலர்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. கடந்த ஆண்டு பருவநிலை சாதகமாக இருந்தது.

இதேவேளை மலர் கண்காட்சி அரங்கம் முழுவதும் ஹைடெக் பாலிமர் அரங்கம் அமைக்கப்பட்டது. அதிக மழை மற்றும் வெயில் காரணமாக மூன்று முதல் நான்கு வாரகால இடைவெளியில் மலர்கள் வாடி [illegible] கொண்டன. [illegible] பருவ நிலை சீராக இருக்கும் என்று நம்புகிறோம் - என்றார் அவர்.

## ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் பயணச் செலவு ரூ.205 கோடி



டில்லி,மார்ச்.27

ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு 205 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தகவல் அறியும் உரிமைச்சட்ட ஆர்வலர்கள் திரட்டிய விவரத்தின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரதிபா பாட்டீல் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்வதற்கான செலவு விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் திரட்டியுள்ளனர். இது தொடர்பான தகவல்களை தர பல அரசு துறைகள் மறுத்தபோதும் நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் தகவல்களை ஆர்வலர்கள் பெற்றுள்ளனர்.

இந்தத் தகவல்களின் படி, கடந்த 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பிரதிபா பாட்டீல் இதுவரை 12 முறை வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளார். 22 நாடுகளில் 79 நாள்கள் அவர் சுற்றுப் பயணம் செய்துள்ளார். வெளிநாடுகளுக்குச் செல்லும்போது ஏர் இந்தியா நிறுவனத்தின் போயிங் 747,400 ரக விமானம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பூட்டானுக்கு இதற்காக ஏர் இந்தியாவுக்கு பாதுகாப்புத் துறை ரூ.169 கோடி வாடகையாகச் செலுத்தி உள்ளது. இதுதவிர வெளிநாடுகளில் ஜனாதிபதி மற்றும் அவருடன் சென்றவர்கள் தங்குவதற்கு, வாகனத்தில் செல்வதற்கு வெளியுறவுத்துறை ரூ.36 கோடி செலவிட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொக்கா- கோலா வலையமைப்பில் மிகச் சிறந்த தொழிற்சாலை தெரிவு

கொக்கா - கோலா நிறுவனத்தின் பெருமதிப்பிற்குரிய உற்பத்தி நிபுணத்துவம் விருதினை வென்று, உற்பத்திப் பிரிவில் கொக்கா-கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா (CCB SL), தனது அடையாளத்தை நிரூபித்துள்ளது.

முதற்தர மற்றும் உற்பத்தி நியமங்கள் என்பவற்றை எட்டுவதில் எல்லையற்ற அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாகவே இந்த உற்பத்தி நிபுணத்துவ விருது கிடைத்துள்ளது. அத்துடன்,புதிய மேம்படுத்தப்பட்ட உற்பத்தி தொழில் உத்திகள், தரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களை எட்டுவதற்கான அர்ப்பணிப்பு என்பன சார்ந்த நிறுவனத்தின் முயற்சிக்கும் அங்கீகாரத்தை வழங்குகின்றது.




எங்களுடைய முயற்சிகள் மற்றும் கடும் உழைப்புக்கு பயனாக இந்த விருது கிடைத்துள்ளது. TPM இனை ஆரம்பித்தல் மற்றும் இந்த துறையில் கிடைக்கும் தரச்சான்றிதழான FSSC 22000 இனை பெற்ற முதல் தொழிற்சாலை என்ற வகையில், எங்களுடைய வலையமைப்புக்குள் இலங்கை தொழிற்சாலை சிறந்த உற்பத்திக்கான இலக்கினை நிரூபித்துள்ளோம். இது எமக்கு பெருமைக்குரிய விருதாகும். இந்த வெற்றி எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என CCBSL இன், தேச விநியோகத் தொடர் முகாமையாளர், இந்திக்க பெரேரா தெரிவித்தார்.

இந்தியாவின், புதுடில்லியில் இடம்பெற்ற இந்திய வர்த்தகப் பிரிவு விருதுகளில், பிரதிநிதித்துவம் செய்த சுமார் 63க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளில்,கடும் போட்டிக்கு மத்தியில் உற்பத்தி நிபுணத்துவ விருதினை கொக்கா-கோலா இலங்கை வென்றுள்ளது. பின்வரும் தரத்தின் அடிப்படையிலேயே நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தொழிற்சாலையின் திறன், பொறியியல் திறன், உற்பத்தி மற்றும் பொதியிடல் திறன், ஆலைக்குள் காட்சி மேலாண்மை மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகள் வெகு குறைவாக இருத்தல், போட்டியிடும் தொழிற்சாலைகளில் பெறப்பட்ட சான்றிதழ்கள் அதனுடன் ஒவ்வொரு பிரிவிலும் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணத்துவம் மற்றும் உற்பத்திப் பிரிவில் சிறந்த தொழிற்சாலையாக கொக்கா-கோலா இலங்கை மிகவும் முக்கியமான வெற்றியை அடைந்துள்ளது.

# பிறக்கும்போதே செல்வம்

இலங்கையின் முன்னணி குழுமங்களில் ஒன்றான பார்ட்லீட் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான, பார்ட்லீட் ஃபினான்ஸ் நிறுவனத்தின் மூலம், இலங்கையில் பிறந்திடும் ஒவ்வொரு குழந்தைக்கும் பண வைப்புடன் கூடிய சிறுவர் சேமிப்பு கணக்கொன்றை வழங்கும் நோக்கில் 'பிலிந்து' சிறுவர் சேமிப்புக் கணக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


இந்த அறிமுக நிகழ்வு, பார்ட்லீட் நிறுவனத்தின் தலைவர் தர்மதீரசிங்க மற்றும் பிரபல சிறுவர்களுக்கான சிறுகதை எழுத்தாளர் திருமதி சிபில் வெத்தசிங்க ஆகியோரின் பங்குபற்றலுடன் கொழும்பு காசல் மகப்பேற்று மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

பார்ட்லீட் சிறுவர் சேமிப்பு கணக்கு அறிமுக நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுகாதார சேவை பிரிவின் பணிப்பாளர் கலாநிதி அஜித் மெண்டிஸ் மற்றும் நிறுவனத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

'பிறக்கும் போதே செல்வம்' எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக பார்ட்லீட் 'பிலிந்து' சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், இந்த நாட்டு வாடிக்கையாளர்களின் அடிப்படை நிதித் தேவைகளுக்கான சேவைகளை வழங்க பார்ட்லீட் ஃபினான்ஸ் நிறுவனம் சேமிப்புக் கணக்கு துறையில் தடம் பதித்ததன் மூலம் ஆகும். பிறந்த நாள் முதல் 5 வயது பூர்த்தியாகும் வரை நடைமுறையில் வைத்திருக்கக்கூடிய பார்ட்லீட் 'பிலிந்து' சிறுவர் சேமிப்பு கணக்குக்கு மேலதிகமாக, 5 வயது முதல் 12 வயது வரையிலான சிறுவர்களுக்காக பார்ட்;லீட் 'பிந்து' மற்றும் 12 வயது முதல் 18 வரையிலான சிறுவர்களுக்காக பார்ட்லீட் 'ஸ்மார்ட் டீன்' என மேலும் இரு சேமிப்புக் கணக்குகளையும் அறிமுகம் செய்துள்ளது. (த)

# சிங்கரின் புதிய அறிமுகம்

இந்தியாவின் முன்னணி பல்துறை வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான கோத்ரேஜ், அதன் உயர் தொழில்நுட்பத்திறனில் அமைந்த கோத்ரேஜ் குளிர்சாதனப் பெட்டிகளை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. இதற்காக இலங்கையில் தனது விநியோக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காக முன்னணி இலத்திரனியல் பொருள்கள் விற்பனை வர்த்தக நிறுவனமான சிங்கருடன் கைகோர்த்துள்ளது.



புதிய பாணியில் அமைந்த, பல வர்ணத்தெரிவுகளை கொண்ட, உயர் நவீன தொழில்நுட்பங்களுக்கமைவாக தயாரிக்கப்படும் இந்த கோத்றேஜ் குளிர்சாதனப் பெட்டிகள் (ஈஒன்) EON எனும் வர்த்தக நாமத்தில் பல தெரிவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மொத்த புரள்வு பெறுமதியைக் கொண்ட கோத்றேஜ் நிறுவனம், அர்தேஷிர் கோத்றேஜ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். சுமார் 60இற்கும் அதிகமான நாடுகளில் செயற்பாடுகளை கொண்ட இந்த நிறுவனம், 25வீதமான வர்த்தகங்கள் வெளிநாடுகளிலிருந்து வருகைதருகிறது. 1958ஆம் ஆண்டு, இந்தியாவின் முதல் குளிர்சாதனப்பெட்டிகள் தயாரிப்பு நிறுவனம் எனும் பெருமையுடன் தனது குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. இந் நிறுவனம் முதலாவது 100 வீதம் சிஃஎப்சி அற்ற குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிப்பில் ஈடுபட்டிருந்ததுடன், தற்போதும் சூழல் பாதுகாப்பான உயர் தொழில்நுட்பத்துடன் அமைந்த குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிப்பில் ஈடுபடும் அனுமதி உரிமையை கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. கோத்றேஜ், நிறுவனம் வருடாந்தம் 1.3 மில்லியன் குளிர்சாதனப் பெட்டிகளை ஆரம்ப நிலையிலிருந்து அதியுயர் திறன் வாய்ந்த குளிர்சாதனப்பெட்டிகள் வரை தயாரித்து வருகிறது. இந்நிறுவனத்தின் தயாரிப்புகள் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் அதிகளவு விற்பனையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கோத்றேஜ், நிறுவனத்துடன்ன் கைகோர்த்திருந்தமை குறித்து சிங்கர் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், ''இந்தியாவில் வாடிக்கையாளர் தயாரிப்புகளின் முன்னோடிகள் எனும் நாமத்துக்கு அமைவாக கோத்றேஜ், எனும் உயர் தரம் வாய்ந்த நிறுவனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்''- என்றார். (த)

# 3எம் நிறுவனத்தின் முதலாவது தொழில்நுட்ப சேவை நிலையம்

3எம் லங்கா நிறுவனம் தனது முதலாவது வாடிக்கையாளர் தொழில்நுட்ப சேவை நிலையத்தை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்திருந்தது. இதன் மூலம் தனது முழுமையான சேவை விவரங்களை வாடிக்கையாளர்கள் ஒரே கூரையின் கீழ் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச நிறுவனமொன்றின் மூலம் இலங்கையில் நிறுவப்படும் முதலாவது தொழில்நுட்ப சேவை நிலையமாக இது அமைந்துள்ளது. 3எம் இந்தியா மற்றும் இலங்கைக்கான முகாமைத்துவப் பணிப்பாளர் அஜய் நானாவட்டி இந்த நிலையத்தை திறந்து வைத்திருந்தார்.

சுமார் 1000 பொருள்களுக்கு மேலதிகமாக கொண்ட 3எம் நிறுவனத்தின் வாடிக்கையாளர் தொழில்நுட்ப சேவை நிலையத்தில் வாடிக்கையாளர்கள் முன்னொரு போதும் அனுபவித்திராத பொருள்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. 3எம் இன் ஆறு பரந்த




தொழில்துறை சார்ந்த பிரிவுகளில் பொருள்கள் செயன்முறை விளக்கங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்படுவதால், வாடிக்கையாளர்கள் 3எம் பொருள்கள் குறித்த தெளிவான விளக்கங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

3எம் நிறுவனத்தின் இலங்கை மற்றும் இந்தியாவுக்கான முகாமைத்துவ பணிப்பாளர் அஜய் நானாவட்டி இந்த நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவத்தில் கருத்து வெளியிடுகையில், '3எம் போன்ற நிறுவனம் எப்போதும் தொடர்ச்சியான கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ள வகையில் அவற்றை வழங்கி வருவதில் அதிகம் அக்கறை செலுத்துகிறது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இதை செய்ய முடிவது, உள்ளூர்மயமாக்கலின் மூலமாகும். இலங்கையில் நாம் ஆரம்பிக்கும் இந்த தொழில்நுட்ப சேவை நிலையம் இதன் ஒரு படியாகும். இதுபோன்று எதிர்காலத்திலும் இலங்கையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையங்களை நிறுவ திட்டமிட்டுள்ளோம்' என்றார்.

(த)



யாழ். நகரில் எரிபொருள் விற்பனை நிலை யம் ஒன்று மக்கள் பாவனைக்கென திறந்து வைக்கப்பட் டுள்ளது. கஸ்தூரியார் வீதியில் வின்சர் தியேட்டர் சந்தி பகுதியில் இந்த எரிபொருள் விற்பனை நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

இதன் மூலம் நகருக்கு வரும் வாகனங்கள் எரிபொருள் நிரப்புவதில் ஏற்படும் காலதாமதம் ஓரளவு தவிர்க்கப் பட்டுள்ளது.

(த-17)

# அரச வர்த்தக கூட்டுத்தாபனம்- எடிசலாட் இணைந்து கல்வியில் புதிய புரட்சி

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்துடன் இணைந்து எடிசலாட் அறிமுகப்படுத்தியுள்ள 'வெப் பாட்டஷாலா' மூலம் இலங்கையின் கல்வி முறைமையில் புதிய புரட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலத்திரனியல் கற்கை (ஈ-லேர்னிங்) முறையானது இதன் மூலம் இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 3000இற்கும் அதிகமான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு முன்னிலையில் அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட இந்த திட்டமானது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக மாணவர்களுக்கு இது ஒரு டிஜிட்டல் கல்விக்கூடமாகவும், ஆசிரியர்களுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளை இலகுவாக்கும் ஒரு கையேடாகவும் பயன் தரக்கூடியது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், எடிசலாட், இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் பலரும் இந்த அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த ஈ-லேர்னிங் திட்டத்தை கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கை எடிசலாட் வகித்திருந்தது. அத்துடன் தனது அதிவேக இணையத்தள சேவையான 3.75ஜி மொபைல் இணைய வலையமைப்பு சேவையின் மூலம் இத்திட்டத்துக்கு அவசியமான இணைய பாவனையை வழங்க முன்வந்துள்ளது. கல்வி அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் தேசிய கல்வி நிறுவனம் (என்ஐஈ) மூலம் முன்னெடுக்கப்படும் அதியுயர் கல்வித்தரங்களுக்கு அமைவானதாக பொருளடக்கங்கள் அடிக்கடி மீளாய்வு செய்யப்படும். தேசத்தின் கல்வித்தராதரங்களை நிர்ணயிக்கும் அமைப்பான தேசிய கல்வி நிறுவனத்தின் மூலம் அனைத்து பொருளடக்கங்களும் நிர்ணயிக்கப்பட்ட தராதரங்களுக்கு அமைவானது என்பதை உறுதி செய்யும்.

இலங்கையின் நடைமுறையிலுள்ள கல்வித்திட்டம் எதிர்கொண்டுள்ள சிக்கல்களுக்கு தீர்வு காணும் வகையில் இந்த ஈ-லேர்னிங் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தற்போதைய கல்வி திட்டத்தில் காணப்படும் பிரதான குறைபாடாக, கற்பிக்கும் ஆசிரியர் குழாம் மத்தியில் காணப்படும் ஐயப்பாடு மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் வளப்பற்றாக்குறை போன்றன அமைந்துள்ளன. 'வெப் பாட்டஷாலா' மூலம் மாணவர்களுக்கு கல்வி சார் விடயங்களை அணுக பெருமளவான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆசிரியர்களின் திறனையும், அறிவையும் விருத்தி செய்து கொள்ளக்கூடிய வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கும் வகையில், வெப் பாட்டஷாலா திட்டம் கொண்ட நோட்புக் பீசி வகைகள் நாடு பூராகவுமுள்ள 342 தேசிய பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்ச் சிந்தனை

(4)

தன்னம்பிக்கை உள்ளவர்கள் எப்போதுமே இந்த உலகம் நல்லதாக இருக்க வேண்டும்; எல்லோரும் இன்பமாக வாழ வேண்டும் என்றுதான் நினைப்பார்கள்.

ஆனால் தன்னம்பிக்கை இல்லாதவர்களோ, 'இந்த உலகம் அழிய வேண்டும்!' 'யாருக்குமே நல்ல வேலை கிடைக்கக்கூடாது', 'நல்ல வேலையில் இருப்பவர்களும் சீக்கிரமே வேலையை விட்டு வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். காரணம் தன் வாழ்வின் ஏமாற்றத்தை, இழப்பை அவர்கள் தாங்கிக் கொள்ள முடியாமல், எப்போதும் பிறருக்கும் சாபம் விட்டுக் கொண்டிருப்பார்கள்.

அம்மாதிரி சமூகத்தைப் பழித்துப் பேசிக் கொண்டிருப்பவர்களை, சமூக அவலத்தையே சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பவர்களைத் தவிர்த்து விடுங்கள்.

ஒருவன் வாழ்க்கையில் முன்னேறினால் தன்னம்பிக்கை உள்ளவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? அவன் உழைப்பால் முன்னேறியிருக்கிறான் என்று சொல்வார்கள். ஆனால் தன்னம்பிக்கை இல்லாதவர்கள் 'அவன் ஏதோ தில்லுமுல்லு வேலை செய்து பணம் சம்பாதித்திருக்கிறான்' என்று எப்போதுமே அடுத்தவர் மீது சந்தேகம் கொள்பவர்களாகவே காணப்படுகிறார்கள்.

ஒருவன் ஒரு உயர்ந்த இடத்தைப் பெறுவதைப் பார்த்தால் அதற்கான தகுதி அவனுக்கு இருப்பதாக நம்புங்கள். அந்த நம்பிக்கை உங்களுக்குள்ளும் பாயட்டும். அப்போது நீங்களும் அந்தத் தகுதியைப் பெறுவதோடு உயர்ந்த இடத்தையும் பெறுவீர்கள்.

தன்னம்பிக்கை பெற வேண்டுமா? கற்பனை செய்யுங்கள்! அந்தக் கற்பனை ஆரோக்கியமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

எப்போதேனும் சிறுதோல்வி உங்களை நெருங்கலாம். அப்போது ஒட்டுமொத்தமாகவே தளர்ந்து விடாதீர்கள். ஏற்கனவே நீங்கள் பெற்ற வெற்றிகளை நினைத்துப் பாருங்கள். வெற்றி பெறுவதற்கான தகுதி உங்களுக்கு இருப்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

உங்களை மீறி ஏதேனும் சோகமான சூழ்நிலை தோன்றும்போது, நீங்கள் மகிழ்ச்சியாக இருந்த தருணங்களை நினைத்துப் பாருங்கள்.

கடந்த காலத்தைப் பற்றிய ஆரோக்கியமான சிந்தனையைப் போல எதிர்காலத்தைப் பற்றியும் ஆரோக்கியமாகச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு சுற்றுலா செல்லும் போது, அங்கு நீங்கள் மகிழ்ச்சியாக பொழுதைக் கழித்துவிட்டு, வீடு திரும்புவதாக கற்பனை செய்யுங்கள்.

ஒரு போட்டியைச் சந்திக்கச் செல்லும்போதே, நீங்கள் வெற்றி வாகை சூடி திரும்புவதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். எந்த வகையிலும் ஒரு சதவீதமேனும் எதிர்மறையாக சிந்திக்கத் தேவையில்லை.

இவற்றிற்கெல்லாம் மேலாக அடிக்கடி உங்கள் எண்ணங்களை சுய பரிசோதனை செய்து பாருங்கள்.

மனம் ஒரு குரங்கு போன்றது. நீங்கள் ஆரோக்கியமாக சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, உங்களை அறியாமல் அது ஏதேனும் சோக நிகழ்வுகளையோ, தோல்வியைப் பற்றியோ, எதிர்மறையானவற்றை எண்ண ஆரம்பித்து விடும். எனவே அரைமணி நேரத்திற்கு ஒரு முறை சற்று விழிப்படைந்து, ஒரு கணம் நீங்கள் சிந்திப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கும் விஷயங்கள் நேர்மறையானவையா? அல்லது எதிர்மறையானவையா? என்று சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

எதிர்மறையாக இருந்தால் அந்த இடத்திலேயே சிந்திப்பதை நிறுத்திவிட்டு, ஏதேனும் நல்ல புத்தகத்தைப் படிக்க ஆரம்பியுங்கள். அல்லது தொலைக்காட்சியில் நகைச்சுவை நிகழ்ச்சிகளை ரசிக்க ஆரம்பியுங்கள். அலுவலகத்தில் இருப்பதாக இருந்தால், உடனடியாக உங்கள் பணிகளைக் கவனிக்க ஆரம்பியுங்கள். உங்கள் மனம் நேர்மறை சிந்தனைப் பாதையை விட்டு விலகவே முடியாது.

தன்னம்பிக்கை பெற சில ஆலோசனைகள்

★ எதிர்மறையான சிந்தனைகளை அறவே தவிருங்கள். நேர்மறையான ஊக்கமான சிந்தனைகளைக் கைக்கொள்ளுங்கள். கூடவே, எதிர்மறையாக சிந்திப்பவர்களிடமிருந்து அறவே ஒதுங்கி இருங்கள்.

★ உங்கள் கொடுப்பினைகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் திறமையை நினைத்துக் கொள்ளுங்கள். அதை ஒருபோதும் இழந்து விடாதீர்கள். உங்கள் பிரகாசமான கண்கள், ஆரோக்கியமான உடல், இவற்றைக் கொண்டு எத்தகைய சாகசங்களையும் புரிய முடியும் என்று நம்புங்கள். ஒருபோதும் உங்களை நீங்களே தாழ்வாக எண்ணிக் கொள்ளாதீர்கள்.

★ உற்சாகமான, துடிப்புள்ள, ஊக்கமான, நேர்மறைச் சிந்தனையுள்ள மனிதர்களிடம் நட்புக் கொள்ளுங்கள். ஊக்கமுள்ளவர்கள் உங்களுக்கு ரோல் மொடலாக விளங்கட்டும். அந்த மாதிரி மனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரம், உரையாடல் போன்றவற்றைப் படியுங்கள்; கேளுங்கள். உங்கள் மீது உங்களுக்கே மதிப்பும் மரியாதையும் காதலும் தோன்றும்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# தெரியாது என்ற வார்த்தையை மறந்து தெரிந்து கொள்வதற்கு முயற்சியுங்கள்

## கவிதை நூல் வெளியீட்டு விழாவில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

எந்த ஒரு விடயம் பற்றியும் தொடர்ந்து அசைபோட்டால் அந்த விடயத்தில் மனிதன் சிரஞ்சீவி தன்மையைப் பெற்றுவிடுவான். தெரியாது என்ற வார்த்தைக்கு இடமளிக்காது விடயங்களை தெரிந்து கொள்வதற்கு முயற்சி எடுப்பது அவசியம் என யாழ். பல்கலைக்கழக நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி தெரிவித்தார்.

'உயிர்ச் சமர்' எனும் கவிதைத் தொகுதி நூல் வெளியீடு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் விரிவுரையாளர் கிருத்திகா தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

இளைய சமுதாயத்தின் எண்ணக்கருக்கள் மாறிவருகின்ற காலத்தில் மாணவர்கள் கவிதைகள், சிறுகதைகள் போன்ற படைப்புக்களை எழுதி வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

இணையத்தளங்களிலும் தொலைக்காட்சிகளிலும் தமது எண்ணங்களை தொலைத்துவிட்டு இருக்கும் சமுதாயத்தில் அச்சு ஊடகங்களில் நூல்களை இளம் சமுதாயம் பிரசுரித்து வருகிறது.

இன்று பெரும்பாலும் மாணவ சமுதாயமோ, தமது தேவைகளுக்கு நூலகங்களை நாடுவது அரிதாகி விட்டது. தமது எண்ணக்கருக்களை இணையத்தளங்களிலே தேடுகின்றனர். அதிலே இலக்கண வழுக்களும், இலக்கியங்களும் மாறுபட்டதாகவே இருக்கின்றன. அவற்றை எல்லாம் சரி என நினைத்தே பயில்கின்றனர்.

**இளைஞர்கள் தற்போது எழுதும் கவிதைகளுக்கு அகராதியும் தேவைப்படுகிறது. புதுப்புது சொற்பதங்களும், எண்ணக்கருக்களையும் கொண்டு விளங்குகிறது.**

கவிதைகள், நாவல்கள், இலக்கியங்கள் பற்றிப் பேசுவதற்கு தகுதிவேண்டும் என நினைப்பது முட்டாள்தனமானது. எந்த ஒரு விடயத்தையும் பாமர மக்கள்கூட தொடர்ந்து அசைபோட்டு வந்தால் அது சிரஞ்சீவி தன்மை பெற்று விடும். அது தான் யதார்த்தம். கவிதையின் பாடுபொருள் சமூகத்துடன் ஒத்துப்போக வேண்டும். அப்போதே கவிதைக்குரிய இடத்தைப் பெறமுடியும். கவிதைகள் எப்போதும் இரு வகைகளைக் கொண்டவை. அவை தன்னுணர்வு, சமூக உணர்வு ஆகும்.

இளைஞர்கள் தற்போது எழுதும் கவிதைகளுக்கு அகராதியும் தேவைப்படுகிறது. புதுப்புது சொற்பதங்களும், எண்ணக்கருக்களையும் கொண்டு விளங்குகிறது எனத் தெரிவித்தார். (எ-13)

# சிறந்த நூல்களுக்கான போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் சிறந்த நூல்களுக்கான தேர்வுப் போட்டி நடத்தப் படவுள்ளது.

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக வருடாவருடம் நடத்தப்பட்டு வரும் நூல் தேர்வுப் போட்டிக்கு கடந்த ஆண்டில் அச்சேற்றி வெளியிட்ட நூல்களையும் இணைத்துக் கொள்ள முடியும்.

வடமாகாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் வெளியீடுகள் மட்டும் இடம்பெறும் இந்தப் போட்டியில், உயர்கல்வி, ஆய்வும் விமர்சனமும், பல்துறை, கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் எழுத்தாளர்கள் தமது நூல்களைச் சமர்ப்பிக்கலாம்.

பங்குகொள்வோர் தமது நூல்களின் 4 பிரதிகளுடன் சுயவிவரத்தையும் குறிப்பிட்டு பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருக்கு பதிவுத் தபாலிலோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியுமென வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ-135)

# புதிய செயலர்

வடமராட்சி, மார்ச் 27

பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய செயலாளராக, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திருமதி சந்திரபாமா தர்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபையில் செயலாளராகப் பணியாற்றிய ரி.ஜெயவசிகரன் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (எ-8)

# ஆண்களும் பெண்களும் ஒன்றிணைந்தால் சக்திபடைத்த சமுதாயத்தை உருவாக்கலாம்

## கௌரவிப்பு விழாவில் அரச அதிபர் இமெல்டா

யாழ்ப்பாணம், மார்ச் 27

பலவீனமான சமுதாயத்தை பலம்மிக்கதாக மாற்றுவதற்கு ஆண்களும் பெண்களும் சமமாக வேலை செய்ய வேண்டும். ஆண்களும் பெண்களும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் சக்தி படைத்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இவ்வாறு யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலக மகளிர் தின விழாவும் ஜனாதிபதி விருது பெற்ற யாழ். அரச அதிபரைக் கௌரவிப்பதற்குமான நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் உதவித் திட்ட மிடல் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

பெண்களைத் தவறான சந்தேகத்துடன் பார்ப்பவர்கள், விமர்சிப்பவர்கள் உண்டு. கடமைக்குச் செல்லும் பெண்கள் மீது வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். நாம் அனைவரும் புரிந்துணர்வுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். குடும்பங்கள் புரிந்துணர்வுடன் இருந்தால் கடமையைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

கிராமப்புறங்களில் போதிய



அறிவின்மையால் பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தாயின் பாதுகாப்பு பிள்ளைகளுக்கு அவசியம் தேவை. விளக்கமற்ற பிள்ளைகளாகக் காணப்படுவதால் பரிதாபத்துக்குரிய சமுதாயமாக அவர்கள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

விதவைகள் முன்னுக்கு வரக் கூடாது என்ற நிலை இன்று உள்ளது. பெண்களே பெண்களைத் தவறாகக் கருதும் நிலை கூட இருக்கின்றது. இப்போது யாழ்ப்பாணத்தில் இருபத்து ஐந்து பேருக்கு மேல் பெண்கள் உயர் பதவிகளில் உள்ளனர். இவர்கள் கீழ் நிலையில் உள்ள சமுதாயத்தையும் இணைத்து அடிமைப்படாத சுதந்திரமான நிலைமையை ஏற்படுத்த முன்வர வேண்டும் - என்றார்.

உடுவில் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் தனது உரையில் கூறியதாவது:

எமது பெண்பிள்ளைகளை பெற்றோர்கள் உரிய முறையில் அரவணைத்து வளர்க்கும் போது தான் ஒரு அன்பான சூழலை ஏற்படுத்த முடியும். பண்புள்ள சமுதாயம் வேண்டும் என்பதை திருக்குறள் உட்பட பண்டைய பாடல்கள் பல எடுத்துக் காட்டுகின்றன.

பெண்கள் அடக்குமுறைக்கு எதிரான பாடல்கள் பல உண்டு. இன்று நிலவும் சில விரும்பத்தகாத சம்பவங்களைத் தகர்த்து நிமிர்ந்து எழும் வகையில் பெண்களின் ஆற்றல் உயர வேண்டும். அதற்கான குரல் கொடுக்க பெண்கள் அமைப்புக்கள் ஒருங்கிணைய வேண்டும் - என்றார். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கற்றுக்கொள்ள வேண்டியவை

இலங்கையின் இடதுசாரிகள் எப்போதும் சிங்கள, பௌத்த இனவாதிகளின் பின்னால் சென்றாலும் அவ்வப்போது முத்து முத்தாகச் சில கருத்துக்களை உதிர்ப்பவர்கள்.

சிங்கள, பௌத்தர்களுக்குத் தான் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்ததையொட்டி, ''இரு மொழிக் கொள்கை என்றால் இந்த நாடு ஒன்றாக இருக்கும் ஒரே மொழிக் கொள்கை என்றால் இந்த நாடு இரண்டாகப் பிளவுபடும்'' என்று முழங்கியவர் முக்கிய இடதுசாரியான கொல்வின் ஆர்.டி.சில்வா.

பின்னர் வந்த காலங்களில் பண்டாரநாயக்கவின் மனைவி சிறிமாவோவிடம் அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொண்டு சிங்கள, பௌத்த ஏகாதிபத்திய அரசில் அமைச்சரானார்.

அதேபோன்று பெரும்பாலான சிங்கள இடதுசாரித் தலைவர்கள் சமத்துவம், சமூக நீதி போன்றன பற்றியெல்லாம் அழகாகவும் நேர்த்தியாகவும் பேசுவார்கள். பின்னர் பௌத்த, சிங்கள தேசியவாதத்துக்குள் தங்களைச் சிறைப்படுத்திக்கொண்டு, அவர்கள் இடம் பெற்றுள்ள அரசுகள் செய்யும் மனித உரிமை மீறல்களையும் சமூக அநீதிகளையும் சமத்துவ மீறல்களையும் கண்டும் காணாமல் இருப்பார்கள்.

கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை இடதுசாரிகளின் இந்த நடைமுறையில் எந்த மாற்றமும் இல்லை என்பதை அமைச்சர் டியூ குணசேகரவின் கூற்று எண்பித்துள்ளது.

இலங்கை அரசு கற்றுக்கொண்ட பாடங்களை விட இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ள பாடங்கள் பலவுள என்று அவர் கூறியிருக்கிறார். அந்தப் பாடங்களை இனங்கண்டு கற்றுத்தேறுமானால் இலங்கையில் நிலவும் பிரச்சினைகளை அரசு இலகுவில் தீர்த்துவிடும்; அதில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயமும் அடங்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக்கோரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தைச் செயற்படுத்துவதா இல்லையா என்பது குறித்து நாட்டு மக்களிடம் அரசு எந்த வித வாக்கெடுப்புகளையும் நடத்தாது என்று நிராகரித்த கையோடேயே அமைச்சர் டியூ இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் அவரது முக்கியமான கருத்து ''30 வருடங்களுக்கும் மேலாக நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வழிவகைகளை அரசு கற்றுத் தேற வேண்டும்'' என்பதுதான். அவரது கருத்து உண்மையானது. இலங்கை அரசு கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் மிகப் பல உள்ளன. சிறுபான்மை இனங்களை மதிப்பது, அவர்களின் உரிமைகளை வழங்குவது, உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது, நேர்மையுடனும் இதய சுத்தியுடனும் நடந்துகொள்வது, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது, மக்களுக்கு உண்மையாக இருப்பது என்று பல விடயங்களில் இந்த அரசு கற்றுத்தேற வேண்டியவைகள் பல உள்ளன.

போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னும் அவற்றைக் கற்றுக்கொள்ள மறுப்பதால்தான் இந்த விவகாரம் ஐ.நாவரை சென்றது. அதன் பின்னரும் கூட அரசு சில விடயங்களைப் புரிந்துகொண்டு நடப்பதாக இல்லை என்பதுதான் வேதனைக்குரியது. அதை அரசுக்கு இடித்துரைக்க வேண்டிய மூத்த அமைச்சர் வெறும் கதை பேசிக் கொண்டிருப்பது அதிலும் துன்பத்துக்குரியது.

# இந்திய அரசு ராஜதந்திரத்துடன் ஐ.நாவில் செயல்பட்டுள்ளது

*சென்னையில் வெளியாகும் தினமணி நாளேட்டின் ஆசிரியர் தலையங்கம் இது.*

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக் குழுவில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறியிருப்பது உலகத் தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் செய்தி. அதைவிட, இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தந்த இந்தியாவின் நிலைப்பாடு இந்தியத் தமிழர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் முடிவு.

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுற்றிருக்கும் சூழலில் பாதிக்கப்பட்டு, நிராதரவாக நிற்கும் இலங்கையின் பூர்வகுடியினரான ஈழத் தமிழர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இந்திய அரசு வெளிப்படையாகச் செயல்பட்டிருப்பது இதுவே முதல் முறை. கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள், மேற்கொண்ட முயற்சிகள் எல்லாமும், துரதிர்ஷ்டவசமாக, தமிழக அரசியலுக்கான நாடகமாக அமைந்தனவே தவிர, உளப்பூர்வமான நடவடிக்கைகளாக அமையவில்லை என்கிற தோற்றத்தை ஏற்படுத்தியது.

''உள்நாட்டு அரசியலின் நெருக்கடியால்தான் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்'' என்று இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் பீரிஸ், ஐ.நா. வாக்கெடுப்பின்போது மறைமுகமாக இந்தியாவைக் குறிப்பிட்டாலும், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் முதல்முறையாக இந்திய அரசு இப்போதுதான் ராஜதந்திரத்துடன் செயல்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் முடிந்த நிலையில், ஐக்கிய நாடுகள் அறிவித்த எந்தப் பணிகளையும் கடந்த மூன்று ஆண்டுகளாக ராஜபக்ஷ அரசு செய்யவில்லை. இதற்காக இந்திய அரசு பல முறை அரசு அதிகாரிகளை அனுப்பியும் இலங்கை அதைச் சட்டை செய்யவில்லை. இலங்கை உறுதி கூறியபடி, இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் 13ஆவது சட்டத்திருத்தம் நடக்கவே இல்லை.

இத்தனை காலம், இலங்கையிடம் அண்டை நாட்டுடனான நல்லுறவு கெட்டுவிடக் கூடாது என்கிற எண்ணத்தில் பணிவாக இருந்து வந்ததுதான் இந்திய அரசு செய்த மிகப் பெரிய தவறு. தற்போதுதான் கடுமையாகவும் நடந்துகொள்ள முடியும் என்பதை முதன்முறையாக நாம் இலங்கைக்குப் புரிய வைத்திருக்கிறோம்.

இந்த நிலைப்பாட்டை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே எடுத்திருந்தால், இந்தியா நேரடியாகக் களத்தில் இறங்கி, இலங்கைத் தமிழர்களுக்கு உதவிகளை வழங்கியிருக்காவிட்டாலும், இலங்கை அரசின் செயல்பாடுகளை நாம் கண்காணித்திருக்க முடியும். வெறுமனே இலங்கை அரசிடம் பணமும் பொருளும் கொடுத்துவிட்டு, அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று நம்பிக் கெட்ட துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டிருக்காது.

நம்மைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளும் - ரஷ்யா, சீனா, வங்கதேசம், மாலைதீவு, சவூதி அரேபியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக நின்ற போது, இலங்கையை வெளிப்படையாக இந்தியா எதிர்த்து நின்று, அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்துள்ளது.

''தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் திருப்திக்காகவே இந்த முடிவை இந்தியா எடுத்தது'' என்று அவசரப்பட்டு மலினப்படுத்துவது நியாயமில்லை. ஏனெனில் இலங்கையுடனான ராஜதந்திர உறவுகள் அறுந்து போகக்கூடாது என்ற உணர்வுடனேயே இந்திய அரசு செயல்பட்டுள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீவிரமாக இயங்கும் அரசியல் அமைப்புகள் சில, இந்தியா மேற்கொண்டுள்ள ராஜதந்திர முடிவை இரட்டை வேடம் என்று விமர்சனம் செய்துள்ளன.

தீர்மானம் கொண்டுவரப்படுவதற்கு முன்பே, தனியொரு நாட்டின் மீது இத்தகைய தீர்மானம் கொண்டு வருவது சரியல்ல என்று சுற்றறிக்கை அனுப்பிய இந்தியா மீது தமிழக அரசியல் கட்சிகளுக்கு வருத்தம் இருந்தது. தீர்மானத்தின் சில பத்திகளில் இந்தியா திருத்தம் செய்தபோது இந்தக் கோபம் மேலும் அதிகமானது.

அதாவது, போர்க்குற்றம் தொடர்பான விசாரணைக்குப் பின்னர், ஐ.நா சொல்லும் நடவடிக்கைகளை இலங்கை ஏற்று நடத்த வேண்டும் என்ற வார்த்தைகளை, ''இலங்கை அரசின் ஒப்புதலுடன்'' என்று இந்தியா மாற்றியிருப்பதைத்தான் இவ்வாறு இரட்டை வேடம் என்று குறை காண்கிறார்கள். இது உணர்ச்சியின் மீது எழுப்பப்படும் வாதங்களே தவிர, ஓர் அரசாங்கம் என்று பார்க்கும்போது இத்தகைய அணுகுமுறை தவறல்ல. அதற்குப் பெயர் ராஜதந்திரம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால், ராமேஸ்வரம் மீனவர்கள் பிடித்துச் செல்லப்பட்டார்கள் என்றால், அப்போது இந்திய அரசுதான் பேசியாக வேண்டும். மற்ற நாடுகள் வரப்போவதில்லை. அக்கறை கொள்ளப்போவதில்லை. ஒரேயடியாக இலங்கையை எதிர்ப்பது இத்தகைய ராஜதந்திர நடவடிக்கைகளுக்குக் குந்தகமாக அமைந்துவிடும்.

''செய்வதாகச் சொல்லி ஏமாற்றிவிட்டீர்கள், உங்கள் மீது நான் கோபமாக இருக்கிறேன்'' என்று சொல்லும்போது, பேச்சுக்கும் நட்புக்கும் இடம் இருக்கிறது. ''நீ என் விரோதி'' என்று சொல்லும்போது நட்பு முற்றிலுமாக முறிந்துபோகும்.

எல்லைப் பிரச்சினையால் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் வங்கதேசத்துடனும் ஏற்கெனவே சிக்கல்கள் இருக்கும் நிலையில், இலங்கையுடனும் பிரச்சினை ஏற்பட்டு போர் மூளும் சூழலை இந்தியா ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரிவினை சக்திகளும், தீவிரவாத சக்திகளும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முள்ளில் விழுந்த சேலையைக் கிழியாமல் எடுக்கும் லாவகம் இந்தப் பிரச்சினையில் தேவைப்படுகிறது.

கோபம் கொள்ளவும் வேண்டும். காரியம் சாதிக்கவும் வேண்டும். முதல் முறையாக கோபத்தைக் காட்டியுள்ள இந்திய அரசு, காரியத்தையும் சாதிக்க வேண்டும் என்று வற்புறுத்தலாம். அது தவிர, இரட்டை வேடம் போடுகிறது இந்திய அரசு என்று குற்றம் கூறுபவர்கள் பிரச்சினையை வளர்க்க விரும்புகிறவர்கள். சொல்லித் தெரிவதில்லை நாடாளும் வித்தைகள் என்பதைப் புரிந்துகொள்ளாதவர்கள்.

**புனிதவதியான்**

இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்காக இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் இலங்கை அரசைவிட இந்திய அரசையே அதிகம் ஆட்டிப்படைத்தது.

தீர்மானத்தை இந்திய அரசு ஆதரித்தே ஆகவேண்டும் என தமிழகக் கட்சிகள் அனைத்தும் நெருப்பாக குமுறியெழுந்தன. பிற மாநிலத்தவர் கூட ஈழத்தமிழருக்கு இலங்கைப் போரில் நிகழ்ந்த கொடூரத்தைப் பார்த்து ஆவேசப்பட்டனர்.

தமிழகத்தில் காங்கிரஸை தக்க வைக்க வேண்டும் என்றால் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரிப்பதைத் [illegible] [illegible] வில் இலங்கை மீதான தீர்மானத்தை

''இலங்கை நட்பு நாடு என்றால் தமிழ்நாடு பகையாளியா'' என்று எதிராளிகள் எழுப்பும் கேள்வி தமிழகத்தையே தீப்பற்ற வைத்துள்ளது என ப.சிதம்பரம் அழுத்தம் திருத்தமாகக் கூறினார்



ஆதரிக்க இந்தியா முடிவெடுத்ததற்கான முக்கிய காரணம் அதுவே.

ஈழத் தமிழர் பிரச்சினையை முன் வைத்து தமிழகத்தில் எழுந்துள்ள உணர்ச்சி அலை மற்றும் ஒற்றுமை மீண்டும் தமிழ்நாட்டில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வித்திட்டுவிடுமோ என்ற அச்சமும் மற்றொரு காரணம். இந்த விடயங்களை பக்குவமாக இந்திய அரசுக்குப் புரிய வைத்து ஐ.நாவில் இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரிக்க வைத்தவர், தமிழக காங்கிரஸைச் சேர்ந்தவரும் இந்திய உள்துறை அமைச்சருமான ப.சிதம்பரம்.

சிதம்பரத்தின் முயற்சியால், ஜெனிவாவில் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது. இந்திய முடிவால் இலங்கை கடும் அதிர்ச்சியடைந்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போது முடியும் வனவாசம்?

## 12 வருடங்களாக ஏங்கித் தவிக்கும் பச்சிலைப்பள்ளி மேற்கு மக்கள்

நள்ளிரவு தாண்டி. நேரம் அதிகாலை 2.45 மணியை எட்டியிருந்தது. கள்ளர் வந்தாலும் தெரியாத ஆழ்ந்த உறக்கத்திலிருந்த னர் குடாநாட்டு மக்கள். திடீ ரென துப்பாக்கி வேட்டு களும் எறிகணை வெடியோ சைகளும் காதைப் பிளந்தன. நடப்பது என்ன என்று தெரி யாமல் பச்சிலைப்பள்ளி பிர தேச மக்கள் கலங்கினர். நித் திரையில் காணப்பட்ட பிள் ளைகளைத் தட்டி எழுப்பி, ஓயாத எறிகணை வீச்சு மற் றும் துப்பாக்கி வேட்டு சத்தங் களுக்கு மத்தியில் அருகில் உள்ள ஆலயங்களையும் பாதுகாப்பான இடங்களை யும் நாடி ஓடினர்.

எறிகணைகள் எங்கு விழு கின்றன என்று தெரியாமல் அலங்கமலங்க விழித்தபடி மக்கள் ஓடிக்கொண்டிருந்த னர். தலைக்கு மேலால் எறி கணைகள் கூவிக் கொண்டு பறந்தவேளைகளில் எல்லாம் பற்றைகள் புல்தரை எதுவும் பார்க்காமல் வீழ்ந்து படுத்துப் படுத்து ஓடியபடி பாதுகாப் பான இடங்களில் ஆயிரக் கணக்கான மக்கள் தஞ்சம டைந்தனர்.

**ஓர் அச்சமூட்டும் இரவுக்குப் பின்னர் விடிந்த அன்றைய காலை பரிதாபத்துக்குரி யதாக இருந்தது. தஞ்சமடைந்த இடங்களில் பெற்றோரைக் காணாது தவித்த பிள்ளைகளும் பிள்ளைகளை, சகோதரங்களைக் காணாது தவித்த உறவுகளும் ''என்னாயிற்றோ ஏதாயிற்றோ'' என்று கண்கள் குளமாகி, பரிதவித்துக் கிடந்தனர்.**

வீட்டிலிருந்து வெளிக்கிட மறுத்த வயோதிபப் பெற் றோரை விட்டுச் சென்ற பிள் ளைகள் மத்தியில், ''எல்லோ ரும் ஒன்றாகச் சாவோம்'' என்று கூறி வீட்டிலேயே பெற் றோருடன் தங்கியிருந்த பிள் ளைகளும் அவர்களின் குடும் பங்களும் நூற்றுக்கணக் கானவை.

சீறி வரும் துப்பாக்கி ரவை கள் மற்றும் எறிகணைகளுக்கு மத்தியில் தமது உயிரே மிஞ் சுமா என்று தெரியாமல் ஓடி யவர்கள், தமது வளவுகளில் பட்டடைகளில் கட்டப்பட்டி ருந்த ஆடுகள், மாடுகள், கோழி களைப் பற்றி எப்படிச் சிந் திக்க முடியும்? எறிகணை களின் உக்கிரத் தாக்குதலில் பல பனைகளே தீப்பிழம் பாகி எரிந்தபோது எதுவும் மிஞ்சப்போவதில்லை என் பதை மக்கள் உணர்ந்து கொண் டனர்.

பிரதேசத்தில் உள்ள கிரா மங்களில் கல்வீடுகள் மிகக் குறைவாக இருந்ததால் மக் கள் கற்களால் கட்டப்பட்டிருந்த ஆலயங்களை நாடி ஓடினர். எறிகணைகள் அனைத்தும் ஏ-9 வீதியிலும் பெரும்பா லான தென்னந் தோட்டங் களிலும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்ததால் மக்களுக் குப் பாதிப்பு ஏற்படவில்லை. பொழுது விடிந்தபோது வீதி யில் மக்கள் நடமாட்டம் எது வும் இருக்கவில்லை.

இன்று போன்ற தொலைத் தொடர்பு வசதிகள் இல்லாத காலம் அது. முதல் நாள் இர வில் அந்தப் பகுதியெங்கும் வீழ்ந்து வெடித்த எறிகணை கள், இரு பகுதியினருக்கு மிடையில் மோதல் இடம் பெற் றிருக்கலாமென்ற ஊகத்தை மக்களிடம் தந்தபோதும் அந்த மோதல் எங்கு நடந்தது என் றும் எவரும் அறிந்திலர்.

ஓர் அச்சமூட்டும் இரவுக் குப் பின்னர் விடிந்த அன் றைய காலை பரிதாபத்துக் குரியதாக இருந்தது. தஞ்ச மடைந்த இடங்களில் பெற் றோரைக் காணாது தவித்த பிள்ளைகளும் பிள்ளைகளை, சகோதரங்களைக் காணாது தவித்த உறவுகளும் ''என்னா யிற்றோ ஏதாயிற்றோ'' என்று கண்கள் குளமாகி, பரிதவித் துக் கிடந்தனர்.

காலை 8 மணிக்குப் பின் னர் எறிகணை வீச்சு மற்றும் துப்பாக்கி வேட்டுச் சத்தம் குறைந்த பின்னர் விசாரித்த போது பளை முல்லையடி யில் இருந்த அரச படையி னரின் எறிகணைத் தளம் அழிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தது.

இரவு இடம்பெற்ற அதிர் வுகளால் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மூன்று பிரிவு களாகப் பிரிந்திருந்தனர். பளை நகரம், பெரியபளை, புலோப்பளை அல்லிப்பளை, முல்லையடி போன்ற பிரிவு மக்கள் ஒரு இடத்திலும் தம் காமம் வண்ணான்கேணி போன்ற பிரிவு மக்கள் ஓரி டத்திலும் அரசர்கேணி, கச் னர்வெளி, இத்தாவில், முக மாலை வேம்பொருகேணி ஆகிய பிரிவு மக்கள் ஓரிட மாகவும் ஒதுங்கியிருந்தனர்.

கச்னர் வெளி தொடக்கம் பளை முல்லையடி வரையான பகுதி இரவோடு இரவாக விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுக்குள் சென்றிருந்த தால் மக்கள் செய்வதறியாது கலங்கினர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியில் நிலை கொண்டி ருந்த படையினரோ அந்தப் பகுதி மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டனர். இதனைய டுத்து கச்சாய்வெளி, செல்வ புரம், வேம்பொடுகேணி, இத் தாவில், அரசர்கேணி, முக மாலை போன்ற பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தமது கையில் அகப் பட்ட பொருள்களுடன் ஏனைய உடைமைகளைக் கைவிட்டு உட்பாதைகள் ஊடாக முக மாலைக்கு வந்து அங்கிருந்து ஏ-9 வீதியினூடாகக் கால் நடையாக இடம்பெயர்ந்தனர்.



அந்த நாள் 26.03.2000.

பச்சிலைப்பள்ளி மேற் குப் பிரதேசமான முகமாலை, வேம்பொடுகேணி, இத்தா வில், பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து நேற் றுடன் 12 வருடங்கள் பூர்த்தி யாகி விட்டன. ஆனால் இன் னமும் தமது சொந்த இருப்பிடங் களுக்குத் திரும்பவில்லை.

இன்று நடக்கும் நாளை நடக்கும் என்று தமது மீள்குடி யமர்வை எண்ணி அவர்கள் நாளாந்தம் ஏக்கத்துடன் காத் துக்கிடக்கின்றனர். போர் முடிந்து மூன்றாண்டுகளை எட்டும் நிலையிலும்கூட இந்த மக் கள் தமது சொந்த இடங் களுக்குத் திரும்புவதற்கான நம்பிக்கைக் கீற்றுக்களைக் காணமுடியவில்லை.

இன்று அறிவித்தால்கூட மூட்டை முடிச்சுக்களுடன் புறப்படத் தயாராக இருக் கும் இந்த மக்களுக்கு சொந்த இடம் திரும்பும் அனுமதி கிடைக்காதமை கவலையளிக் கிறது. அது இப்போதெல் லாம் மெல்ல வெறுப்பாகி, விரக்தியாகி, கோபத்தைக் கிளறுகிறது.

12 வருடங்களாக ஒவ் வொருவரும் தமது சொந்த மண் ணைவிட்டு இடம்பெயர்க் கப்பட்ட குடியிருப்பாளர் களும் கொண்ட துயர் சொல் லில் அடங்கா. பாதுகாப்பாக வீட்டில் இருங்கள் என்று தமது வீட்டில் குடியமர்த்திய வர்கள் கொஞ்ச நாள் செல்ல வாடகை கேட்டு வற்புறுத் தியதால் 12 வருடங்களில் கேட்கும் வாடகை கொடுக்க வசதியில்லாததால் 50 இற்கு மேற்பட்ட வீடுகளுக்கு மாறி மாறி குடியமர்ந்து கொண்டு தங்களுக்கு எப்போது விடி வுவரும் என்று ஏங்கிக் கொண் டிருக்கிறார்கள்.

இராமருக்குக்கூட 14 ஆண் டுகளில் வனவாசம் முடிந்து விட்டது. தங்களுக்கு எப் போதுஅது நிகழும் என்று காத்தி ருக்கிறார்கள் அந்த மக்கள்.

■ தென்னவன்
*பாதிக்கப்பட்ட மக்களில் ஒருவன்*

---



# சிதம்பர ரகசியம்

ளது என்பதை இங்கு அமைச் சர்கள் ஒவ்வொருவரும் தெரி வித்துவரும் கருத்துக்களில் பிர திபலிக்கிறது.

தீர்மானத்தை எதிர்ப்பதோ நடுநிலை வகிப்பதோ இப் போதைக்குப் புத்திசாலித்தன மான முடிவல்ல என்பதை காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கும் பிரதமர் மன்மோ கன் சிங்குக்கும் நேடியாக ப.சிதம்பரம் விளக்கினார். தமிழகத்திலிருந்து நேரடியான 'ரிப்போர்ட்'டுக்களைப் பெற்று அவற்றை உடனடியாகவே சோனியா, மன்மோகனிடம் சேர்ப்பித்தார்.

தீர்மானத்தை ஆதரிப் பதைத் தவிர்த்து எடுக்கப் படும் எந்த ஒரு முடிவும் தமி ழகத்தில் இன்றுள்ள எரியும் நிலைக்கு எண்ணெ[illegible]றிய தாகவே இருக்கும் [illegible]பதை சோனியா, மன்மோகனுக்கு நேரடியாகப் புரிய வைத்தவர் சிதம்பரமே.

உளவுத்துறைத் தகவல் களும் சிதம்பரத்தின் நிலைப் பாட்டை உறுதிப்படுத்தின. இரு முக்கிய தலைவர்களுக்கு மட்டுமின்றி, நிலைமையின் தீவிரத்தையும் விபரீதத்தை யும் காங்கிரஸின் மூத்த தலைவர்களுக்கும் புரிய வைத்தவர் ப.சிதம்பரம்.

இந்த விவகாரத்தில் நாடா ளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அளித்த விளக்கம் சரியல்ல என்பதையும் அது எந்தள வுக்கு நிலைமையை மேலும் மோசமாக்கி இருக்கிறது என் பதையும் சிதம்பரம் உளவுத் துறைத் தகவல்களின் ஆதர வோடு காங்கிரஸ் தலைவர் களின் முன் வைத்தார்.

கிருஷ்ணாவின் அறிக்கை யைத் தொடர்ந்து இந்திய அரசு ''தமிழ் இனத்துக்கே எதிரா னது என்ற நிலைப்பாட்டைத் தமிழகத்தில் வளர்க்கப் பார்க் கிறார்கள். ''இலங்கை நட்பு நாடு என்றால் தமிழ்நாடு பகை யாளியா'' என்று எதிராளிகள் எழுப்பும் கேள்வி தமிழகத் தையே தீப்பற்ற வைத்துள் ளது என ப.சிதம்பரம் அழுத் தம் திருத்தமாகக் கூறிய மையே காங்கிரஸ் தலைவர் கள் உறுதியான தீர்மானத்தை எடுப்பதற்கு வழிவகுத்தது என்கின்றன தமிழக காங் கிரஸ் வட்டாரங்கள்.

இறுதிக்கட்டப் போரில் வன்னியில் வெள்ளைக்கொடி யுடன் சரணடைய முன்வந்த புலிகளின் தலைவர்கள் பாது காப்பு உத்தரவாதம் பெற்றுக் கொடுக்கும் விவகாரத்தில் ஐ.நா. செயலரின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார், றொபேட் ஓ பிளேக் ஆகியோ ருடன் ப.சிதம்பரமும் தொடர் புபட்டிருந்தார்.

''இந்த விடயத்தில் சிதம் பரம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்ததால் அவர் மீதும் காங்கிரஸ் மீதும் ஏற் கனவே தமிழர்களுக்குச் சந்தே கங்கள் பல இருந்தன. அத் தகைய ஒரு நிலையில் இந் தியா தீர்மானத்தை எதிர்த் தால் தனது அரசியல் எதிர் காலமும் தனது மகனின் எதிர் காலமும்கூட அஸ்தமித்துப் போகும் என்பதை உணராத வல்லர் சிதம்பரம். அதனால் தான் இந்த விடயத்தில் அவர் மிகத் தீவிரமாக இயங்கினார்'' என்கிறது அந்த வட்டாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரர சிந்தனை

மனிதர்களில் இரண்டு வகை உண்டு. ஒருவகை மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்றால் அவர் சொல்கின்ற படி அவர் உடம்பு கேட்கும் அளவுக்கு இருப்பார்.

இன்னொரு வகை மனிதர் அவர் உடம்பு சொல்கின்றபடி அவர் கேட்டுக் கொண்டிருப்பவராக இருப்பார்கள். வயிறு சாப்பாடு கேட்கும். உடனே அவர் ஒரு சாப்பாட்டுக் கடையைத் தேடிப்போவார். உடம்பு இங்கு எம்மை அதிகாரம் செய்கிறது. நாம் உடம்பை அதிகாரம் செய்வதில்லை. இங்கு எம்முடைய பலவீனம் தான் எமது உடம்பின் பலமாக உள்ளது.

ஆனால், நாம் முழுமனதோடு அப்போது எனக்கு ''சாப்பாடு வேண்டாம்''என்று சொல்ல முடிந்தால், உடம்பு கேட்பதை நிறுத்தி விடும். முதல் தடவையாக இந்தச் சரீரத்தை தவிரவும் என்னுடைய நிலை என்று ஒன்று இருக்கின்றது என்று தெரியும்போது நமக்குள்ளே ஒரு புதிய பலம் உண்டாகும், ஒரு புதிய சக்தி உற்பத்தி யாகும். இது அனுபவரீதியாக பெரியவர்கள் சொன்னவிடயம்.

இதற்கு உதாரணமாக,

எமக்குத் தூக்கம் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

''நான் தூங்க விரும்பிவில்லை'' என்று முழுமனதோடு பூரணமாக எம்மால் சொல்லமுடிந்தால் உடம்பு தூங்கவேண்டும் என்ற ஆசையை விட்டுவிடும். திடீரெனத் தூக்கம் கலைந்து பூரணமாக விழிப்பு வந்துவிட்டது என்பதை எம்மால் உணரமுடியும். ஆனால் நாம் எமது வாழ்க்கையில் இதனைப் பிரயோகம் செய்வது கிடையாது.எமது சரீரம் எதனைக் கேட்கிறதோ அதையே நாம் பூர்த்தி செய்துகொண்டு எமது காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறோம்.

''சரீரம் கேட்பதை எல்லாம் செய்யக்கூடாது'' எனப் பெரியவர்கள் சொல்லவில்லை. ஆனால் ஒரு சில சமயங்களிலாவது இந்தச் சரீரம் வேறு- நாம் வேறு என்னும் அனுபவம் எமக்குக் கிடைக்கவேண்டும். அப்படி ஓர் அனுபவம் கிடைத்துவிட்டால்..... அன்றிலிருந்தே எமது மனோசக்தி எமது புலன்களில் பரவ ஆரம்பிக்கும். அதை எம்மால் உணர முடியாது. அப்போது, அது எமக்கு ஆச்சரியமாக இருக்கும் என்று சொல்கிறார்கள்.

ஜோர்ஜ் குருஜி ஏஃப்- என்று ஒருவர் இருந்தார். அவர் தன்னுடைய சீடர்களுக்கு ஒரு விதமான பயிற்சி கொடுப்பார்.

''நிறுத்து பயிற்சி'' என்று அதற்குப் பெயர்! அது எப்படி என்றால் அவர் திடீரென ''நிறுத்து''என்று கத்துவார்.

சீடர்கள் அப்படி அப்படியே அங்கங்கே நின்று விடவேண்டும்.

தூக்கிய கை தூக்கியபடியே இருக்கவேண்டும். திறந்த வாய் திறந்தபடியே இருக்கவேண்டும். நடந்து கொண்டிருந்தவர்கள் ஒரு காலைத் தூக்கி இருந்தால் அது அப்படியே இருக்கவேண்டும்.

இதுதான் அந்தப் பயிற்சி. மூன்று மாதம் இந்தப் பயிற்சி நடக்கும். ஆரம்பத்திலேயே நிற்கும் போது தூக்கிய கால் தூக்கிய கை 'கீழே வை' என்று சொல்லும்.

கண் சிமிட்ட வேண்டும் என்று சொல்லும். உதடுகள் மூடு என்று சொல்லும். இருந்தாலும் கட்டுப்பாட்டுக்குள் எமது உடம்பு இருக்கிறது. இப்படி ஓர் மூன்று மாதப் பயிற்சி செய்தால் ஓர் உண்மை புரியும்.

எமது உடம்புக்கு கட்டளையை இடக்கூடிய ஏதோ ஒன்று எமக்குள்ளே இருப்பது புரியும்.அந்த ஏதோ ஒன்றுதான் நாம்.

இப்பொழுது கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

எமது உடம்புக்கு நாம் எப்பொழுதாவது கட்டளை இட்டிருக்கிறோமா? எப்பொழுதாவது யோசனை சொல்லி இருக்கிறோமா? கிடையாது.

எமது சரீரம் என்ன சொல்கிறதோ அதைத்தான் நல்ல பிள்ளைகள் போல் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மனஉறுதி இல்லாமல் இருப்பது கேவலம் என்று சொல்கிறார்கள் எமது ஞானிகள். ''புலன்களுக்குக் கட்டளை இடக்கூடியவன் சிறந்தவன் ஆகிறான்''. கீதையில் கிருஷ்ணன் சொல்கின்ற வார்த்தை இது. அதனாலே....

ஒரு சில சமயங்களிலாவது எமது சரீரத்தின் மீது நாம் அதிகாரம் செலுத்துவோம். எமது கட்டுப்பாட்டுக்குள் எமது உடம்பு இருப்பது போல் செய்வோம்.

ஒருவருக்கு மிகப் பெரிய உடம்பு அவரை அலைத்துக் கொண்டிருந்தது.

''இந்த உடம்பால் பெரிய தொந்தரவாகிவிட்டது'' என்று கவலைப்பட்டுக் கூறினார். ''இந்த உடம்பு அப்படி என்னதான் தொந் தரவு செய்கிறது? என்று கேட்டார் ஒருத்தர்.

''எங்கே போனாலும் இதுவும் என் கூடவே வந்து கொண்டி ருக்கிறது'' என்றார்.



**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# சமூக சேவையாளர்களைக் கௌரவிக்கும் சதாவதானி

*(கடந்தவாரத் தொடர்ச்சி)*

சதாவதானி கதிரவேற்பிள்ளை சங்கத்தின் கூட்டங்களுக்கு குறிப் பிட்ட நேரங்களில் வரும் உறுப்பி னர்களில் 25 பேரை அதிஷ்டக்கு லுக்கல் முறை மூலம் தெரிவுசெய்து அவர்களுக்குத் தலா 100 ரூபா ஊக்குவிப்பாக வழங்கும் திட்டமும் நடைமுறைக்கு வந்தது.



*சமூக சேவையாளர் விருதை (2007) யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் திருமதி பொ.இரத்தினசோதிக்கு வழங்குகிறார்.*

2006 ஆம் ஆண்டு முதல் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் உச்சக்கடன் எல்லை 30 ஆயிரம் ரூபாவிலிருந்து 60 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இந்தக் கடன் அதிகரிப்புக்கு சங்கத் தின் பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியது. இந்தக் கடனுதவு கூட்டுறவுச் சங்க கட்டட அறிவித்தலில் குறிப்பிட்ட நேரத் துக்கு முன்பாக வரும் உறுப்பினர் தெரியப்பட்டு கூட்ட முடிவில் அதிர்ஷ் டக் குலுக்கல் மூலம் 25 உறுப்பினர் களுக்கு 100 ரூபா வீதம் இரண்டாயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வந்தமை வழமையாகும்.

2006 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக கூட்டத்துக்கு வருகை தரும் உறுப்பினர்களில் அதிர்ஷ்டக் குழுக்கல் மூலம் 25 உறுப்பினர்களுக்கு தலா 200 ரூபா வீதம் ஐயாயிரம் ரூபா வழங்க ஆரம்பிக்கப்பட்டது. இந்த அதிர்ஷ்ட நடைமுறையால் உறுப்பினர்களி டையே சங்க நடவடிக்கைகளில் உற்சாகம் ஏற்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற் பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங் கத்தின் இருபதாவது வருடாந்த பொதுக் கூட்டம் 2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெற்றது.

20ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் கணக்கை ஆய்வு செய்த கணக்காய்வாளர் திருமதி சு.தாட்சாயணி சங்கத்தின் மூன்று வருட கணக்காய்வு அறிக்கையில் 01.09.2005 தொடக்கம் 31.08.2006 வரையான காலப்பகுதில் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 48 ரூபா 84 சதம் தேறிய இலாபம் அடைந்துள்ளது. 01.09.2006 தொடக்கம் 31.08.2007 வரையான காலப்பகுதியில் ஒரு லட் சத்து 5 ஆயிரத்து 238 ரூபா 72 சதம் தேறிய நட்டம் அடைந்துள்ளது. 01.09.2007 தொடக்கம் 31.08.2008 வரையான காலப்பகுதியில் 43 ஆயிரத்து 456 ரூபா 27 சதம் தேறிய இலாபம் அடைந் துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

> 2006 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதாக, கூட்டத்துக்கு வருகை தரும் உறுப்பினர்களில் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் 25 உறுப்பினர் களுக்கு தலா 200 ரூபா வீதம் ஐயாயிரம் ரூபா வழங்க ஆரம்பிக்கப்பட்டது.

சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள், ஆவணங் கள், ஏடுகள் ஒழுங்காகப் பராமரிக் கப்பட்டு வருவதுடன் சீராகவும் ஒழுங்காகவும் பதிவுகளை மேற்கொண்டு சிறந்த அகக் கணக்கு ஆய்வு முறையைக்கையாண்டுவருவதைக்காணக்கூடியதாக இருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தச் சங்கத்தில் பெரும்பாலும் விவசாய, வியாபார தொழிலை மேற்கொள் பவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் அங்கத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களின் எதிர்காலத் தேவை கருதி சேமிப் புக்களாக அங்கத்தவர்கள் சேமம், நிரந்தர வைப் புக்கள் போன்றன காணப்படுகின்ற போதிலும், இவர்களுக்கென ஓய்வூதியத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயற்படுத்தலாம். இதன் காரணமாக 60 வயதுக்குப் பின்னரும் தமது வருமானத்திலேயே வாழக்கூடியதாக அங்கத்த வர்களுக்கு இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத் துவதன் மூலம் அங்கத்தவர்களின் பொருளா தாரத்தை முன்னேற்றமுடியும் என்று அபிப்பிரா யப்படுகின்றேன் எனச் சிபார்சு செய்துள்ளார்.

சங்க சமூகத்தவர்களிடையே தனது செயற் பாடுகள் மூலம் இந்தச் சங்கம் மிகவும் நன் மதிப்புப் பெற்று விளங்குகின்றது. இனிவரும் காலங்களிலும் இதைவிட மென்மேலும் சிறப்பாக இயங்க நிர்வாகம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவரல் வேண்டும் என்ற தனது சிபார் சையும் அவர் தெரிவித்துள்ளார்.

**கர்ணன்**

மேலைப்புலோலி சதாவதானி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கமானது புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாண வர்கள், முதியோர்களைக் கௌரவித்து வருவ தோடு இருபதாவது ஆண்டிலிருந்து சங்க எல்லைப் பரப்புக்குள் சேவையாற்றிவரும் சமூக சேவையாளர்களையும், கௌரவிக்கத் தொடங் கியது. இந்த கௌரவிப்பானது 'சமூக சேவையாளர் விருது' என்று அழைக்கப்பட்டது.

சமூக சேவையாளருக்கான விருதின் நோக்கம்: கிராமத்தின் அபிவிருத்திக்கும், வளர்ச் சிக்குமாக தங்கள் வாழ்நாளில் குறிப்பிட்ட பகு தியை ஒதுக்கி சமூகத் தொண்டாற்றும் தன்னார்வ மக்கள் சேவையாளரைக் கௌரவித்தல் இவர்க ளைப் போன்ற மக்கள் சேவை யாளர்களைக் கௌரவித்தல் மூலம் புதிய சமூக சேவையா ளர்களை ஊக்கிவிப்பதும் வளர்ப் பதும் ஆகும்.

விருதுக்குத் தகுதி உடை யோர்:

புலோலி மேற்கு, புலோலி மத்தி, கிராம சேவையாளர் பிரி வுகளைக் கொண்ட சங்க எல் லைப்பரப்புக்குள் வசிப்போராக இருத்தல். கூட்டுறவு சார்ந்த நிறுவனங்களுடனும் ஏனைய சமூக நிறுவனங்களான சன சமூக நிலையங்கள், ஆலயங் கள், விவசாயச் சங்கங்கள், விளை யாட்டுக் கழகங்கள் போன்ற வற்றில் ஒன்றிலோ, பலவற் றிலோ இணைந்து அர்ப்பணிப் புடன் மக்களுக்காக தன்னார் வத் தொண்டாற்றுதல்.

வயது வேறுபாடின்றி ஆண், பெண் இருபாலாரும் தகுதியு டையவர் சமூக சேவையாளரின் வாழ்நாள் காலப்பகுதியில் விருது வழங்க முடியாத சந்தர்ப்பம் ஏற்படும் போது அவர் அமரத்துவம் அடைந்த பின்னரும் விருது வழங்கப்படலாம்.

தெரிவு: அந்தந்த ஆண்டுகளில் நிர்வாகம் செய்யும் செயற்குழுவே அவ்வாண்டுக்குரிய சமூக சேவையாளரைத் தெரிவு செய்யும்.

விருதின் பெயர்: சமூகசேவையில் முன் னோடி சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் வே.மார்க்கண்டேயபிள்ளை ஞாபகார்த்த சிறந்த சமூக சேவையாளர் விருது என அமையும்.

இந்த வகையில் 2007 ஆம் ஆண்டுக்கான சிறந்த சமூக சேவையாளராக இளைப்பாறிய தமிழ் ஆசிரியை திருமதி பொன்னம்மா இரத்தின சோதி தெரிவு செய்யப்பட்டார். இவரது அறிமுகவுரையை சங்கம் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தது.

1940 ஆம் ஆண்டில் பிறந்த இவர் பாலர் கல்வி முதல் சிரேஷ்ட தராதரப் பத்திரம் வரை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை, மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலை, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி ஆகியனவற்றில் கற்றுத்தேர்ந்தார். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் ஆசி ரியப் பயிற்சி நெறியை 1960 ஆம் ஆண்டு நிறைவு செய்தார்.

மக்களுக்கு அறிவுக் கண்ணைத் திறக்கும் அளப் பரிய சேவைகளில் ஒன்றாகிய ஆசிரிய சேவையில், 1964 ஆம் ஆண்டு தன்னை இணைத்துக் கொண்டு 1970ஆம் ஆண்டுவரை கொட்டாஞ்சேனை அ.த.க. பாடசாலையில் ஆசிரியர் பணியாற்றினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில்

# எந்தவொரு நாட்டுக்கும் இலங்கை பதிலளிக்காது



நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோரும் சர்வதேச அழுத்தங்களுக்குள் இலங்கை விழுந்துவிட்டதாக சில கட்சிகளும் குழுக்களும் தவறாக அர்த்தம் கற்பிக்கின்றன.

கொழும்பு,மார்ச் 27

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், அதனை முழுமையாக நடைமுறைப் படுத்த முடியாது.

இது தொடர்பில் இந்தியாவுக்கோ வேறு நாடுகளுக்கோ நாம் பதிலளிக்க வேண்டியதில்லை. பதிலளிக்கவும் மாட்டோம். இவ்வாறு கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கூறியுள்ளார் அமைச்சர் சிறிபாலடி சில்வா.

இந்த விடயம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிகளின் பங்களிப்பில்லாமல் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கானநடவடிக்கைகளை இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொள்ளும். அனைத்துலக சமூகம் இவற்றை நடைமுறைப்படுத்துமாறு கேட்க முன்னரே நாம் அவற்றை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துவிட்டோம்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாக அனைத்துலக அழுத்தங் களுக்குள் இலங்கை விழுந்துவிட்டதாக சில கட்சிகளும் குழுக்களும் தவறாக அர்த்தம் கற்பிக்கின்றன. எதிர்க் கட்சிகள் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முனைகின்றன.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் அவர்களின் பங்களிப்பை நாம் எதிர்பார்க்கவில்லை. சிலர் கருத்துக்கணிப்பு நடத்த வேண்டும் என்று பேசுகின்றனர். பரிந்துரை களை நடைமுறைப்படுத்த இவை எதுவும் தேவையில்லை.

நல்லிணக்க ஆணைக் குழு எமக்குப் பரிந்துரைத்துள்ள எல்லாப் பரிந்துரைகளையும் நடைமுறைப் படுத்த இலங்கை அரசு தயாராக இல்லை. எம்மால் ஏற்றுக் கொள்ளத்தக்க, சாத்தியமான பரிந்துரைகளை மட்டும் அரசு நடை முறைப்படுத் தும். இது தொடர்பாக இந்தியாவுக்கோ அல்லது வேறு எந்த நாட்டுக்கோ நாம் பதிலளிக்க வேண்டியதில்லை- என்றார். (ச)

# 8,000

### 3 மாதங்களில் டெங்கால் பாதிக்கப்பட்டோர்

கொழும்பு,மார்ச் 27

இந்த வருடத்தில் முதல் மூன்று மாதங்களுக்குள் மட்டும் 8,000 பேர் இலங்கை முழுதும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 30 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த அதிர்ச்சித் தகவலை சுகாதார அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடம் டெங்குநோயால் பாதிக் கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகள் மூலம் பெறப் பட்ட தரவுகளின் அடிப்படையில் மார்ச் மாத இரண்டாம் வாரம் வரை 8ஆயிரம் பேர் டெங்கு நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர். இவர்களில் 30 பேர் சிகிச்சை பயனின்றி மரணமடைந்துள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே டெங்குநோயால் பாதிக்கப் படுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. டெங்கு நோய் பாதிப்புக்குள்ளான 4ஆயிரம் பேர் மேல் மாகாணத்தில் மட்டும் இந்த 3 மாதங்களுக்குள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதுதவிர கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களிலும் கடந்த வருடத்தைக் காட்டிலும் இந்த வருடம் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் மக்கள் தொடர்ந்தும் அலட்சியம் காட்டி வருவதாலேயே இவ்வாறான அபாய நிலை தோன்றியுள்ளது. இனிவரும் காலங்களில் மக்களும் டெங்கு எதிர்ப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கவேண்டும்- என்றுள்ளது. (ங-22)

# மஹிந்த அரசுக்கு சவால்கள் புதிதல்ல

### பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக எந்த நோக்கில் பிரேரணை கொண்டு வந்ததென்பதை எண்ணிப் பார்க்க முடியாது.

கொழும்பு,மார்ச் 27

தற்போதைய அரசுக்கு சவால்கள் புதியதல்ல. ஜனாதிபதி பதவிக்கு வந்த நாள் முதல் சர்வதேச மட்டத்தில் இத்தகைய அழுத்தங்கள் வந்ததாகவும் அரசு சகல கட்டங்களிலும் அவற்றை வெற்றி கொண்டுள்ளது என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுயாதீன தொலைக்காட்சிச் சேவையில் ''நேற்று, இன்று, நாளை'' என்ற சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச ரீதியில் எத்தகைய அழுத்தங்கள் வந்த போதும் நாட்டின் இறைமையையும், சுயாதீனத்தையும் காட்டிக் கொடுக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு ஒருபோதும் தயார் இல்லை. சர்வதேச ரீதியிலும், உள்ளூரிலும் சவால்கள் வரும்போது அதனை எதிர்கொள்ளும் சக்தியாக மக்கள் அரசுடன் இணைந்து இருக்கின்றனர்.

அமெரிக்கா இலங்கைக்கு எதிராக எந்த நோக்கில் பிரேரணை கொண்டு வந்ததென்பதை எண்ணிப் பார்க்க முடியாது. அழுத்தங்கள் இருந்த போதும் இலங்கையுடன் ஆதரவாக இருந்த நாடுகளுக்கு அரசு கௌரவம் தெரிவிக்கிறது- என்றார். (ச)



மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் சத்தியப்பிரமாண வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதான நிகழ்வு நேற்று திங்கட்கிழமை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மின் வலு அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்துகொண்டு சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

# திருமண வீட்டில் கலாட்டா; 13 கடற்படையினர் கைது

கொழும்பு,மார்ச் 27

கஹடகஸ்திகிலிய பிரதேச திருமண வீடொன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 13 கடற்படையினர் உள்ளிட்ட 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் கஹடகஸ்திகிலிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

# சிறுவர் இல்ல குழந்தை சாவு

கொழும்பு,மார்ச் 27

பண்டாரவளை சிறுவர் இல்லம் ஒன்றில் திடீர் சுகயீனமுற்ற குழந்தை ஒன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளது.

பண்டாரவளை நீதிவானின் உத்தரவின் பேரில் சுஜானா சிறுவர் இல்லத்தில் இருந்த 3 மாதமும் 8 நாள்களும் நிறைந்த குழந்தை கடந்த 23ஆம் திகதி மாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளது. (ச)

# தமிழினியின் மறியல் இருவாரங்கள் நீடிப்பு

கொழும்பு,மார்ச் 27

சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்காததால் சிறை வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மகளிர் பிரிவைச் சேர்ந்த தமிழினியை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுப்பிரமணியம் சிவகாமி என்று அழைக்கப்படும் தமிழினி நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

தமிழினி தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையின் முழு ஆவணமும் சட்ட மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் நீதிமன்றில் குறிப்பிட்டனர்.

எனினும் சந்தேகநபர் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து சட்ட மா அதிபர் இதுவரை ஆலோசனைவழங்கவில்லை என்று இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர்.

கருத்துக்களை பரிசீலித்த கொழும்பு பிரதம நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி தமிழினியை எதிர்வரும் 9 ஆம் திகதி திகதிவரை [illegible] (ச)

# ரயில் மோதி ஒருவர் சாவு

கொழும்பு,மார்ச் 27

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இரவு நேர ரயிலில்மோதுண்டு ரதெல்லை மேல் பிரிவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நானுஓயா ரதால்லை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.40 மணிக்கு இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் ரதெல்லை மேல் பிரிவைச் சேர்ந்த வேலு சகாதேவன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை [illegible] வருகின்றனர். (ச)

# சொகுசு பஸ் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில்

சொகுசு பஸ்களையும் 300 ரூபா கட்டண அடிப்படையில் அதிவேக வீதியில் சேவையில் ஈடுபடுத்தவும்

கொழும்பு,மார்ச் 27

காலி - கொழும்பு சொகுசு பஸ் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் நேற்று திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

காலி - கொழும்பு அதிவேக வீதியில் சேவையில் ஈடுபட்டுள்ள சொகுசு பஸ்கள் காலி - கொழும்பு சொகுசு பஸ்தரிப்பு நிலையத்தில் தரித்து நிற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த பணிப் புறக்கணிப்பு மேற் கொள்ளப்பட்டது.

அதிவேக வீதி சொகுசு பஸ்களை வேறு இடத்தில் தரித்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு சொகுசு பஸ் ஊழியர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு இல்லையேல் தமது பஸ்களையும் 300 ரூபா கட்டண அடிப்படையில் அதிவேக வீதியில் சேவையில் ஈடுபட அனுமதி அளிக்குமாறு சங்கம் கேட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நவக்கிரி அருள்மிகு மாணிக்கப் பிள்ளையார் ஆலயம்

## தேர்த்திருவிழாச் சிறப்பு மலர்

## 27.03.2012



### சகல செல்வங்களும் கிடைக்க எனது ஆசி

யாழ் மாவட்டத்தின் நவக்கிரி என்னும் கிராமத்தில் நன்செய் நிலங்களும், புன் செய் நிலங்களும் மருத நிலத்தை தன்னகத்தே கொண்டு அடியார்க்கெல்லாம் சகல செல்வங்களை வழங்கி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் சென்ற 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இனிது நடைபெற்றுக் கொண்டு இன்றைய தினம் 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரதோற்சவம் இனிது நடைபெறுகின்றது. எனவே எம் பெருமானை தரிசிக்கும் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ ஸ்ரீ மாணிக்க விநாயகரை வேண்டி எனது ஆசிகளைக் கூறுகின்றேன்.

சிவாகம கிரிய பூஷணம்
சிவஸ்ரீ வே.சரணிய புரீஸ்வரக் குருக்கள் (ஆவரங்கால்
(அ.ச.நீதவான்) ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தானம்
வேப்பங்குளம்-வவுனியா.

### வற்றாத நீரூற்றின் அருகிருந்து அருள் சுரக்கும் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார்

வலி.கிழக்கு புத்தூர் மத்தியில் நவக்கிரி என்னும் பகுதியில் இருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் நீண்ட வரலாற்றுப் பெருமையுடையது.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த கடைசி அரசனாக விளங்கிய சங்கிலி அரசன் காலத்தில் சோழமண்டலத்திலிருந்து வந்து யாழ்.குடாநாட்டில் குடியேறிய மூதாதையர்களால் வழிபாடு செய்யப்பட்ட ஆலயம் இதுவாகும்.

புராதன மன்னர் காலத்தில் நில அறை இங்கிருந்து கீரிமலைவரை பயன்படுத்தப்பட்டது. இக்காரணத்தினால் நில அறை நிலாவரை என வழங்கப்பட்டது என சான்றுகள் பகர்கின்றன. மேலும் இதே இடத்தில் இராமபிரான் தனது பரிவாரங்களுடன் இலங்கை வந்து தங்கித் திரும்பிச் செல்லும் வழியில் தண்ணீர்த் தாகம் ஏற்பட்டபோது தண்ணீர் இல்லாது பரிவாரங்கள் அவதிப்படவே இராமபிரான் தனது வில்லினால் ஊன்றியபோது தண்ணீர் பீறிட்டு வந்து தாகம் தீர்த்தது. இந்நீரூற்று வற்றாத நீர்ப்பெருக்காக இன்றும் உள்ளது. இதன் ஆழம் அறிய முடியாத ஒன்றாக உள்ளது.

நவக்கிரி கிராமத்தில் அமைந்திருக்கும் இக்கேணியின் சுற்றுப் புறத்தின் மத்தியில் நவசைலேஸ்வர சிவன் ஆலயமும் உள்ளது.

இக்காலகட்டத்தில் எம்மூதாதை யர்களால் சிறிய கொட்டில் அமைத்து கல்லில் மாணிக்கக் கல் ஒளிவீச அக்கல்லை வைத்துப் பாலூற்றித் தினமும் வணங்கி வந்தார்கள் என்றும் தொடர்ந்து அவ்வூர் மக்கள் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரை வைத்து வழிபாடு செய்து வந்தார்கள் எனவும் கூறுவர்.

ஊர்மக்களின் ஊக்கத்தினாலும் விடாமுயற்சியினாலும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்குக் கோயில் அமைத்து புனருத்தாரணம் செய்து 1968 ஆம் ஆண்டு பங்குனி மாத ரோகினி நட்சத்திர தினத்தன்று கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1994 ஆம் ஆண்டு வரை ஊர் மக்களால் அலங்கார உற்சவம் பத்து நாள்களும் நடத்தப்பட்டுப் பதினோராம் நாள் பங்குனிமாத ரோகினி நட்சத்திரத் திரத்தில் தீர்த்தோற்சவமும் நடத்தப்பட்டது.

பின்னர் 1995 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுக் கொடியேற்றிக் கட்டுத்தேர் அமைத்து பங்குனி மாத ரோகினி நட்சத்திரத்துக்கு முதல் நாள் கட்டுத்தேரில் ஆரோகித்து மக்களுக்கு அருள்பாலிக்க வீதியுலாச் செய்தார்கள்.

2003 ஆம் ஆண்டு ஊர் மக்களாலும் வெளிநாட்டு அன்பர்களினாலும் சித்திரத்தேர் அமைப்பதற்குத் தேர்த்திருப் பணிச்சபை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. திருநெல் வேலியைச் சேர்ந்த சிற்பவல்லுநர் சீவரத்தினம் ஜெயப்பிரகாஸ் குழுவினரால் சித்திரத்தேர் அமைக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெள்ளோட்டம் நடத்தப்பட்டு தேர்த் திருவிழா அன்று இழுக்கப்பட்டது. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் புதிய சித்திரத் தேரில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.

இன்றைய தேர் உற்சவம் ஏழாம் ஆண்டு நிறைவைக் காட்டுகிறது. எல்லாம் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் திருவருளே.

பரிபாலன சபையினர், நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

### வேழமுகத்தானைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்

பிரணவத்தின் வடிவாகவும், பொருளாகவும் விளங்கும் நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் இன்று சித்திரத் தேரில் ஏழாவது ஆண்டாகப் பவனி வந்து மெய்யடியார்களுக்கு அருள் பாலிக்கின்றார்.

நவக்கிரிப் பதியினிலே வற்றாத நீரூற்றின் அருகில் இருக்கும் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் அருட் பெருக்கை உடையவர். வேண்டும் வரம் யாவும் அருளுவார். அவரது விசித்திரமான சித்திரவடிவத் தேரில் பிள்ளையார் பவனி வருவது கண் கொள்ளாக் காட்சியாகும். தேரோட்டத்தில் வடம்பிடிப்போர் மாணிக்கப்பிள்ளையா ரின் ஆனந்தபுவனம் எனப்படும் கைலாய பூமியில் ஏற்கனவே இடம்பிடித்தோர் ஆவர்.

எனவே ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் அடியார்கள் தம் வாழ்வில் சீரும் சிறப்பும் பேறும் பெருவாழ்வும் பெறுவதோடு நாட்டில் அமைதியும் சமாதானமும் பெறுவார்கள் என வாழ்த்தி நிறைவு பெறுகின்றேன்.

சுப்பிரமணியம் இராமச்சந்திரன்
தலைவர், ஆலய பரிபாலன சபை,
நவக்கிரி
ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோயில்.

**நிதூர்சன் பல்பொருள் வாணிபம்**
நிலாவரைச்சந்தி,
நவக்கிரி, புத்தூர்.

**மகிம்சன் களஞ்சியம்**
மொத்த விற்பனை நிலையம்
சுன்னாகம் வீதி, புத்தூர்,
நிலாவரை.
தொ.பே: 0771226728

### இரத பவனி சிறப்புற வாழ்த்துவோர்

**துர்க்கா அரைக்கும் ஆலை**
நெல்குற்றுதல், மா அரைத்தல், மிளகாய்த்தூள் அரைத்தல் துப்புரவாகச் செய்து கொடுக்கப்படும்.
சுன்னாகம் வீதி, நவக்கிரி,புத்தூர்.

**ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் இந்து இளைஞர் மன்றம்**
நவக்கிரி,புத்தூர்.

**எல்லாளன் விளையாட்டுக் கழகம்**
நவக்கிரி, புத்தூர்.

**மிதூஸ் கிறீம் ஹவுஸ்**
பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி, புத்தூர்.

**ராஜன் சேவிஸ் ஸ்ரேசன்**
மோட்டார் சைக்கிள் திருத்துநரும் சேவிஸ் செய்து கொடுப்பவரும்
நவக்கிரி,புத்தூர்.

**சுப்பிரமணியம் பல்பொருள் வாணிபம்**
சுன்னாகம் வீதி, நவக்கிரி,புத்தூர்.

**கஜமுகன் ஐஸ்கிறீம் ஹவுஸ்**
பல்சுவை பழவகைகள், கிறீம் வகைகள் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி, புத்தூர்.

**மாஸ்ரர் ஸ்ரோர்ஸ் விவசாயக்களஞ்சியம்**
உரவகைகள், கிருமிநாசினிகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இராச வீதி,கோப்பாய்.

**கந்தையா கல் உடைக்கும் ஆலை**
நவக்கிரி, புத்தூர்.
குட்டியப்புலம், வயாவிளான்.

**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
சகலவிதமான புடைவை வகைகள் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இல: 54, பெரியகடை,யாழ்ப்பாணம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சகல விதமான பொருள்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நவக்கிரி,புத்தூர்.

**ரவி விவசாயக் களஞ்சியம்**
உரவகைகள், கிருமிநாசினி வகைகள், விதைகள் நியாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
நவக்கிரி மேற்கு,புத்தூர்.

**சிவன் வெதுப்பகம், சிவன் சிற்றுண்டிச்சாலை**
சுவையான உணவு வகைகள், சிற்றுண்டிகள் குறித்த நேரகாலத்துக்கு ஒடருக்குச் செய்து தரப்படும்.
சுன்னாகம் வீதி,நவக்கிரி,நிலாவரை.

**தேனுஜன் ரேட்ஸ்**
எம்மிடம் கட்டடப் பொருள்கள், துவிச்சக்கர வண்டி உதிரிப் பாகங்கள், விவசாய உள்ளீடுகள், பெயின்ற் வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ளலாம்
சுன்னாகம் வீதி, நவக்கிரி சந்தி, புத்தூர். தொ.பே: 021 3007021

**சாலினி புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்**
சுன்னாகம் வீதி, நவக்கிரி,புத்தூர்.

**ராம் C.D வேல்ட் - எலக்ரோனிக்**
ஓடியோ, வீடியோ சிடி, அன்ரனா வகைகள் மற்றும் ரி.வி, றேடியோ உதிரிப்பாக விற்பனையும், இலத்திரனியல் பொருள்கள் திருத்தலும்.
220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் விவசாய நிலங்கள் மேய்ச்சல் தரையாக மாற்றம்

## அதிகாரிகளின் நடவடிக்கையால் மக்கள் கவலை

மட்டக்களப்பு,மார்ச் 27

கிழக்கில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள விவசாய நிலங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, ஏறாவூரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காணிப் பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவையில் அதிகளவான முறைப்பாடுகள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஏறாவூர் பற்று பிரதேசத்திலுள்ள சில பகுதிகளில் தமது குடியிருப்புகள் மற்றும் வயல் காணிகளின் உரிமை தொடர்பாக தொடர்ந்தும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக மக்கள் மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்கவிடம் முறையிட்டனர்.

போர்க் காலத்தில் மக்களால் விவசாயத்தில் ஈடுபட முடியாமல் போன சுமார் 5000 ஏக்கர் பரப்பளவு கொண்ட வயல் நிலங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் தங்களுக்கு அங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதனையடுத்து, மக்களின் குடியிருப்பு பகுதிகளாகவும் விவசாய நிலங்களாகவும் விளங்கிய பிரதேசங்களை கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகள் அடையாளப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் போருக்குப் பின்னர் சுதந்திரமான சூழ்நிலை காணப்படுவதாகக் கூறப்பட்டாலும் மூவினங்களும் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சனை தொடர்ந்தும் பாரதூரமான விவகாரமாக இருப்பதாக அவர் தெரிவித்தார். (ச)



சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போது, பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துல்கர் நயீம், கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப், மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி, அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத், தேசியகாங்கிரஸ் பிரமுகர் எம்.எஸ்.எம்.சபான், ரி.ரி.லங்கா முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.எம். ஜஹான் ஆகியோர் வரவேற்கப்படுகின்றனர். (31)

# 3 சகோதரிகளைக் காணவில்லை

## ஹற்றனில் பரபரப்பு; பெற்றோர் அச்சம்

ஹற்றன்,மார்ச் 27

ஹற்றன் நகருக்கு அண்மையிலுள்ள தொப்பித் தோட்டத்தைச் சேர்ந்த மூன்று சிறுமிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமற் போயுள்ளனர் என்று அவர்களின் பெற்றோர் ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஒன்பது, பன்னிரண்டு மற்றும் பதினான்கு வயதுகளையுடைய இவர்கள் மூவரும் சகோதரிகள். இவர்கள் காணாமற்போனதால் பெற்றோரும் கிராமத்தவர்களும் அச்சம் அடைந்துள்ளனர்.

இவர்களின் பெற்றோரும் ஏனையோரும் கடந்த மூன்று நாள்களாக பல்வேறு இடங் களில் சிறுமிகளைத் தேடிவருகின்ற போதும் இதுவரை அவர்கள் குறித்து எவ்விதமான தகவல்களும் கிடைக்க வில்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

வேதநாயகம் மெடோனா, வேதநாயகம் திலானி, வேதநாயகம் பாமிலா ஆகிய மூன்று சிறுமிகளே காணாமற்போயுள்ளனர்.

இவர்களில் இரண்டு சிறுமிகள் ஹற்றன் புனித கப்ரியல் கல்லூரியில் கல்விக் கற்று வருகின்றனர்.

சிறுமிகள் காணாமல் போனது தொடக்கம் இவர்களின் பெற்றோரும் தோட்ட மக்களும் சிங்கமலை வனப் பகுதியிலும், அண்மையிலுள்ள தோட்டப் பகுதிகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் கடந்த நான்கு நாள்களாகத் தேடி வருகின்றபோதும் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர் பாக ஹற்றன் பொலிஸார் விசாரணை களில் ஈடு பட்டு வருகின் றனர்.(ச)

# தாயின் சடலத்தை கொண்டுவர உதவி கோரும் தனயன்

பலாங்கொடை,மார்ச் 27

சவுதி அரேபியாவுக்குப் பணிபுரியச் சென்று உயிரிழந்த தனது தாயின் சடலத்தை நாட்டுக்கு எடுத்துவர உதவி புரியுமாறு பலாங்கொடையைச்சேர்ந்தநபரொருவர்கேட்டுள்ளார்.

எச்.ஜீ.சீலவதி எனப்படும் தனது தாய் கடந்த வருடம் ஜூன் மாதம் 18 ஆம் திகதி சவுதி அரேபியாவுக்குச் சென்றதாக அவரது மகன் கிரிசாந்த பீரிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் நவம்பர் மாதம் தனக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட எனது தாய், பணிபுரியும் வீட்டில் தன்னை அடித்து சித்திரவதை செய்வதாகவும் தன்னை எப்படியாவது நாட்டுக்கு அழைத்துக் கொள்ளுமாறும் கண்ணீர் விட்டுக் கூறியுள்ளார்.

இதனால் வேலை வாய்ப்பு முகவர்நிலையம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மத்திய நிலையம் என்பவற்றில் பல தடவைகள் முறைப்பாடு செய்து உதவி கோரினோம்.

இந்த நிலையில் கடந்த இரண்டாம் திகதி எனது தாய் இறந்துள்ளதாக அவர் வசித்த வீட்டு உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது. இதுவரை எனது தாயின் சடலம் நாட்டுக்கு கொண்டுவரப்படவில்லை என்று மகன் கிரிசாந்த பீரிஸ் குறிப்பிட்டார்.

''ஒரு முறை முகவர் நிலையத்தில் வந்து முறையிட்டபோது உங்களது தாய் பணிபுரியும் இடத்தில் இருந்து தப்பி ஓடி விட்டார் அதனால் அவரை கண்டுபிடிக்க முடியாது என அவர்கள் தெரிவித்துள்ளனர். உயிருடன் இருந்த போது எனது தாயை நாட்டுக்கு அழைத்துவர தவறிய அதிகாரிகள், அவர் இறந்த பிறகு அவருக்கு இறுதிக் கௌரவம் செலுத்தவாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அவர் கேட்டுள்ளார்.

தனது தாயின் பூதவுடலை நாட்டுக்குக் கொண்டுவருவதற்கு ஐந்து தடவைகள் பலாங் கொடையில் இருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்பு மத்திய நிலையத்துக்குச் சென்றுள்ள போதும் தீர்வு எதுவும் இல்லை என்று அவர் கவலையுடன் குறிப்பிடுகின்றார். (ச)


## தவறிவிட்டது

செல்லத்துரை குகராசா என்பவருடைய தே.அ.அட்டை (622903040 V), சாரதி அனுமதி பத்திரம் என்பன கொடிகாமத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டன.

சிவநாதபிள்ளை தயாளரூபன் என்பருடைய சாரதி அனுமதி பத்திரம், ATM Card என்பன பரமேஸ்வரா சந்திக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0772622988 / 0779102922

## வீடு தேவை

K.K.S வீதிக்கு அண்மையான தூரத்தில், இணுவில் தொடக்கம், தெல்லிப்பழை வரைக்கும் உள்ள தூரத்தில் வீடு வாடகைக்குத் தேவை. மாத வாடகை ரூ10,000/= (பத்தாயிரம்) வரை தரப்படும்.

தொடர்பு: 0770440570.


## மரண அறிவித்தல்

### பொன்னையா இராசரத்தினம்



நாரந்தனை வடக்கு,தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா -நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமணி - சிவயோகம் தம்பதியரின் அன்பு மருமகனும் அருந்ததிதேவியின் அன்புக் கணவரும், சிவகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமார்(பிரான்ஸ்), வசந்தகுமாரி (பிரான்ஸ்), தர்மகுமார்(பிரான்ஸ்), தணேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவவதனி (பிரான்ஸ்), திருமகள் (பிரான்ஸ்),பாலன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமனும், பிரான்ஸ்சை வசிப் பிடமாகக் கொண்ட சீனுசா, சீனோத், சீனுசன், சானுஷா, திரிஷா, கனுசியா, அட்சியா, இரட்சியா, லோஜினி, வானுஷன், திரிஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (26.03.2012) திங்கட்கிழமை பி.ப.2.00 மணியளவில் நடைபெற்ற பின் தகனக்கிரியைகள் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாட்டி,
ஊர்காவற்றுறை.

(16090) (6-7-12)

தகவல்:
குடும்பத்தினர்

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27-03-1942 மறைவு 27-03-2009

அமரர்

### பிரான்சிஸ் சேவியர் லூர்த்தம்மா

(தங்கமணி)

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமெல்லாம்
எம்மை விட்டுப் பிரிந்து
மூன்றாண்டானதோ!
உங்கள் நினைவலைகள்
என்றென்றும் எம்முடன்
நிலைத்திருக்கும்.

5ஆம் வட்டாரம்,
இரணைப்பாலை,
புதுக்குடியிருப்பு.

பிரான்சிஸ் சேவியர்,
பிள்ளைகள்.

(16020) (6,7,10)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

### நாகேஸ் குண்டுமணி

தோற்றம் 08★10★1945 மறைவு 08★04★2011

திதி:27.03.2012

அன்பாலே எமை அணைத்து
பண்பாக எமை வளர்த்து
பார் போற்ற எமை வாழ வைத்த தாயே!
உங்கள் ஆத்மா சாந்திடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

பிள்ளைகள்-நகுலேஸ்வரி,நாகேஸ்வரி, நவரஞ்சிதமலர், நவரஞ்சிதராசா(லண்டன்),நவயோகேஸ்வரி(சுவிஸ்), சறோஜினிதேவி, நகுலேஸ்வரன்(பாபு), மருமக்கள்,பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

செல்வம் மில் வீதி,
இமையாணன் ,
உடுப்பிட்டி.

(சி/158)(6-7-12)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 10-05-1928

இறப்பு 08-04-2011

திதி: பஞ்சமி (27.03.2012)

திருமதி

### சுந்தரம் இராமலிங்கம்

ஆண்டு ஒன்று ஆகி விட்டதம்மா எங்கள் ஆறாத்துயரோ இன்றும் ஓயவில்லை. ஆண்டவன் திருவடியை அடைந்த நீங்கள் மீண்டும் எம்மிடம் வரமாட்டீர்களோ?

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(16073) (6,7,10)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது மேம்பாலத் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை புனித பிரான்சிஸ் சவேரியர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (31)

### மஸ்கெலியா மக்கள் அதிர்ச்சி

# முத்துமாரியம்மன் ஆலயத்தில் சூட்சுமமான முறையில் திருட்டு

மஸ்கெலியா,மார்ச் 27

திருட்டுக் கும்பல்களின் அக்கிரமங்கள் நாட்டில் உக்கிரமடைந்துவரும் நிலையில்சமூகவிரோதிகள் கோவில்களையும் விட்டுவைக்காது அங்கும் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

மஸ்கெலியா, ரக்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் பூட்டப்பட்டிருந்த கதவு உடைக்கப்படாமல் தெய்வத் திருவுருவ ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன. இவ்வாறு திருடப்பட்ட பொருள்கள் தொடர்பில் புதைத்து கிடக்கும் மர்மங்களை அம்பலப்படுத்துவதற்காக பல கோணங்களிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நல்ல தண்ணீர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த ஆலயத்தின் பூட்டப்பட்டிருந்த கதவை மிகவும் சூட்சுமமான முறையில் உடைத்து அங்கிருந்த அம்மன் திருவுருவத்துக்கு அணிவிக்கப்பட்டிருந்த இரண்டரை பவுண் பெறுமதியான ஆபரணங்களையும், உண்டியலில் இருந்த பணத்தையும் திருடர்கள் கொண்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ்அதிகாரிமேலும் தெரிவித்ததாவது:

கடந்த சனிக்கிழமை இரவு முத்துமாரியம்மன் ஆலயக் கதவை உடைத்து அங்கிருந்த அம்மன் திருவுருவத்துக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன என்று பட்டுள்ளதாக ஆலய பூசகர் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்தார். இந்த முறைப்பாட்டை அடுத்தே சம்பவம் குறித்த விசாரணையை நாம் ஆரம்பித்தோம்.

ஆலயத்தில் சூறையாடல் இடம்பெற்றதற்கான தடயங்கள் எதுவும் இல்லாத வகையில் மிகவும் சூட்சுமமான முறையில் இந்தத் திருட்டு அரங்கேற்றப்பட்டுள்ளது.

திருடர்களைக் கண்டு பிடிக்க ஹற்றன் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைவிரல் அடையாளங்களைச் சேகரித்துள்ளனர் - என்றார். (ச)

> ஆலயத்தில் சூறையாடல் இடம் பெற்றதற்கான தடயங்கள் எதுவும் இல்லாத வகையில் மிகவும் சூட்சுமமான முறையில் திருட்டு அரங்கேற்றப்பட்டுள்ளது.

## போலி அனுமதிப் பத்திரம் வைத்திருந்த சாரதி கைது

அம்பாறை,மார்ச் 27

அம்பாறை, சவளக்கடை பிரதேசத்தில் போலி சாரதி அனுமதிப்பத்திரத்துடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற ஒருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று சவளக்கடை பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டூரில் இருந்து தனது சொந்த வேலைக்காக சம்மாந்துறை பிரதேசத்துக்குச் சென்று திரும்பியபோதே இவர் கைது செய்யப்பட்டார்.

சவளக்கடை வீதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார், இந்த மோட்டார் சைக்கிளை செலுத்தியவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை வாங்கிப் பார்த்தபோது போலி சாரதி அனுமதிப்பத்திரம் என்று தெரியவந்ததை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இந்த நபர் முகவர் ஒருவருக்கு 29,000 ரூபாவை செலுத்தி இந்தச் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றிருந்ததாக பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கையை சவளக்கடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# மனைவியை அடித்துக் கொன்ற கணவன் சிலாபம் ஆஸ்பத்திரியில்

மாதம்பை,மார்ச் 27

மாதம்பை - இரட்டைக்குளம் பகுதியில் கணவன் தனது இளம் மனைவியை அடித்துக் கொன்ற கணவன் தானும் விஷம் அருந்த முயற்சி செய்துள்ள சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையால் கணவன் தனது மனைவியை சரமாரியாக அடித்துத் துன்புறுத்தியுள்ளார்.

இதனால் திஸ்னா சோபனி (வயது-21) குடும்பப் பெண் துடிதுடித்து மரணமானார். இதனையடுத்து அச்சம் கொண்ட கணவன் தானும் உயிரை மாய்த்துக்கொள்ள முயற்சித்துள்ளார். கணவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பில் சிலாபம் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாதம்பை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 11 ★ 02 ★ 1946



மறைவு 08 ★ 04 ★ 2011

**இராமநாதன் புவனேந்திரன்**

( புவி)

வாழ்க்கை எனும் பாதையிலே
நீ காட்டிய பாசமுடன்
சீரான வாழ்வு வாழ்கையிலே
உங்களை இழந்து ஓராண்டானதே
உயிரோடும் உணர்வோடும்
கலந்துவிட்ட
உம் நினைவுகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

375/1, கோயில் வீதி,
நல்லூர்.

(18104)(6-7-12)

குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்



திருமதி
**பரமநாதர் அன்னம்மா**

கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த திருமதி பரமநாதர் அன்னம்மா நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் பரமநாதரின் (ஓய்வுபெற்ற பிரதமலிகிதர் சார்ணியா தோட்டம், பதுளை) அன்பு மனைவியும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் ஜெகதீஸ்வரி (ஆசிரியை, யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்), சரோஜினிதேவி (ஆசிரியை, கோப்பாய் தெற்கு, றோ. க.த.க. பாடசாலை), பராசக்தி (ஆசிரியை, சென்ற் அன்ரனிஸ் பாளிகா மகா வித்தியாலயம், கொள்ளுப்பிட்டி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சற்குணலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மற்றும் கிருஸ்ணகுமார் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற லோகானந்தனம் மற்றும் நந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், கம்சானந்தி (விரிவுரையாளர், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி, கொட்டகலை), சசிகலா (ஆசிரியை, யா/ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி-புத்தூர்), பிரமலா, முகுந்தன் (ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கெங்காதரன் (ஆசிரியர், யா/சென்ற் அன்ரனிஸ் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மதுசாளினி, கோபிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் தம்பிஐயா (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், தர்மலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசுவாமி கோயிலடி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(16096) (6,7,10)


## சந்தை மக்கள் பாவனைக்கு

மட்டக்களப்பு,மார்ச் 27

போர்க் காலத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை சந்தை மீண்டும் நிர்மாணிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொது மக்களின் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்துகொண்டு சந்தையினை பொது மக்களின் பாவனைக்காகக் கையளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ முகாமான முறக்கொட்டாஞ்சேனை முகாம் அமைக்கப்பட்டிருந்த பிரதேசத்தில் பாடசாலைக் கட்டடங்கள், சந்தை என பலவும் உள்வாங்கப்பட்டிருந்தன.

போர் நிறைவு பெற்றதும் சந்தைக் கட்டடம் உள்ளிட்ட பல பகுதிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய கால நிலை நிலவும்.

# சிறப்பாக இயங்கும் முதியோர் இல்லம்

நவாலி, மார்ச் 27

வடமாகாணத்தில் முதலாவது பகல் பராமரிப்பு நிலையம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஆனைக் கோட்டையில் நிரந்தர காணியில் அமைக்கப்பட்டது.

இந்தப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்கள் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகின்றன. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண சமூக சேவைத் திணைக்கள பணிப்பாளர் திருமதி தயாளினி இன்பராசா.

கடந்த 22 ஆம் திகதி ஆனைக்கோட்டையில் பகல் பராமரிப்பு நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பகல் பராமரிப்பு நிலையத்தில் தங்கியுள்ள முதியவர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் வழங்குவதற்கு எமது திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிகழ்வில் வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் கருத்துத் தெரிவிக்கையில், ''ஆனைக்கோட்டையைப் பொறுத்தவரையில் இங்கு சகல அமைப்புகளும் செயற்பட்டு வருகின்றன. யாழ். மாவட்டத்தில் பல முதியோர் சங்கங்கள் உள்ளன. இப்படியான பராமரிப்பு நிலையங்களில் தங்குவதைத் தாழ்வாகச் சிலர் நினைக்கின்றனர். அவ்வாறு இல்லாமல் எங்களுக்கான உரிமையான இடம் இது என நீங்கள் கருத வேண்டும்''- என்றார். (ந-100)

# உலக செல்வமா? விண்ணக புதையலா?

தம்மைப் பின்பற்ற வந்த செல்வரான இளைஞரிடம் இயேசு இவ்வாறு கூறுகின்றார். ''நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராக இருப்பீர்'' (மத் 19:21) நாம் வறியரானால்தான் விண்ணரசு என்னும் ஒப்பற்ற புதையலை அடைய முடியும் என்பதையே மேற்படி நிகழ்வு சுட்டிக்காட்டுகின்றது. எந்த அளவுக்கு ஒருவர் தம்மைத்தாமே தாழ்த்துகின்றாரோ அந்த அளவுக்கு அவர் உயர்ந்தவர் ஆவார். உயர்ந்தவர்களால்தான் தம்மைத்தாமே தாழ்த்திக்கொள்ள இயலும். நீதி, நியாயம் இல்லாமல் சேர்க்கும் செல்வம் உண்மையிலே அழிவைத் தரும். அது இளமையில் செருக்கையும், முதுமையில் தனிமை உணர்வையும் தரும். ஒரு விதத்தில் இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசு கூட புதையலைக் கண்டடைந்தவன்தான். ஆனால் உலக சுகங்களுக்காக அவன் அந்தப்புதையலை விற்கிறான். அமைதி இழந்து தற்கொலை செய்கிறான். உலக சுகங்கள் முக்கியம் என்று நினைப்பவர்கள் உலக சுகங்களில் மூழ்கி அழிகின்றனர். ''செல்வச் செழிப்பில் இருப்பவர்கள் தாங்கள் தாழ்நிலை அடையும்போதும், மகிழ்ச்சியாய் இரார்கள். ஏனெனில் செல்வர்கள் புல்வெளிப் பூவைப்போல மறைந்தொழிவர். ''கதிரவன் எழ, வெயில் ஏறிப்போய் புல் உலர்ந்துபோம். அதன் பூ வதங்கி விழும். அதன் அழகிய தோற்றமும் அழிந்துவிடும். அவ்வாறே செல்வரும் தம் அலுவல்களில் ஈடுபடும்போதே அழிவுறுவர்'' என்கிறார் திருத்தூதர் யாக்கோபு (யாக் 1:10-11)




இறுதித் தீர்வை நாளில் நமது செல்வத்தைக் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எவ்வளவு மிகுதி இருக்கும்? விண்ணரசை அடைய நாம் ஈட்டிய செல்வம் போதுமா? பசியாய், தாகமாய், நோயுற்றோராய், ஆடை இழந்தோராய், கைதியாய் இவ்வுலகில் வாழ்ந்தவர்கள் விண்ணரசு சேரும்போது நம் நிலை என்னவாக இருக்கும்? அவர்கள் முகத்தில் இயேசுவை பார்த்தோமா?'' மிகச் சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு ''நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 25-40) என்கிறார் ஆண்டவர். இதுதான் புதையலைத் தேடுவதற்கு எளிதான வழி.

அருள்நேசன், குருநகர்.

# வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தால் மட்டுமே ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பருத்தித்துறைப் பிரதேச செயலர்பிரிவுக்குஉட்பட்ட சகல ஓய்வூதியர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாகவாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கான ஜனவரி மாத ஓய்வூதியச் சீட்டுடன் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் அனுப்பி வைக்கபட்டு எதிர்வரும் 31ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இதுவரை வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தை சமர்ப்பிக்காதவர்களுக்காக இந்தக் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

எனவேஇதுவரைவாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்காதவர்கள் கிராம சேவகரின் உறுதிப்படுத்தலுடன் அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். மே மாதத்திலிருந்து வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்காதவர்களுக்குப் பத்திரம் சமர்ப்பிக்கும்வரை ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-14-253)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

பளை, மார்ச் 27

பளைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வேலணை மேற்கு வாசியின் தேசிய அடையாள அட்டை பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த அடை யாளத்தைக் காட்டிப் பெற் றுக்கொள்ளுமாறு பிரதேச சபைத் தவிசாளர் ப.டொ. அன்ரன் அறிவித்துள்ளார். (ந-9)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை

குருநகர், மார்ச் 27

யாழ். கடற்கரை வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ள போதிலும் இவ்வீதியூடாகப் பாஷையூருக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள திருச்சிலுவை சுகநல வைத்தியசாலைப் பகுதி தொடக்கம் பாஷையூர் புங்கன் குளம் வீதிச் சந்தி வரையுள்ள பகுதி செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

மணல் பகுதியாகக் காணப்படும் மேற்குறிப்பிட்ட இந்த வீதியூடாக யாழ்- கொழும்புத்துறை போக்குவரத்து சேவைகள் நடைபெறுகின்றன. பெருமளவிலான மக்கள் பல் வேறு தேவைகளின் பொருட்டு இந்த வீதியைப் பயன்படுத்துவதனால் வெகு விரைவில் இந்த வீதி திருத்தியமைக்கப்பட வேண்டும் என பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். (ந-51)

# நெடுந்தீவில் பஸ் சேவையை உடனடியாகச் சீர்செய்யுங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

நெடுந்தீவில் பஸ் சேவையை உடன் சீர் செய்யுமாறு நெடுந்தீவு பிர தேச சபைத் தலைவர் த.றெக் ஷியன் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடக்கு முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நெடுந்தீவில் பஸ் சேவை முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் கடந்த காலம் சேவை முற்றாக இடம்பெறவில்லை எனவும் தெரிவித்த அவர் இதுகுறித்து இ.போ.ச யாழ்.அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை குறிகாட்டுவானுக்கு காலை 7.15 மணிக்கு வந்து சேரும் நெடுந்தீவுப் பயணிகள் அந்த நேரத்தில் யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை இல்லாமையால் சிரமப்படுவதாகவும் இது தொடர்பாகவும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்துப் பயணிகளுக்கான சேவைகள் தடங்கலின்றி நடைபெற உதவவேண்டும் எனக் கேட்டுக் கொண்டதாகவும் அவர்மேலும் கூறினார். (த-7)

## சாவகச்சேரி பிரதேசசபை

15.04.2012 – 31.12.2012 வரை மிருசுவில் மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வியும், கொடிகாமம் பஸ்தரிப்பிடத்திலுள்ள பொது மலசலகூடம் குத்தகைகக்கு விடுவதற்கான கேள்வி அறிவித்தலும் 2012

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 27.03.2012 - 02.04.2012
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி :- 03.04.2012
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 04.04.2012 பி.ப 2.00மணி

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரங்கள் | ஆகக்குறைந்த கேள்வித தொகை(Vat ,Nbt தவிர) | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (Vat ,Nbt தவிர) |
|---|---|---|---|---|
| 1 | மிருசுவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 75,000.00 | 1,000.00 | 500.00 |
| 2 | கொடிகாமம் பஸ்தரிப்பிட மலசலகூடம் | 8,500.00 | 500.00 | 250.00 |

நிபந்தனைகள்

இல. 1 தொடர்பில்,

1. இறைச்சிக்கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
2. கால்நடைகள் சுகாதாரப்பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கடைகளுக்கு கொண்டு வரப்படுதல் வேண்டும்.

இல 2 தொடர்பில

3. மலசலகூட துப்புரவு பணிகள் யாவும் குத்தகைகாராலேயே செய்யப்பட வேண்டும்
4. மலக்கழிவு சாவகச்சேரி பிரதேசசபையின் கழிவுறுஞ்சும் வாகனத்தால் அகற்றப்படும்
5. பிரதேசசபையால் நியமிக்கப்படும் உத்தியோகத்தரால் மேற்பார்வை செய்யப்படும்
6. 24 மணி நேரமும் மலசலகூடம் திறக்கப்பட வேண்டும்
7. ஒருவர் ஒருதடவை பாவிப்பதற்கு 5ரூபாவிற்கு உட்பட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டும்
8. பொதுச்சுகாதார பரிசோதகரால் தெரிவிக்கப்படும் சுகாதாரம் சம்பந்தமான குறைபாடுகளை குத்தகைகாரரே நிவர்த்தி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்யப்படும்.

இல 1, இல 2 தொடர்பில்

9. கேள்வித்தொகை, படிவக்கட்டணம், மாதவாடகை என்பவற்றுடன் 12% VAT, 2% NBT சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
10. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒருவாரகாலத்தில் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
11. கேள்விப்படிவத்தின் தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் குத்தகை விவரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை தவிசாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
12. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
13. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமைப்பணிமனையில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சிற்றம்பலம் துரைர்ராஜா
தவிசாளர்
சாவகச்சேரி பிரதேசசபை
கொடிகாமம் 27.03.2012.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கண்ணில்
04
03
1950



நெஞ்சில்
27
03
2007

### அமரர் திருமதி. இராஜேஸ்வரி கருணை ஆனந்தன்

விண்ணுலகம் சென்று நீ ஐந்தாண்டு மறைந்தாலும்
மண்ணுலகில் எமைநோக்கி தண்ணொளி வீசுகின்றாய்
கன்னுதலில் உனைவைத்து தினமும்நாம் பூசிக்கின்றோம்
இன்னுலகில் எம்முடனே சேர்ந்து வாழ வாராயோ !

உமது பிரிவால் துயருறும்
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

14-A/6, டிக்மன்ஸ் வீதி, கொழும்பு - 04. PH : 2555108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

**க.பொ.த(உயர் தரம்) 2014 புதிய அனுமதிகள்**

2011 டிசெம்பரில் நடைபெற்ற க.பொ.த (சாதாரணதரப்) பரீட்சையில் சித்தியடைந்து கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைப் பிரிவுகளில் கல்விபயில விரும்புபவர்கள் 02.04.2012 ஆம் திகதி அல்லது அதற்கு முன் விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் சமர்ப்பித்து தமது கற்கை நெறியை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**குறிப்பு:** *மேற்படி பரீட்சையில் 5A பெறுபேற்றுக்கு மேல் உள்ளவர்கள் மகாஜனக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தி நிதியத்தால் வழங்கப்படும் கொடுப்பனவு மாதாந்தம் 2000/= புலமைப்பரிசில் திட்டத் திற்கும் 9A பெறுபேறு உள்ளவர்கள் 2500/= புலமைப் பரிசில் திட்டத்திற்கும் விண்ணப்பிக்க முடியும்.*

**அதிபர்.**


## தொழில்நுட்ப உத்தியோகத்தரை தாக்க முயன்ற பிரதேச சபை உறுப்பினர்

### சாவகச்சேரி அலுவலகத்தில் அடாவடி

சாவகச்சேரி பிரதேச சபை தொழில் நுட்ப உத்தியோகத்தரை தலைவர் முன்னிலையில் கதிரையால் தாக்க முற்பட்டார் பிரதேச சபை உறுப்பினர். அங்கு வந்த செயலாளரையும் தகாத வார்த்தைகளால் அவர் வசைபாடியுள்ளார். கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து மறுநாள் பிரதேச சபை உத்தியோகத் தர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட போதிலும் தலைவரின் தலையீட்டால் நிறுத்தப்பட்டுள்ளது.

மதகு அமைக் கும் பணியில் ஈடு பட்ட கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதி நிதிகள் அதற்குரிய கொடுப்பனவு வழங்குவதில் பாரபட்சம் காட்டிய தாக தலைவரிடம் முறையிட்டதையடுத்து தலைவர் குறித்த உத்தியோகத்தரையும் செயலாளரையும் அழைத்து விசாரித்துக் கொண்டிருந்தபோது அங்கிருந்த பிரதேச சபை உறுப்பினர் உத்தியோகத்தரை கதிரையால் தாக்க முற்பட்டதாகவும் அதனைத் தடுக்க முற்பட்ட செயலாளரை தாகாத வார்த்தையால் ஏசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் எதிரொலியாக அனைத்து உத்தியோகத்தர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட முற்பட்ட வேளையில் தடுத்து நிறுத்தப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த பிரதேச சபை உறுப்பினர் தெற்கு பேரினவா தக் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது.

## சூழலை பாதுகாக்க தவறியவருக்கு அபராதம்

டெங்கு நோய் பரவக்கூடிய விதத்தில் வீட்டுச்சூழலில் குப்பை கூளங்களை வைத்திருந்த நபர் ஒருவருக்கு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.கே.நடராசா மூவாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் வசிக் கும் ஒருவர் தனது சொந்த வீட்டில் டெங்கு பரவக் கூடியவாறு குப்பைகளை வைத்திருந்தார் என சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.கே.நடராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-8)

## தேர்த்திருவிழா

நவக்கிரிஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.42 மணிக்கு நடைபெறவுள்ளது. (வ-13)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி ஜெகதீஸ்வரி கிருஸ்ணகுமார் அவர்களின் அன்புத் தாய்

திருமதி

**பரமநாதர் அன்னப்பிள்ளை**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
*யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய்.*

### GERMAN SWISS DEUTSCH CLASSES

ஜேர்மன் டொச், சுவிஸ் டொச் வகுப்பு தூதரகத்தில் (EMBASSY)நடத்தப்படும் பரீட்சைக்கான வகுப்பு அடுத்த புதிய பிரிவு ஆரம்பம்.

இடம்: 464, ஆஸ்பத்திரி வீதி, Jaffna College

(16093) (6,7,12) 0775319551

### தவறிவிட்டது

நச்ச வேலைசெய்யும் கணக்கு விவரம் எழுதப்பட்ட கொப்பிகள் இரண்டு (Yellow Bag) சங்கத்தானைக்கும் - வரணிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டு எடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும், நாவளை, இயற்றாலை.

(16611)(6-7-12) தொ.P:077112631

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 30.03.2012 பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்.

**குறிப்பு:** எம்மிடம் புறொயிலர் குஞ்சுகள் கொள்வனவு செய்பவர் களிடம் திரும்பவும் இறைச்சிக்கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

**தொடர்பு:**

நல்லூர் பாம் சென்ரர், 19,முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 0212226944.

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி.0776225944.

சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை, 0778996085.

(16102) (6,7,12)

### கோழிக் குஞ்சு விநியோகம்

BAHIRAHA NO-1 புறொயிலர் குஞ்சுகள் (28.03.2012) அன்று விநியோகிக்கப்படும். விலை 105/= ரூபா மட்டுமே. பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.

றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை

**T.P: 0776090926**

### நாம்பன் கன்று விற்பனை

பத்து மாதங்கள் பூர்த்தியான கறுப்பு வெள்ளை மறையன் நாம்பன் கன்று ஒன்று கூறுவிலை அடிப்படையில் விற்பனை செய்யப் படவுள்ளது. வாங்க விரும்புவோர் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள வாழ்வக இல்லத்தில் மார்ச் 28 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரை காலை 8 மணிமுதல் பி.ப 4 மணிவரை பார்வையிட்டுக்கொள்ள முடியும். தங்களது கூறுவிலைக்கடிதத்தின் இடதுபக்க மேல்மூலையில் "நாம்பன் கன்று விற்பனை" எனக் குறிப்பிட்டு, தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம். என்ற முகவரிக்கு 03.04.2012 க்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு அனுப்பிவைக்கவும்.

வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

### உங்களுக்கு சுத்திகரிப்புத் தேவைகளில் பிரச்சினையா?

உங்களுக்கான எமது சேவைகள்

நிறுவனங்கள், வீடு, ஹோட்டல், Tiles, அல்ஹபோன் பார்டிஷன், ஷோ றூம், Show Room Glass, Floor Polishing / Vaccine / Carpet Shampoo போன்ற சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Specialized Janitorial Services**

தொடர்பு: இல. 536/1 கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி,யாழ்ப்பாணம்.
T.P: 021 4921108, 0777286069

### Win Institute

திருநகர் வீதி, கிளிநொச்சி
T.P:021490 2589

**கலை, வர்த்தகம்**
A/L 2014
(2013 A/L வகுப்புக்களும்)
**ஆரம்பம்: 06.04.2012**
தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு ஏற்ப நேர அட்டவணை

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

**நயினாதீவு-பிரண்டையம்பதி, ஸ்ரீ காளி அம்மன் கோயில்**

அம்பிகை அடியார்களே!

நிகழும் மங்களகரமான கரவருஷம் பங்குனித்திங்கள் 15ஆம் நாள் 28.03.2012 புதன்கிழமை காலை 7.30 மணிமுதல் 8.50 மணி வரையுள்ள ரோகினி நட்சத்திரமும் ஷஷ்டித்திதியும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் பிரதமகுரு ஆகமபிரவீனா ஸ்ரீலஸ்ரீ கைலாயநாத வாமதேவ சிவாச்சாரியார் (கோயில் பிரதம குரு மணியும், நயினை நாகபூஷனி அம்மன் கோயில் ஆதீன குருமணியும்) அவர்கள் தலைமையில் பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகள் நடைபெற அன்னையின் திருவருள் கூடியிருப்பதால் அடியார்கள் அனைவரும் வருகைதந்து அம்பாளைத் தரிசித்து அம்பாளின் அருளாசிகளை பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இன்று (27.03.2012) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரிகைகள் ஆரம்பமாகும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

பரிபாலன சபையினர்
ஸ்ரீ காளி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(16074) (6,7,10)

உலக நாடக விழாவில் இன்று வெளிவருகின்றது
**திரு. க.இ. கமலநாதன்** அவர்களின்

## "ஆச்சி அச்சாப்பாட்டி"

**சிறுவர் நாடகம் (7)**

தலைவர்-S.K. யோகநாதன் (பீடாதிபதி)
பிரதம விருந்தினர்- அருட்கலாநிதி.N.மரியசேவியர் அடிகளார்
இடம்- யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



விழாக்குழுவினர்.

## பணிநிலை வெற்றிடங்கள்

**ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கு கீழ்க் காணும் பணிநிலைகளில் வெற்றிடங்கள் உண்டு.**

**கணித ஆசிரியர்**
**விஞ்ஞான ஆசிரியர்**
பட்டதாரி ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள்,ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**கணினி ஆசிரியர்**
பட்டதாரிகள்,டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள், வெப்சயிற் டிசைன் பண்ணக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து, இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடிய நல்லொழுக்கம் உடல் ஆரோக்கியமுள்ள 21 முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

*விண்ணப்ப முடிவு திகதி: 05.04.2012*

திரு.தி.இராசநாயகம்,
தலைவர்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**தொலைபேசி இல: 0770604950, 0214923118**

(16076) (6,7,12)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



செந்தில் வேலவனின் பதியாம் நல்லூரில்
கிராமமட்ட அமைப்புகளை வளர்த்தெடுத்து
கலை, கலாசாரத்தைப் பேணிக்காத்து
சுயதொழில், விவசாயம், கால் நடைதனை ஊக்குவித்து
மலர்ந்த முகத்துடன் மக்களை வழிநடத்தி
நல்லமுறையில் நல்லூரில் நற்பணி பூண்டு
மக்கள் மனந்தனில் உறைந்து மதிப்பையும்,
அன்பையும் பெற்ற எங்கள் பிரதேச செயலர்

**திரு.பா. செந்தில் நந்தனன்**
(SLAS அதிசிறப்பு)

அவர்கள் மேன்மேலும் உயர்வடைய
இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
J/116, கோண்டாவில் மேற்கு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'அந்தக் காளை' விற்பனைக்கு; உயிர் பாதுகாப்பு கட்டாயம்

## யாழ்- அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

திருநெல்வேலிக் கால் நடைப் பண்ணையில் ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காளை மாடு இறைச்சிக்காக வெட்டுவதற்குத் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தக் காளையை கொள்வனவு செய்து பாதுகாப்பதற்கு விருப்பம் உடையவர்கள் உரியவருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். அதே சமயம் சம்பந்தப்பட்ட கொள்வனவாளர் குறித்த மாட்டின் உயிர்ப்பாதுகாப்புக்கும் உத்தரவாதம் வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 22 ஆம் திகதி திருநெல்வேலிக் கால் நடைப் பண்ணையில் ஏலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காளை மாடு இறைச்சிக்காக வெட்டப்படவிருந்ததை அறிந்த பொது மக்கள்,சமயப் பிரதிநிதிகள் மற்றும் கருணையுள்ளம் கொண்ட பலரினதும் வேண்டுகோளுக்கிணங்க பொலிஸாரின் கட்டளையின் பிரகாரம் தற்போது அதனை வெட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காளை மாடு வயது முதிர்ந்த காரணத்தினாலேயே அதனை உரிய சட்டவிதிமுறைகளுக்கு அமைவாக ஏலத்தில் விற்பனை செய்வதற்கு யாழ்.கால் நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இந்தக் காளை மாட்டை இறைச்சிக்காக வெட்டாது தொடர்ந்து பாதுகாப்பதற்கு அக்கறை உடையோர் தனக்கு ஏற்பட்ட செலவைச் செலுத்திப் பொறுப்பேற்றுக் கொள்ளலாம் என்று அதனைக் கொள்வனவு செய்த உரிமையாளர் பொலிஸார் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் காளை மாட்டை கொள்வனவு செய்து பாதுகாப்பதற்கு விருப்பம் உடையோர் உரியவரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். அதேசமயம் குறித்த மாட்டின் உயிர்ப்பாதுகாப்புக்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன் என்றுள்ளது.

(ஒ-7)

# இதற்குத் தானா வாக்களித்தோம்?

கொழும்பு, மார்ச் 27

கொலை, கொள்ளை , பெண்கள் மீதான வன்புணர்வுகள் மற்றும் பண மோசடிகள் போன்ற கிரிமினல் குற்றச்செயல்களில் ஈடுபட்டமைக்காக கடந்த ஒரு வருட காலத்தில் மட்டும் பொது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை பொலிஸ் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பெரும்பாலானோர் நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களாவர்.

இவர்களுள் அந்தச் சபைகளின் தலைவர்கள், நகர மேயர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள் என்போரும் உள்ளடங்கி உள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட இந்த சட்ட விரோத அரசியல் வாதிகளில் அநேகர் அரசதரப்பைச் சேர்ந்தவர்களாவர்.

சட்டவிரோத மதுபான விற்பனை, போதைப் பொருள் விற்பனை என்பன போன்ற குற்றங்களில் சம்பந்தப்பட்ட இன்னும் பல அரசியல் வாதிகள் வெகுவிரைவில் பொலிஸாரின் கைது நடவடிக்கைகளுக்குள் சிக்குவர் என்றும் பொலிஸ் திணைக்களம் கோடி காட்டி உள்ளது. இத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதற்குத் தான் இவர்களுக்கு வாக்களித்தோமா என்று பொது மக்கள் தம்மைத் தாமே நொந்து கொள்கின்றனர். (ங-22)

# போலந்து மொழியிலும் தயாராகிறது பகவத் கீதை

வார்ஷா, மார்ச்27

ரஷ்யாவில் சர்ச்சைக்கு உள்ளாகி வெற்றி பெற்ற பகவத்கீதை போலந்து மொழியில் உருவாகிறது. சமஸ்கிருத வார்த்தைகள் அர்த்தப் பிறழ்வில்லாமல் அப்படியே மொழி பெயர்க்கப்படுவதே மொழி மாற்றத்தின் சிறப்பம்சமாகும். இதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார் போலந்து நாட்டை சேர்ந்த அன்னாரசின்ஸ்கா.

வாரணாசியில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கியிருந்து சமஸ்கிருத மொழியில் பி.எச்.டி பட்டம் பெற்றுள்ள இவருக்கு வயது60.

இந்திய - போலந்து கலாசாரத்துறைத் தலைவர் ஜானுஸ் கிரிஸ்ஜோவ்ஸ்கி. சுயநலமில்லாத இவரது சேவையால் வளரும் தலைமுறைக்கு ஒரு சிறந்த புத்தகம் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று போலந்தில் உள்ள இந்தியத் தூதர் மோனிகா கபலா மோஹதா தெரிவித்துள்ளார். வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளடக்கிய பகவத்கீதை 50க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துண்டித்த நாக்கை விழுங்கிய பிரிட்டன் மாணவன் மரணம்

லண்டன், மார்ச் 27

எதிர்பாராமல் துண்டிக்கப்பட்ட தன்னுடைய நாக்கை விழுங்கிய 15 வயது மாணவன் உயிரிழந்துள்ளான். இந்தப் பரிதாபச் சம்பவத்தில்பிரிட்டனைச் சேர்ந்த லூகி ஷாப்மான் என்ற 15 வயது மாணவனே உயிரிழந்தவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருதாவது:-

குறித்த மாணவர் ரக்பி விளையாட்டில் ஆர்வம் உடையவர். சம்பவ தினத்தன்று அவர் வழமை போல சக மாணவர்களுடன் ரக்பி விளையாடிக்கொண்டிருந்தார். அப்போது விளையாடிக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் லூகியின் தலை மீது விழுந்து விட்டார். திடீரென நிகழ்ந்த இந்த எதிர்பாராத விபத்தில் லூகியின் நாக்கு இரண்டு துண்டானது.

இந்த அதிர்ச்சியில் என்ன செய்வதென்று தெரியாமல் லூகி தன்னுடைய துண்டிக்கப்பட்ட நாக்கை விழுங்கி விட்டான். இதனால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிருக்குப் போராடினான். உடனடியாக விமானம் மூலம் மருத்துவமனைக்கு அவனைக் கொண்டு சென்றனர். அங்கு அவனது உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் செய்த முயற்சி பயனளிக்காததால் சிறிது நேரத்திலேயே லூகியின் உயிர் பிரிந்தது . (ங)

# அனுமதி பெறாவிட்டால் நடவடிக்கை நல்லூர் பிரதேச சபை அதிரடி முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் உரிய அனுமதிப் பத்திர பெறவிட்டால் அவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்த குமார் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2012 ஆம் ஆண்டுக்குரிய வியாபார நடவடிக்கைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பழைய, புதிய வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் பெற்றுக்கொண்டால் அதன் மூலம் இந்த சட்ட நடவடிக்கைகளை தவிர்க்க முடியும். இல்லாவிடில் ஏப்ரல் முதலாம் திகதிக்குப் பின்னர் உரிய அனுமதிப் பத்திரம் இல்லாத வியாபார நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (ங- 7)

# மரண அறிவித்தல்



திருமதி
சிவமலர் செல்வரட்ணம்

ஏழாலை மத்தி,
ஏழாலை.

ஏழாலை மத்தி, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் செல்வரட்ணம் நேற்று (26.03.2012) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரட்ணத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர் களான குலசிங்கம், இரத்தினம் மற்றும் சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. சிவகுமார் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), திருக்குமார் (UK), சந்திரலேகா (UK), மசீர்குமார் (France) ஆகியோரின் பாசமிகு தாயும், அணிமொழி, சரிதா, வினோதன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரியங்கா, கனுஜன், வினுயங்கா, வினுஜன், மேனுசா, பபிசா, கவினாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.03.2012) வியாழக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தி யோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. S.சிவகுமார்
(மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையரைத் தேடுகிறது சி.பி.ஐ

கடனட்டை மோசடியில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை இந்திய மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆரம்பித்துள்ளது.

போலியான கடனட்டைகளை உபயோகித்து சுமார் 5 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்துள்ளதாக இவர் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக 15 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இவருக்கு உதவிகளை வழங்கிய இரண்டு இந்திய நபர்களை மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளதாக 'த ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இலங்கையர் உணவ கம்ஒன்றில் உபயோகிக்கப்படும் கடனட்டைகளின் பிரதிகளைப் பெற்று போலிக் கடனட்டைகளைத் தயாரித்து அதனூடாக பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடனட்டைகளின் பிரதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக குறித்த நபர், கைது செய்யப்பட்டுள்ள இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளதாக மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (வ)

## ஆலயம் புனரமைப்பு

காரைநகர் புகலி சிவ சுப்பிரமணிய சுவாமி ஆலய புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தை அடுத்து புனரமைப்புப் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

ஆலயப் புனரமைப்பை அடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி மகா கும்பாபிஷேகம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (வ-250)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் வே.சிவநேசனின் காரைநகர் பாடசாலைகளின் ஒரு கண்ணோட்டமான 'தரிசனம்' இறுவட்டு வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது தீவக வலய கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் இறுவட்டை வெளிட்டு வைக்க காரைநகர் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு பெற்றுக் கொள்கிறார். (வ-250)

## காரைநகர் ஆலயங்களில் திருட்டுகள் அதிகரிப்பு

காரைநகர், மார்ச் 27

காரைநகரில் உள்ள ஆலயங்களில் திருட்டுகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன. நேற்று முன்தினம் காரைநகர் களபூமி தன்னைப் பிள்ளையார் ஆலயத்தில் பட்டப் பகலில் எழுந்தருளி விநாயகர் விக்கிரகம் களவாடப் பட்டுள்ளது.

அன்றைய தினம் வழமை போல் காலைப் பூசை இடம் பெற்றதாகவும் மாலை பூசைக்காக பூசகர் ஆலயத்துக்குச் சென்றபோது ஐம்பொன்னிலான எழுந்தருளி விக்கிரகம் காணப் படவில்லை. அதிர்ச்சியுற்ற பூசகர் ஆலய நிர்வாகத்துக்கு அறிவித்தார். அதை அடுத்து அவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் காரைநகர் நீலிப்பந்தனை அம்மன் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் சூறையாடப்பட்டுள்ளதுடன் வாகன சாலைக்குள் புகுந்த திருடர்கள் அங்குள்ள குதிரை, காராம்பசு என்பவற்றின் தலைப் பகுதியையும் உடைத்து திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த மாதம் காரைநகர் பலகாடு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அம்பாளின் எழுந்தருளி விக்கிரகம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-250)

## சமய சந்நிதிகளில்

காரைநகர், மார்ச் 27

காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்குச் சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்ச தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் 6 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்குத் திருக் கல்யாண திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

திருவிழாக் காலங்களில் தினமும் யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவையும் மாணிக்க வாசகர் மடலாயம், அறப்பணி நிலையம் என்பவற்றில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (வ-250)

* * *

பருத்தித்துறை கற்கோவளம் பரந்தாவடி ஐயனார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை பங்குனி உத்தர தினத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுறும். கோயில் பிரதம குரு சிவஸ்ரீஎஸ்.குகானந்தசர்மா இந்த உற்சவத்தை நடத்தி வைப்பார். (வ-8)

## மெய்வன்மைப் போட்டி

துறையூர் ஐயனார் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஐயனார் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலய முன்பள்ளி அபிவிருத்திப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார். (வ)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம். பிள்ளைகள் உங்களின் சொல்படி நடந்து பெருமைப்பட வைப்பர். உறவினர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். வருமானத்தை அதிகரிக்கும் வழிகளில் நாட்டம் செல்லும். எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பணிபுரிவோர் சக ஊழியர்கள் பாராட்டைப் பெறுவர்..

**இடபம்:** ஆடம்பரச் செலவுகள் செய்வீர்கள். மற்றவர்களுக்காக எடுத்த முயற்சி ஒன்றில் பிரச்சினைகளை, தடைகளைச் சந்திக்கலாம். பிறரை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். ஒருவர் உங்களிடம் தங்களின் பிரச்சினைகளைச் சொல்லி யோசனை கேட்கலாம்.

**மிதுனம்:** உதிரி வருமானங்களைப் பெறலாம். மனதுக்கு உற்சாகம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். நண்பர்களுக்கு தெரியாமல், அவர்களின் ரகசியம் ஒன்றை அறிந்து கொள்வீர்கள். பல நாள்களாக நிறுத்தி வைத்த வேலை ஒன்றைச் செய்து முடிப்பீர்கள். சிலர் உங்களை விமர்சனம் செய்தாலும், அதை அறிவுரையாக ஏற்றுக் கொள்வீர்கள். சகோதர பாசம் மேலிடும்.

**கடகம்:** அயலார் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். தவறு என்று தெரிந்தும் சில காரியங்களைச் துணிச்சலாகச் செய்வீர்கள். பெண்கள், கணவர் மற்றும் குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். தொல்லையாக நினைத்து செய்த வேலை ஒன்றில், கணிசமான ஆதாயம் கிடைக்கலாம். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

**சிங்கம்:** புதியவர்கள் சிலர் உங்களைத் தேடி வந்து யோசனை கேட்கலாம். உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து உங்களின் வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். வாகன பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். சில விஷயங்கள் குறித்து பெரிய அளவில் மனக்கோட்டை கட்டி, அது நடக்காமல் போகலாம். சிலருக்காக வெளியிடங்களில் காத்திருக்கலாம்.

**கன்னி:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று நடக்காமல் போகலாம். கண்டிப்பாக பேசுவதன் மூலம் உறவினர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். சில வேலைகளை தவறாகச் செய்வதால், மீண்டும் செய்ய நேரிடலாம்.

**நாளை**

பங்குனி 15 புதன்கிழமை 28.03.2012
திதி: ஷஷ்டி முழுவதும்
நட்சத்திரம்: ரோகினி பி.இ. 12.53 வரை
சுபநேரம்: 04.43-06.13 வரை,
ராகு காலம்: 12.13 - 01.43வரை

**துலாம்:** உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலர் கேட்காமலேயே அவர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். நடக்குமோ, நடக்காதோ என்று நினைத்த காரியம் ஒன்று நல்ல விதமாக நடந்து விடலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கச் செல்லும் சிலருடன் நீங்களும் துணைக்குச் செல்லலாம்.

**விருச்சிகம்:** குறுக்கு வழி சிந்தனைகளை விரட்டி, எதிலும் நேர்மையாக நடக்க நினைப்பீர்கள். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். உறவினர் ஒருவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை எப்படியாவது வாங்கி விட நினைப்பீர்கள்.

**தனுசு:** சில வேலைகளைச் செய்து விட்டு, அதில் திருப்தி இல்லாத சூழ்நிலை காணப் படும். அண்டை அயலாரிடம் பழங்கதைகள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். பண விடயங்களில் பிறரை நம்புவதை தவிர்க்கவும். ஏதோ ஒரு காரியமாக வெளியிடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகும். பெண்கள் கணவரின் அன்பைப் பெறுவர்.

**மகரம்:** மாமன், மைத்துனர்கள் உங்களின் முயற்சிகளுக்கு துணையாக இருப்பர். அவசரச் செலவுகள் நெருக்குவதால், கடன் மிகுதி ஒன்றை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். அடுத்தவர்கள் விவகாரங்களில் நீங்களாக தலையிடுவதைத் தவிர்க்கவும். திட்டமிட்ட வேலை ஒன்றில் மாற்றங்களைச் செய்யலாம்.

**கும்பம்:** சூழ்நிலைக்குத் தகுந்த வகையில் பேசி சிலரிடம் காரியம் சாதிப்பீர்கள். உறவினர்கள் தொடர்பான வேலையாக அவர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பல மணி நேரமாகும் என்று நினைத்த காரியம் ஒன்று, சுலபமாக முடிந்து விடலாம். யாரையும் விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மீனம்:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்து விட்டு, மற்றொரு வகையில் தாராளமாக செலவு செய்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். பெண்கள் கடும் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் ஏற்படலாம். சில பொருள்களை வாங்க திட்டமிட்டு [illegible] நேரத்தில், அதில் மாற்றங்களை செய்யலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | 6 | 3 | |
| 1 | | 8 | | | | | | 4 |
| 2 | 6 | | 1 | 9 | | 7 | | 8 |
| 3 | | | | | 5 | | | 6 |
| | 5 | | 4 | 8 | 9 | | 7 | |
| 7 | | | 3 | | | | | 5 |
| 8 | | 7 | | 3 | 6 | | 1 | 9 |
| 5 | | | | | | 2 | | 3 |
| | 3 | 9 | | | 2 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 8 | 4 | 6 | 2 | 9 | 7 | 1 |
| 2 | 1 | 9 | 5 | 7 | 8 | 6 | 3 | 4 |
| 4 | 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 5 | 2 |
| 6 | 7 | 5 | 8 | 2 | 4 | 3 | 1 | 9 |
| 9 | 2 | 4 | 7 | 3 | 1 | 5 | 8 | 6 |
| 1 | 8 | 3 | 6 | 5 | 9 | 2 | 4 | 7 |
| 5 | 9 | 2 | 3 | 1 | 7 | 4 | 6 | 8 |
| 7 | 4 | 6 | 9 | 8 | 5 | 1 | 2 | 3 |
| 8 | 3 | 1 | 2 | 4 | 6 | 7 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்பணத்தை அதிகரிக்குக

### தொழில்நுட்பவியலாளர் சம்மேளனம் கோரிக்கை

**எதிர்வரும் தமிழ், சிங்கள புது வருடத்தை முன்னிட்டு முற்பணத்தை 10ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.**

திருமலை, மார்ச் 27

அரச ஊழியர்களுக்கு பண்டிகைக் கால முற்பணமாக வழங்கப்படும் தொகையினை 10ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு அரச சேவை தொழில் நுட்பவியலாளர் சம்மேளனம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

2008 ஆம் ஆண்டுவரை அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணமாக 3000 ரூபா வழங்கப்பட்டுவந்தது. பல அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களும், உத்தியோகத்தர்களும், தொழில் சங்கங்களும் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு 2009ஆம் ஆண்டு முதல் இந்தத் தொகையை 5000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

நாட்டில் தற்போது வாழும் மக்களின் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதனால், பண்டிகைக்கால முற்பணத்தை எதிர்வரும் தமிழ், சிங்கள புது வருடத்தை முன்னிட்டு 10ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குமாறு சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ச-40)

## வருடம் ஒன்றுக்கு 200 பேருக்கு கிளிநொச்சியில் தொழில் பயிற்சி

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் இருநூறுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழிற்பயிற்சி நெறிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில், தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று ஜேர்மன் உதவியுடன் இளைஞர் விவகார மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபையால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் வேலை வாய்ப்புக்கள் இன்றியிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்கி அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் சுமார் 6.5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று 22ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தின் மூன்றுமாடிக் கட்டடம் 6.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு, கடந்த 23 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம் ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவைக் கொண்டது.

இந்தப் பயிற்சி நிலையத்தின் திறப்பு விழாவானது, தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபைத் தலைவரின் அழைப்பின் பேரில், இளைஞர் அலுவல்கள் திறன் அபிவிருத்தி அமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.

மூன்று வருடங்களுக்கு முன் முழுநேரப் பட்டப் படிப்பு மற்றும் குறுங்கால டிப்ளோமா கற்கைகளான பல்வேறு துறை கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. வெவ்வேறு துறைகளுக்குமான வளவாளர்களாக 50 இற்கும் மேற்பட்ட விரிவுரையாளர்கள் இங்கு கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுவர்.

இலங்கையில் தொழில் பயிற்சியை மேம்படுத்தும் செயற்பாட்டில் ஜேர்மன் நிறுவனம் வெற்றிகரமாக பணியாற்றி வருகின்றது. இது போல எதிர்காலத்திலும் புதிய பங்கழிப்புடன் ஜேர்மன் தனது தொழில் பயிற்சி நிலையங்களை விஸ்தரிக்கவுள்ளது. ஏற்கனவே மொறட்டுவவில் ஜேர்மன் ரெக் உள்ளிட்ட மூன்று தொழில் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளோம்.

இது போல கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள தொழில் பயிற்சி நிலையத்திலும் விடுதி வசதிகள் தொழில்நுட்ப வசதிகள் என்பவற்றுடன் மாணவர்களுக்குப் பல்வேறு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இவ்வாறான முயற்சிகள் முழு நாட்டுக்கும் அமைதியை ஏற்படுத்தும் என நான் நம்புகின்றேன் என ஜேர்மன் தூதுவர் ஜோன்ஸ் புலொட்னர் தெரிவித்தார். (க-6)

### பேசாலையில் இராணுவம் திடீர் சோதனை

மன்னார்,மார்ச் 27

மன்னார் பேசாலை மற்றும் தோட்டவெளி ஆகியகிராமங்களில் உள்ள வீடுகளில் நேற்று திங்கட்கிழமை காலை நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதனால் மக்கள் பெரும் பதற்றம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தோட்டவெளி ஜோசவ்வாஸ் நகரில் உள்ள வீடு ஒன்றுக்கு நேற்று திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் சென்ற நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் தள்ளாடி படைமுகாமில் இருந்து வருவதாக அறிமுகப்படுத்திக் கொண்டதோடு குறித்த வீட்டில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறி தேடுதல்களை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த வீட்டின் சகல பாகங்களிலும் சல்லடை போட்டு தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர். வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்ல முடியாதவாறும், வேறு யாரும் வீட்டிற்குள் வரமுடியாதவாறும் இராணுவத்தினர் சுற்றிநின்று தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் குறித்த வீட்டில் எவ்வித ஆயுதமும் மீட்கப்படவில்லை. இராணுவத்தினரின் செயற்பாட்டால் மன்னார் தோட்டவெளி கிராம மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை ஏற்பட்டிருந்தது.

இதேசமயம் மன்னார் பேசாலை 4 ஆம் வட்டாரத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் சென்ற நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறித்த வீட்டிலும் ஆயுதங்களும், வெடிபொருள்களும் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறியே தேடுதல் இடம்பெற்றுள்ளது.

எனினும் அங்கு எவ்வித ஆயுதங்களும் மீட்கப்படவில்லை.

இராணுவத்தினரின் இந்த திடீர் செயற்பாட்டால் மன்னார் கிராமங்களில் அச்ச நிலை ஏற்பட்டுள்ளதுடன் மக்களது இயல்பு வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(10-12)

### விழிப்போம்...



சர்வதேச காசநோய்தினம் கடந்த 26ஆம் திகதி திருகோணமலை நகரசபை பொது மண்டபத்தில் நடைபெற்றது. ''காசநோயை எம் வாழ்விலிருந்து அகற்றுவோம்'' என்ற தொனிப்பொருளில் சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மருத்துவர் எம்.தேவராஜன், திருமதி பி.கே.ஞானகுணாளன், மருத்துவர் ஈ.ஜி.ஞானகுணாளன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

சிறுமி மீது வன்புணர்வு

## கடும் நிபந்தனையுடன் சந்தேக நபருக்குப் பிணை

சாவகச்சேரி, மார்ச் 27

கொடிகாமம் பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் ஏழு வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய நபரை கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதித்தது.

கடந்த டிசெம்பர் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த நபரைக் கடந்த 12ஆம் திகதி தொடக்கம் பிணையில் செல்ல அனுமதித்தார் நீதிவான்,

சிறுமி படிக்கும் பாடசாலை உள்ள பகுதியிலோ மற்றும் அவர் குடியிருக்கும் பகுதியிலோ நடமாடக் கூடாது என்றும் கடுமையாக எச்சரித்தார். 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்தார். பிரதி சந்தேக நபர் வெள்ளிக்கிழமைகளில் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றிலும் வாரத்தில் ஒரு நாள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திலும் கையொப்பம் இடுமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபரின் நடமாட்டத்தைக் கண்காணிக்குமாறு அந்தப் பிரிவு கிராம அலுவலருக்கும் உத்தரவிடப்பட்டது. வழக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இரவு வேளையைச் சாதகமாகப் பயன்படுத்தி தன்னை இனங்காட்டாமல் குறித்த சந்தேக நபர் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியிருந்தார். எனினும் குறித்த சிறுமி அடையாள அணிவகுப்பில் சந்தேகநபரை அடையாளம் காட்டியிருந்தார். (த-9)

### முந்திச் சென்றவரை மோதியது எதிரே வந்த பஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 27

பஸ்ஸினைச் முந்திச் செல்லும்போது, எதிரே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது மற்றொரு தனியார் பஸ்.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயத்துடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொழும்புக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே இவ்வாறு மோதிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் பளையை அண்மித்து நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம் பெற்றது. சம்பவத்தில் மல்லாவியிலிருந்து மல்லாகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு பிள்ளையின் தந்தையான சுந்தரம் அருமைராசா (வயது-30) என்பவரே காயமடைந்தார். (ந-4)

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றுபட்ட சக்தியாக இணையவும்

### மட்டக்களப்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

எருவில்,மார்ச் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆதரவான நிலைப்பாட்டை காட்டியுள்ளது. இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை ஒன்றுபட்ட சக்தியாக இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு சென்ற அவர் மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இவர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் அறிவதற்கும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் அறிவதற்காகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்காக வும் [illegible] இங்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்த புலமைசார் அங்கத்தவர்களையும் உத்தியோகத்தர்களைக்கொண்ட அமைப்பினர்களையும் சந்தித்து நாங்கள் கலந்துரையாடியுள்ளோம்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களிலும் உள்ள சிவில் சமூக பிரதிநிதிகளைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் அறியவும் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் அறிவதற்கும் உள்ளோம்.

மக்களுக்கு இன்று உள்ள நிலைமையை தெளிவுபடுத்துவதும் ஜெனிவாவுக்கு பிற்பாடு எவ்வா[illegible]இடம்பெறு[illegible] தெளிவுபடுத்துவதும் மக்கள் எவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை அவதானிக்கிறார்கள் என்பது தொடர்பில் அறிந்து அதனூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சரியான பாதையில் கொண்டு செல்வதே இந்த வருகையின் நோக்கமாகும்.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவால் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றுவதாகவிருந்தால் அதனை நிறைவேற்றுவதற்குரிய பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆதரவான நிலைப்பாட்டைக் காட்டி நிற்கின்றது.

இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்தி கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கில் சகல பகுதிகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண கிளைகள், தொகுதிக் கிளைகள் அமைக்கப்பட்டு அதனூடாக மக்களை உள்வாங்கி கட்சியைப் பலப்படுத்தவுள்ளோம்.- என்றார்.

(ச-31-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்தாடியது பல்கலை அணி

## சம்பியன் கிண்ணமும் அதன் வசமானது

**முதல்பாதி ஆட்டத்தில் தடுமாறிய போதும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் நகுலேஸ் அடித்த கோல் பல்கலை அணிக்கு பலம் சேர்த்து ஊரெழு றோயலை 2:0 என்ற ரீதியில் வீழ்த்தியது.**

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அரியாலை அபிவிருத்திச் சங்க லண்டன் கிளையின் ஆதரவுடன், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிறுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் தத்தமது அணிகளின் வெற்றிக்காக கோல்களைப் பெறவேண்டும் என்ற உத்வேகத்துடன் எதிர் அணியினருடைய எல்லைப் பரப்பினுள் மாறிமாறி, நுழைந்த வண்ணம் இருந்தனர். ஆனால் இரண்டு அணியினரும் தமக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பங்களைத் தவற விடவும் செய்தனர். இதனால் இரண்டு அணியினரும் எந்தவொரு கோலையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது, தமது வியூகங்களை மாற்றி அமைத்தனர். தமக்குக்கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றைச் சரியான முறையில் பயன்படுத்திய யாழ்.பல்கலைக்கழக அணியினர் இரண்டாம் பாதி ஆட்டத்தின் போது தமது அணிக்காக இரண்டு கோல்களை அடித்தனர்.

ஊரெழு றோயல் அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காக பலமுறை பந்தை கோல் கம்பத்துக்கு அருகாகக் கொண்டு சென்ற போதிலும் கடைசி வரை அவர்களின் முயற்சி பயனளிக்கவில்லை.

இதனால் ஆட்டத்தின் முடிவில் யாழ்.பல்கலைக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை வெற்றி கொண்டு சம்பியன் ஆனது. இறுதிப் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணி வீரன் நகுலேஸ் தெரிவு செய்யப்பட்டார்.

(ங-23)

# ஜொலித்தது ஜொனியன்ஸ் வீழ்ந்தது சென்றல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

டக்சன், சஞ்சயன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டம் கைகொடுக்க 2 இலக்குகள் வித்தியாசத்தில் யாழ்.சென்றலை வெற்றி கொண்டது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படுகின்ற, அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 50 பந்து பரிமாற்றங்களை கொண்ட 9 ஆவது கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை இடம் பெற்ற ஆட்டம் ஒன்றில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணியினர் 42 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் மயூரன் 32 ஓட்டங்களையும், அன்ரூ 24 ஓட்டங்களையும், ரஜீவ் குமார் 28 ஓட்டங்களையும், பாலேந்திரன் 27 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக அகிலன், எம்.மயூரன், விதுஷன் ,டக்சன் ஆகியோர் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

189 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்று, சென்றலை வீழ்த்தி வெற்றிக் கொடி நாட்டியது.

இதில் சஞ்சயன் 82 ஓட்டங்களையும், டக்சன் 57 ஓட்டங்களையும், மயூரன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பாக மயூரன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 5 இலக்குகளை வீழ்த்தினார். இதன்போது அவர் 'ஹட்ரிக்' சாதனையும் படைத்தார். அத்துடன் ரஜீவ் குமார் 2 இலக்குகளையும் யசிந்தன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் மாபெரும் மென்பந்துச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை கோண்டாவில் கலைவாணி சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

மாலை 4 மணி- வள்ளுவர் வி.க. எதிர் பொற்பதி வி.க.

மாலை 5 மணி - ஏ.பி வி. க. எதிர் சுப்பர் கிங் வி .க.

(ங-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம். (23)



யாழ். மட்ட வலயப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற 17 வயது பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் ஆவரங்கால் நடராஜா மகாவித்தியாலய அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# தர்மபாலா, பரக்கும் ம.வி. வெற்றி

வவுனியா, மார்ச் 27

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 15 வயது பிரிவினருக்கான போட்டியில் ஆண்கள் பிரிவில் பரக்கும் மகாவித்தியாலயமும் பெண்கள் பிரிவில் தர்மபாலா வித்தியாலயமும் சம்பியன்களாகின.

இறுதிப் போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் உடற் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் எ.எம் சுபைர் தலைமையில் இடம் பெற்றன .

முதலில் இடம் பெற்ற ஆண்களுக்கான போட்டியின் இறுதியாட்டத்தில் பரக்கும் மகாவித்தியாலமும் , ஸ்ரீசுமண மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இந்தப் போட்டியில் பரக்கும் மகாவித்தியாலயம் 2:0 என்ற அடிப்படையில் சம்பியனானது. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வவுனியா மத்திய மகாவித்தியாலயம் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தை 2:1 என்ற செற்கணக்கில் வென்று 3 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் தர்பாலா வித்தியாலயமும், இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் தர்மபாலா வித்தியாலயம் 2:0 என்ற நேர் செற்கணக்கில் வென்று வலய சம்பியனானது.

அடுத்து இடம் பெற்ற போட்டியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் 3 ஆம் இடத்தை பெற்றது. (ங-400)

# ஆண்களில் செட்டிக்குளம் பெண்களில் ஸ்ரீ சுமண

## 17 வயது கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

வவுனியா, மார்ச் 27

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப்பிரிவில் ஆண்களுக்கான போட்டியில் செட்டிக்குளம் மகாவித்தியாலயமும், பெண்கள் பிரிவில் ஸ்ரீசுமண மகாவித்தியாலயமும் வெற்றியீட்டி சம்பியனாகின.

இந்தப் போட்டிகள் அண்மையில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன .

முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் செட்டிக்குளம் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளான செட்டிக்குளம் மாகாவித்தியாலயமும்,முதலியார் குளம் வித்தியாலயமும் மோதிக் கொண்டன .

பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் வெல்லப்போகும் அணி எது என்பதை ஆரம்பத்தில் கணிக்க முடியாதிருந்தது. எனினும் போகப்போகப் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தின் கை ஓங்கத்தொடங்கியது. இறுதியில் செட்டிக்குளம் மகாவித்தியாலயம் 2:0 என்ற செற் கணக்கில் முதலிக்குளம்வித்தியாலயத்தை வென்று வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற மூன்றாம் மிடத்துக்கான போட்டியில் பரக்கும் மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஸ்ரீசுமண மகாவித்தியாலயமும், தர்மபால மகாவித்தியாலயமும் மோதின. இதில் ஸ்ரீசுமண வித்தியாலயம் 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனானது .

இந்தப் பிரிவுக்கான மூன்றாமிடத்தை செட்டிக்குளம் முதலியார் குளம் வித்தியாலயம் தனதாக்கிக் கொண்டது. (ங-400)

# கிளிநொச்சி மாவட்ட மரதனோட்டம்; சாதித்த மாணவர்கள் விவரம்

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி கடந்த 22ஆம் திகதி காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த மரதன் ஓட்டப் போட்டியில் சுமார் 100 ஆண், பெண் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக முன்றலில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் போட்டியை ஆரம்பித்து வைத்தார். போட்டியாளர்கள் வலயக்கல்வி அலுவலக முன்றலில் இருந்து ஏ-9 வீதி ஊடாக பரந்தன் சந்தியைச் சென்றடைந்து, பரந்தன் பூநகரி வீதியூடாக பொறிக்கடவைச் சந்தியை அடைந்து, அதனூடாக கூழாவடிச் சந்தியை அடைந்து, உருத்திரபுர வீதியூடாக கரடிப் போக்கு சந்தியை வந்தடைந்து மீண்டும் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சென்றடைந்தனர். இந்தப் போட்டிக்கான வீதி ஒழுங்கமைப்பினை பொலிஸார் மேற்கொண்டதுடன், கிளிநொச்சி வைத்தியசாலை அம்புலன்ஸ் பிரிவினரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்களும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போட்டியில்முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றவுள்ளனர். அவர்களது விவரம் வருமாறு:-

**ஆண்கள்**

1ஆம் இடம்- அருமைநாதன் அனோஜன்(கிளி/செல்வியாத்வு அ.த.க. பாடசாலை).

2ஆம் இடம்- தேவராசா அன்ரனி டெல்மன் (கிளிநொச்சிமத்திய கல்லூரி).

3ஆம் இடம்- மகேந்திரராசா சுஜிறேகன் (பிரமந்தனாறு ம.வி.)

4ஆம் இடம்-தேவராசா டிலக்சன் (புன்னைநீராவி அ.த.க.பாடசாலை).

5ஆம் இடம்- மாணிக்கம் பிரசாந்தகுமார் (பிரமந்தனாறு ம.வி.).

6ஆம் இடம்- அன்ரன் ஜெயபாலன் துஷ்யந்தன் (கோணாவில் அ.த.க.பாடசாலை).

7ஆம் இடம்- பஞ்சலிங்கம் பிரசாந்தன் (பூநகரி நல்லூர் ம.வி.).

8ஆம் இடம்- வைகுந்தநாதன் நிறோஜன் (அக்கராயன் ம.வி).

9ஆம் இடம்- அந்தோனிசாமி கிலறனேஸ் (அக்கராயன் ம.வி.).

10ஆம் இடம்- வடிவேல் அலெக்சன் (திருவையாறுமவி).

**பெண்கள்**

1ஆம் இடம்- முருகையா ஜெயந்தினி (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை).

2ஆம் இடம்- குமரேசன் சுலக்சனா (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை).

3ஆம் இடம்- சந்திரசேகரம் கிருஷாந்தி (முக்கொம்பன் அ.த.க. பாடசாலை).

4ஆம் இடம்-உதயகுமார் லோஜினி (சிவநகர் அ.த.க. பாடசாலை).

5ஆம் இடம்- நாகேந்திரம் திருஷா (இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை).

6ஆம் இடம்- விநாயகமூர்த்தி திரிஜா (அக்கராயன் ம.வி).

7ஆம் இடம்- பாலேந்திரம் மேகலா (பரந்தன் இந்தும.வி).

8ஆம் இடம்- சந்திரபிரபாகரன் பிறின்சி (பரந்தன் இந்து ம.வி.).

9ஆம் இடம்- லிங்கராசா நிறோஜா (வேரவில் இந்தும.வி).

10ஆம் இடம்- வசந்தகுமார் அபிநயா( மாசார் அ.த.க.பாடசாலை). (ங-405)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போராடும் மஹேல





காலி, மார்ச் 27

இலங்கிலாந்தின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் ஒவ்வொருவராக வீழ்ந்து போக தனித்து நின்று இலங்கையை கரைசேர்க்க போராடி வருகிறார் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நேற்றுக்காலை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆனால் அந்த முடிவு தவறானது என்பது இலங்கையின் துடுப்பாட்ட வரிசை மளமளவென சரிந்த போதே தெரிந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திரிமன்னே மூன்று ஓட்டங்களோடு களத் தைவிட்டு அகன்ற போது உள்நுழைந்தார் சங்ககார. எல்லோரது எதிர்பார்ப்பையும் தவிடு பொடியாக்கிவிட்டு முதல் பந்திலேயே இலக்குக் காப்பாளரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அதற்கு அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் டில்ஷானும் நடையைக் கட்ட இலங்கை அணியின் நிலை பரிதாபமாகியது. 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தவித்த இலங்கை அணிக்கு அணித் தலைவர் மஹேலவும், சமரவீரவும் உயிரூட்ட முனைந்தனர். எனினும் 32 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் சமரவீர வெளி யேறினார். தொடர்ந்து களமிறங்கினார் இளைய நம்பிக்கை நட்சத்திரம் சந்திமால். அதி ரடியாக ஆடிய அவர் இரண்டு சிக்ஸர்களை மைதானத்தை விட்டு வெளியே அனுப்ப, ரசிகர்களிடையே ஆரவார ஒலி எழத்தொடங்கியது. எனினும் அவரது அதிரடி பட் டேலின் பந்துக்கு பணிந்தது.

அவரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உள்ளே வந்த இலக்குக் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தன சிறிது நேரம் தாக்குப் பிடிக்க மறுமுனையில் மஹேல அதிரடி வேட்டையை ஆரம்பித்தார். அவர் டெஸ்ட் போட்டியில் தன்னுடைய 29 ஆவது சதத்தை பதிவு செய்தார். 23 ஓட்டங்களுடன் பிரசன்ன ஜெயவர்த்தன ஆட்டமிழந்த பின்னரும் மஹேல ஓயவில்லை. ஒரு கட்டத்தில் இலங்கை அணி 150 ஓட்டங்களையே தாண்டுவது சந்தேகம் என்ற நிலை இருந்த போதும், தனி ஒரு வீரராகப் போராடிய மஹேல இலங்கை அணி பலமான ஓட்ட எண்ணிக்கையை பெறுவதற்கு வழிகோலினார்.

இலங்கைப் பின்வரிசை வீரர்கள் ஒவ்வொருவராகச் சொற்ப ரன்களுடன் வெளியேறினர். நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இலங்கை அணி 289 ஓட்டங்களைப் பெற்று, 8 இலக்குகளை இழந்திருந்தது. மஹேல 168 ஓட்டங்களுடனும், வெலஹெதர 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். பந்து வீச்சில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன் 3 இலக்குகளையும், பட்டேல், புறோட் ஆகியோர் முறையே 2, 1 இலக்குகளையும் வீழ்த்தினர். இங்கிலாந்தின் சுழல் மன்னர்களான சுவானும், பனேஸரும் ஓட்டங்களை வாரி வழங்கிய போதும் இலக்கு எதனையும் கைப்பற்ற முடியவில்லை.

இன்று தொடரவுள்ள இண்டாம் நாள் ஆட்டத்தில் மஹேலவின் ஆவேசம் தொடருமா அல்லது இங்கிலாந்தின் துடுப்புகள் பதிலடி கொடுக்குமா என்பதே ரசிகர்கள் முன்னுள்ள கேள்வி. (ங)

### இலங்கை எதிர் இங்கிலாந்து

காலி மைதானம்

இலங்கை 289/8 (90)

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| திரிமன்னே | c சுவான் b அன்டர்சன் | 3 | 12 | 0 | 0 |
| டில்ஷான் | c ஸ்ட்ரோஸ் b புறோட் | 11 | 08 | 2 | 0 |
| சங்ககார | c பிரையர் b அன்டர்சன் | 0 | 01 | 0 | 0 |
| மஹேல | (ஆட்டமிழக்காமல்) | 168 | 290 | 20 | 3 |
| சமரவீர | ரன் அவுட் | 20 | 82 | 3 | 0 |
| சந்திமால் | c இயன்பெல் b பட்டேல் | 27 | 48 | 2 | 2 |
| பிரசன்ன ஜெயவர்த்தன | lbw b அன்டர்சன் | 23 | 40 | 3 | 0 |
| ரந்தீவ் | ரன் அவுட் | 12 | 15 | 1 | 0 |
| ஹேரத் | lbw b பட்டேல் | 05 | 30 | 0 | 0 |
| வெலஹெதர | (ஆட்டமிழக்காமல்) | 10 | 18 | 2 | 0 |

இலக்கு இழப்பு: 1-11, 2-11, 3-15, 4-67, 5-128, 6-170 7-191, 8-253


உதிரிகள் 10

மொத்த ஓட்டங்கள் 289

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அன்டர்சன் | 17 | 5 | 56 | 3 |
| புறோட் | 18 | 1 | 66 | 1 |
| பனேஸர் | 23 | 11 | 42 | 0 |
| சுவான் | 23 | 3 | 92 | 0 |
| பட்டேல் | 9 | 1 | 27 | 2 |

Sri Lanka Cricket

# வென்றது ஆஸி. தொடர் சமநிலை




மேற்கிந்தியத் தீவுகளுக் கான ஆஸ்திரேலியச் சுற்றுலா வின் ஐந்தாவதும் இறுதியு மான ஒரு நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் பின்வரிசைத் துடுப் பாட்ட வீரர்களின் அதிரடி ஆட்டத்தை முறியடித்து ஆஸ் ரேலிய அணி 30 ஓட்டங்க ளால் வெற்றிபெற்றுள்ளது. இதன் காரணமாக 5 ஆட்டங் கள் கொண்ட தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

சென் லூசியாவில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்தி ரேலிய அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஆடியது. ஆரம் பத்துடுப்பாட்ட வீரர்களான வோணர், வொட்சன் ஜோடி 19.5 பந்து பரிமாற்றங்களில் 118 ஓட்டங்களையும், அதன் பின்னர் வொட்சன், போறஸ்ட் ஜோடி பின்னர் 30.1 பந்து பரிமாற்றங்கள் வரை 161 ஓட் டங்களாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தி யது. எனினும் அதன் பின்னர் அந்த ஆரம்பத்தைச் சிறப்பா கப் பயன்படுத்தாத ஆஸ்தி ரேலிய அணி 50 பந்து பரி மாற்றங்கள் நிறைவில் 9 இலக் குகளை இழந்து 281 ஓட் டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆஸ் திரேலிய அணி சார்பாக. வோணர் 69 ஓட்டங்களையும், வொட்சன் 66 ஓட்டங்களை யும், போறஸ்ட் 53 ஓட்டங் களையும் மத்தியூ வேட் இறுதிநேரத்தில் 17 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்ற னர். பந்துவீச்சில் மேற்கிந்தி யத் தீவுகள் அணி சார்பாக ருசல் 4 இலக்குகளையும், றோச் 3 இலக்குகளையும், நரைன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

282 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பம் முதல் இலக்குகளை இழந்து வெகு வாகத் தடுமாறியது. 31.1 பந்து பரிமாற்றங்களின் நிறை வில் 7 இலக்குகளை இழந்து 118 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தடுமாறிய மேற்கிந் தியத் தீவுகள் அணியை ருசல், சமி ஜோடி போராடக்கூடிய அள வுக்கு எடுத்துச் சென்றது. 41 ஆவது பந்து பரிமாற்றத்தின் நிறைவில் ருசல் 8 ஆவது இலக்காக 219 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்த போதிலும், அணித்தலைவர் சமி தொடர்ந்து போராடினார். எனினும் இறுதி இலக்காக மேற்கிந்தியத் தீவு கள் 251 ஓட்டங்களைப் பெற் றிருந்தபோது ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் சமி 50 பந்துகளில் 6 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 84 ஓட்டங்களையும், பரத் 74 பந்துகளில் 42 ஓட்டங்களை யும், ருசல் 33 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக வீ 3 இலக்கு களையும், வொட்சன், டொஹேர்ட்டி, கிளின்ட் மக்காய் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப் பற்றினர்.

ஆட்டநாயகனாக மேற்கிந் தியத் தீவுகளின் அணித்தலை வர் டெரன் சமியும், தொடர் நாயகனாக மேற்கிந்தியத் தீவு களின் பொலாட்டும் தெரிவா கினர். (5)

# தென்னாபிரிக்கா முன்னிலையில்


தென்னாபிரிக்கா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக் கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட் டம் சமநிலையை நோக்கி நகருகின்றது. தென்னா பிரிக்க அணி பெற்றுக் கொண்ட 474 ஓட்டங்க ளுக்கு பதிலளித்த நியூஸி லாந்து அணி 275 ஓட்டங் களை மாத்திரமே பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸை நேற்று ஆரம்பித்த தென்னா பிரிக்க அணி ஆட்ட நேர நிறைவில் இலக்கு நஷ்ட மின்றி 75 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

நியூஸிலாந்துக்குச் சுற் றுப் பயணம் மேற்கொண்டு தென்னாபிரிக்க அணி அங்கு விளையாடி வருகின்றது. முதலாவது ஆட்டம் சமநிலை யிலும் இரண்டாவது டெஸ்டை தென்னாபிரிக்க அணி வெற்றி கொண்ட நிலை யில் மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸி லாந்து அணி தென்னாபிரிக்க அணியை துடுப்பெடுத்தா டுமாறு பணித்தது. அதன டிப்படையில் துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணி 474 ஓட்டங்களுக்கு 9 இலக்குகளை இழந்த நிலை யில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. தென்னா பிரிக்கா சார்பில் பீற்றர்சன் 156 ஓட்டங்களையும், டுமினி 103 ஓட்டங்களையும் பெற் றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் விலெட்ஸி 6 இலக் குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு தனது முத லாவது இன்னிங்ஸை நேற்று முன்தினம் ஆரம்பித்த நியூ ஸிலாந்து அணி ஆட்ட நேர நிறைவில் 65 ஓட்டங்க ளுக்கு இலக்கு நஷ்டமின்றி சிறப்பான ஆரம்பத்துடன் களத்திலிருந்தது. இந்த நிலையில் நேற்றைய நான் காவது நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியின் பிளண்டரின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 275 ஓட்டங்களுக்குள் சகல இலக் குகளையும் பறிகொடுத் தது. நியூஸிலாந்து சார்பில், குப்தில் 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் பிளண்டர் 6 இலக்கு களைக் கைப்பற்றினார்.

199 ஓட்டங்கள் முன்னிலை யுடன் இரண்டாவது இன் னிங்ஸை ஆரம்பித்த தென் னாபிரிக்க அணி பீற்றர்ஸன், ஸ்மித் ஜோடி நேற்றைய நாள் நிறைவு வரையில் 75 ஓட்டங்களைப் பெற்றிருந் தது. இதன் மூலம் 274 ஓட் டங்களால் தென்னாபிரிக்க அணி முன்னிலையில் உள் ளது. இன்று ஆட்டத்தின் கடைசி நாளாகும். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளியுடன் என்னை ஒப்பிட வேண்டாம்

ஒப்பீடுகளைத் தான் விரும்புவதில்லை எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், 800 (டெஸ்ட்) இலக்குகளைக் கைப்பற்றுவதென்பது மிக அற்புதமான சாதனை எனத் தான் கருதுவதாகத் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் சாதனைகளைப் புரிந்த அனைவரும் மிகப்பெரிய தியாகங்களை மேற்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், ஏராளமான ஒழுக்கப் பண்புகளும், அர்ப்பணிப்போடு தங்கள் நாட்டுக்குச் சேவை செய்துள்ளார்கள் எனவும், அவர்கள் அனைவரையும் தான் மதிப்பதாகவும் தெரிவித்தார்.



நேற்றையதினம் இடம்பெற்ற சந்திப்பில் அவரது ஓய்வு பற்றிக் கேட்கப்பட்டதற்கு, அது தொடர்பாக தான் ஏற்கனவே விளங்கப்படுத்தியிருப்பதாக சச்சின் தெரிவித்தார். சிறந்த திறனில் இருக்கும் போது ஓய்வுபெறுவது சுயநலமானது எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், சிறந்த திறனில் இருக்கும் போது அதைப்பயன்படுத்தி நாட் டுக்காகச் சேவை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

தான் ஓய்வுபெற வேண்டுமென்பதைத் தானே தீர் மானிக்க வேண்டும் எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல் கர், தனது விமர்சகர்கள் குறித்துக் கவலைப்படுவது கிடை யாது எனத் தெரிவித்தார். தன்னைப் பற்றியும், தனது உடலைப் பற்றியும் சரியாக சிறப்பாக அறிந்தவர் தானே எனத் தெரிவித்த சச்சின், மற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் தொடர்பாக செவிசாய்ப்பதில்லை எனத் தெரிவித்தார்.

தற்போதைக்கு ஓய்வுபெறும் திட்டம் கிடையாது எனத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கர், தான் ஓய்வுபெற வேண்டும் எனத் தனது மனம் சொல்கின்ற வேளையில் தான் ஓய்வுபெறுவேன் எனத் தெரிவித்தார்.

2007 ஆம் ஆண்டின் போது 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தில் தனது பங்குபற்றுகை தொடர்பாகக் கேட்கப்பட்டதற்கு அதற்கு பதிலளிப்பதற்கு கடினமாக இருந்ததாகத் தெரிவித்த சச்சின், தற்போது 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணம் தொடர்பாகக் கேட்கப்படும் போதும் அதே கருத்துக் காணப்படுவதாகத் தெரிவித்தார். தான் தொடர்ந்தும் முயற்சி செய்துகொண்டிருப்பேன் எனத் தெரிவித்த அவர், மிகுதி இறைவனின் கையில் எனத் தெரி வித்தார்.

100 சதங்கள் என்ற சாதனை முறியடிக்கப்படுமா எனக் கேட்கப்பட்டமைக்கு, சாதனைகள் அனைத்தும் முறி யடிக்கப்படுவதற்கே படைக்கப்படுபவை எனத் தெரிவித்த அவர், இன்னுமொரு வீரர் தனது சாதனையை முறி யடிப்பார் எனத் தெரிவித்ததோடு, அவ்வாறு முறியடிக்கும் வீரர் ஓர் இந்திய வீரராக இருக்க வேண்டுமென விரும்பு வதாகத் தெரிவித்தார். (5)

# மூத்தவர்களுக்கு தெரியும் எனது பலம்

என்னுடைய பலம் என்ன என்பது குறித்து இந்திய அணியில் உள்ள மூத்த வீரர்களுக்கு நன்றாகவே தெரியும் என்று சுரேஷ் ரெய்னா கூறியுள்ளார்.

இந்திய அணியின் இளம் வீரர் சுரேஷ் ரெய்னா (வயது 25). இவர் சமீபத்தில் இங்கிலாந்து, ஆஸ்திரேலிய மண்ணில் நடந்த தொடர்களில் பெரிய அளவில் சாதிக்கவில்லை. குறிப்பாக 'ஷோட் பிட்ச்' பந்துகளில் திணறுகிறார். இதனால் நிறைய விமர்சனங்களை எதிர் கொண்டார்.

இதுகுறித்து ரெய்னா கூறியதாவது:-

பொதுவாகப் போட்டியில் சிறப்பாக விளையாடாத நேரங்களில் நிறைய விமர்சனங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் இது குறித்து அதிகம் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் அணியில் உள்ள மூத்த வீரர்களுக்கு எனது பலம் நன்கு தெரியும். என்னை விமர்சிப்பதற்கு முன் எத்தகைய சூழ்நிலையில் களமிறங்குகிறேன் என்பதை பார்க்க வேண்டும். நிறைய போட்டியில் 38 - 40 பந்து பரிமாற்றங்களின் போது தான் களமிறங்கி உள்ளேன்.

இந்த பந்து பரிமாற்றங்களின் போது ஓட்ட வேகத்தைக் கருத்தில் கொண்டு அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதனால் அதிரடியாக ஓட்டங்கள் சேர்க்க முயற்சிக்கும் போது, சில நேரங்களில் விரைவில் இலக்கை பறிகொடுக்க நேரிடும்.

தற்போது எனது கவனம் முழுவதும் ஐந்தாவது ஐ.பி.எல் தொடர் மீது உள்ளது.

இதன் பின்னர் ஆஸ்திரேலியா சென்று அங்கு 'ஷோட் பிட்ச்' பந்துகளை எப்படிக் கையாளுவது என்று குறித்து சிறப்புப் பயிற்சி மேற் கொள்ள உள்ளேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் சில உள்ளூர் ஆட்டங்களிலும் பங்கேற்க முடிவு செய்துள்ளேன்.

கடந்தாண்டு நடந்த உலக கிண்ணத் தொடரில் 6, 7 ஆவது வீரராக களமிறங்கிய போது ஆஸ்திரேலியாவுக்கு எதிரான காலிறுதி மற்றும் பாகிஸ்தானுக்கு எதிரான அரையிறுதியின் போது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். சமீபத்திய சில ஆட்டங்களில் அணிக்கு நல்ல ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்துள்ளேன். இது எதிர்காலத்திலும் தொடரும் என்று நம்புகிறேன்.

எனது திறமையை நிரூபித்து விரைவில் டெஸ்ட் அணியில் நிரந்தர இடம்பிடிப்பேன். ஐ.பி.எல் தொடரில் எங்கள் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சிறப் பாக உள்ளது. சிறந்த அனுபவ வீரர்களுடன், திறமையான இளம் வீரர்கள் அதிகம் இருப்பதால் மூன்றாவது முறையாக சென்னை அணி கிண்ணத்தை வெல்லும் என்று நம்புகிறேன் என்று தெரிவித்தார். (5)




Vivekananda Academy

திருமணம் முடித்து மற்றும் Sponsor மூலம் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான தூதரக பரீட்சைகளுக்கு தயார்படுத்தும்

ஜேர்மன் - Deutsch (டொச்)

நெதர்லாந்து - Dutch (டச்)

புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. மற்றும் French, Italian புதிய வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

Vivekananda Academy

No - 221/1 Power House Road, Jaffna. Tel - 021-2220393, 021- 321 - 6928


## மரண அறிவித்தல்கள்



### பொன்னம்பலம் சிவமணி

(சமாதான நீதிவான்)

(வர்த்தகர், மாணிக்கம் பிறதேர்ஸ், மணி மார்க்கெட், கொழும்பு)

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவமணி நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சந்திரவதனாவின் (நிர்மலா) பாசமிகு கணவரும், விவேக்காவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் கனகம்மா தம்பதியரின் மருமகனும், மாசிலாமணி (கனடா, முன்னாள் தலைவர், ப.நோ.கூ. சங்கம் வேலணை), நடனசிகாமணி (வேலணை), நடராஜமணி (காலி), புஸ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினியார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காஞ்சனமாலா (கனடா), சிவகலை (வெள்ளவத்தை), ஞானசொரூபி, சுப்பிரமணியம் (கனடா), குகாநந்தி (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), விஜயன் (கனடா), மணி, மலர், தவநாயகி, உதயன், மோகன், உசா, கண்ணன், ஆனந்தி, பாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சந்திரவதனா (மனைவி - நிர்மலா)

"கனகாபுரி",
6ஆம் வட்டாரம், மண்டைதீவு.

### வேலுப்பிள்ளை சோமசுந்தரம்



புளியங்கூடல், ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 127, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சோமசுந்தரம் நேற்று (26.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குகநேசன் (Sri Rangan Trading Company, Colombo-11), ஜெகதீஸ்வரன் (யாழ்ப்பாணம்), மஞ்சுளா (கொழும்பு), ராதிகா (தாவடி), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலைமதி, சுமதி, சிறிதரன், மகேந்திரன், ஸ்ரீபிரபா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தவறிவிட்டது

நுணாவில் சந்திக்கும் உரும்பிராய்க்கு மிடையில் பெறுமதி மிக்க நகைப் பார்சல் ஒன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

சன்மானம் வழங்கப்படும்.

எம். விஜீபன்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தொ.பே. 0775866709, 0772091023.


புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி வீதி, யாழ்ப்பாணம்.

O/L DAY Class

ஆரம்பம்: 02.04.2012 திங்கள் 8.00 மணி

அனுமதியினை இன்று முதல் பதிவு செய்யலாம்

SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி

இலக்கணம், புத்தகம், CD எதுவுமின்றி மாணவர்களை ஒவ்வொரு வகுப்பிலும் 2 மணிநேர உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆங்கிலத்தை தெட்டத்தெளிவாகப் பேசப் பயிற்சியளிக்கும் எமது நிறுவனத்தின் புதிய பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

31.03.2012 - சனிக்கிழமை

சனி, ஞாயிறு பிரிவு (ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்)

பிரிவு I 08 - 10 பிரிவு III 01 - 03

பிரிவு II 10 - 12 பிரிவு IV 03 - 05

3 மாத பயிற்சிக் கட்டணம் 3000/-

SAAMSON ENGLISH 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். தொ.பே. 0776214567

யாழ். நகரில் O/L DAY CLASS இங்கு மட்டுமே

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS (8.30 - 2.00)

பிரிவு - I ஆரம்பம் : 30.03.2012 Fri 8.30 Am

★ இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
★ தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி
★ தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்.
★ முதல் பிரிவுக்கு 75 மாணவர் மட்டுமே
★ பிரிவு II மிக விரைவில்

நிர்வாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.